107

T.N.L.A.D
11-4-2000
V. 95 NO. 2

©

D
V211,31 P00
P0 . 95.2.
2.3.003

வெளியீடு 7-11-2000 Issued 7-11-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 11, 2000 – தொகுதி 95 – எண் 2

**Tuesday the 11th April, 2000 – Volume 95 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

விலை ரூ. *3.00*] **[Price Rs. 3.00**

11-4-2000

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கங்கள் |
| **1. வினாக்கள் — விடைகள்—** | | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | .. | 319-362 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | | |
| தமிழக மீனவர்களை பாகிஸ்தான் சிறையிலிருந்து மீட்டல் | .. | 363-375 |
| டாக்டர் தே. குமாரதாஸ் | .. | 363-365 |
| திரு. இரா. பெர்னார்டு | .. | 365-367 |
| திரு. டி. மணி | .. | 367 |
| திரு. சி. வேலாயுதன் | .. | 368-369 |
| மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் | | 370-375 |
| **3. அறிவிப்பு—** | | |
| தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரிய மேலாண்மைக் குழுவிற்கு மூன்று உறுப்பினர்கள் தேர்வு— | .. | 375 |
| **4. கவன ஈர்ப்பு—** | | |
| திருப்பூர், நல்லூர் பேரூராட்சி, சுப்பிரமணியன் நகரில் சாக்கடை நீர் தேங்கி நிற்பதால் வீடுகள் பாதிப்பு— | .. | 375-377 |
| **5. தகவல் கோரல்—** | | |
| உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு | .. | 377-378 |

223303

பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும்—வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 17 - கல்வி - தொடர்ச்சி .. 379-456

* திரு. வி.கே. லட்சுமணன் .. 379-388

திரு. கோ. மோகனதாசன் .. 388-391

* திருமதி ஆன் 'டி' மான்டி .. 391-394

* திரு. கே. சுப்பராயன் .. 394-401

திரு. பி. ஆர். சுந்தரம் .. 401-413

* திரு. லா. சந்தானம் .. 413-417

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி 418-428

* மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் .. 428-453

7. அரசினர் தீர்மானம்—

விதி 32-ஐத் தளர்த்துதல் .. 457

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 458

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 29, பிரமாதி - திருவள்ளுவர் ஆண்டு 2031**

**2000 ஏப்ரல் 11, செவ்வாய்க்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து."

ஒரு தலைமுறையில் பெறும் கல்வி அறிவானது, ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 281, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்.

**281—**

### மலேரியா ஒழிப்பு

***22568—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மலேரியாவை ஒழிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.*

### அறிக்கை

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கிராமங்களைக் காட்டிலும், நகர்ப்புறங்களில்தான் 56 முதல் 75% வரை மலேரியா நோய் அதிகமாக காணப்படுகிறது. அதிலும் கீழ்க்கண்ட நகர்ப்புறங்களில் மலேரியா அதிகமாக காணப்படுகிறது: (1) சென்னை (2) தூத்துக்குடி (3) வேலூர் (4) திண்டுக்கல் (5) ஈரோடு. தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் மலேரியா அதிகமாக இராமநாதபுரம், தூத்துக்குடி, தருமபுரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் காணப்படுகிறது.

இந்த நோயினால் பாதிக்கப்படும் இடங்களில் 15 தினங்களுக்கு ஒருமுறை வீடு வீடாகச் சென்று காய்ச்சல் கண்டுள்ள நபர்களை விசாரித்து, அவர்களுக்கு ஊகித்த சிகிச்சை (Presumptive Treatment) அளிக்கப்படுவதுடன், அவர்களிடமிருந்து மலேரியா ஒட்டுண்ணி உள்ளதா எனக் கண்டறியவும், இரத்தத் தடவல்கள் சேகரிக்கப்படுகின்றன. கிராமப்புறங்களில் இப்பணியினை பலநோக்கு சுகாதாரத் திட்டத்தின்கீழ் பணிபுரியும் சுகாதார ஆய்வாளர்கள் செய்து வருகின்றனர். இம்மாதிரி சேகரிக்கப்பட்ட இரத்த தடவல்கள் ஆங்காங்கே உள்ள ஆரம்ப சுகாதார நிலைய ஆய்வகத்தின் மூலம் பரிசோதிக்கப் படுகின்றன. பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்ட மலேரியா நோயாளிகளுக்கு குளோராக்யூன், பிரைமாக்யூன் மாத்திரை அளித்து, பூரண நிவாரண சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மலேரியா அதிகமாக பரவியுள்ள கடலோர கிராமங்களிலும் தென்பெண்ணை ஆற்றங்கரைகளிலும், ஜூன் முதல் நவம்பர் முடிய, சுற்று முறை மருந்து தெளிப்புப் பணியும் மேற்கொள்ளப்படுகிறது.

மலேரியா பூச்சிக் கொல்லி புகை மருந்து தெளிக்கப்படுவதுடன் மலேரியா கொசுப்புழு தடுப்புப் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. இராமநாதபுரத்தில் நுண்ணுயிர் பூச்சிக் கொல்லி மூலமாக மலேரியா நோய் கொசுப்புழுக்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. நகர்ப்புறங்களில் மலேரியா ஒழிப்புப் பணி அந்தந்த நகராட்சிகள் மூலமே நடைபெறுகிறது. மலேரியாவை பரப்பும் கொசுப்புழுவை அழிக்கவும் வாரம் ஒரு முறை மருந்தடிக்கப்படுகிறது. அவ்வாறே மலேரியா நோய் கண்ட நபர் உள்ள



வீடு மற்றும் அருகில் உள்ள வீடுகளில் புகை மருந்து தெளிப்புப் பணி மேற்கொண்டு மலேரியா ஒட்டுண்ணியுடன் உயிர்வாழும் கொசுக்கள் அழிக்கப்படுகின்றன.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். சென்னை, தூத்துக்குடி, வேலூர், திண்டுக்கல், ஈரோடு போன்ற நகரங்களில் கொசு அதிகமாக இருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. கொசுக்களிலே நான்கு வகை உண்டு. அவற்றிலே ஒருவகையான அனாபலிஸ் கொசு என்ற கொசுவினால்தான் மலேரியா நோய் உண்டாகிறது என்று கூறப்படுகிறது. எங்களது திண்டுக்கல் நகரைப் பொறுத்த அளவிலே, மாலை ஐந்து மணி முதல் இரவு ஏழு மணி வரை அதிகமாக கொசுக்கள் இருக்கின்றன. இதனால் பொதுமக்கள் துன்பத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திண்டுக்கல் நகரில் ஏதாவது சிறப்புத் திட்டத்தில் கொசுவை ஒழிப்பதற்கு முயற்சி செய்வார்களா என்பதை அறிவதுடன், மலேரியாவை ஒழிப்பதற்கு மத்திய அரசு மாநில அரசுக்கு ஏதாவது நிதி தருகிறதா என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லிலே ஐந்து மணி முதல் ஏழு மணி வரையில் கொசுத் தொல்லையாலே இந்த நோய் பரவுகிறது, மலேரியா நோய் பரவுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே எல்லா மாநகராட்சிகளிலேயும், கிராமப் பகுதிகளிலேயும், சென்னை போன்ற நகரங்களிலேயும் இப்படிப்பட்ட கொசுக்களை ஒழிப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு அளித்த அறிக்கையின் பேரிலே, அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கிடையில், ஒவ்வொரு மாநகராட்சியிலேயும், நகராட்சியிலேயும் கொசுக்களை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி தமிழக அரசும் அவர்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறது. அதற்குத் தேவையான நிதியை மத்திய அரசாங்கம் ஆண்டுதோறும் வழங்கிக் கொண்டிருக்கிறது. நம்முடைய அரசாங்கத்திற்கு இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாய்க்கு மேலாக மத்திய அரசு நிதி அளித்திருக்கிறது. திண்டுக்கல்லிலே இருக்கிற அந்தக் கொசுக்களை ஒழிப்பதற்கும் அரசு தீவிர நடவடிக்கை எடுக்கும்.

[2000 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே, திண்டுக்கல் மாத்திரம் அல்ல, திண்டுக்கல்லைச் சுற்றியுள்ள பகுதிகளிலேயும் கொசு அதிகமாக இருக்கிறது. அதை ஒழிப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கை ஒருபுறம் இருந்தாலும்கூட, இப்போது சென்னையில் எம்.எல்.ஏ. ஹாஸ்டலிலே இருக்கிற கொசு இருக்கிறதே, அது வால் முளைத்த கொசுவாக இருக்கிறது. கீழே வந்து மருந்து அடிக்கிறார்கள். அதன் புகை வருகிறது. ஆனால் மேலே ரூம்களிலே வால் முளைத்த கொசு இருக்கிறது. ஆகையினாலே, எம்.எல்.ஏ. ஹாஸ்டலிலே இருக்கிற கொசுக்களையும் ஒழிப்பதற்குத் தீவிரமான நடவடிக்கை எப்போது எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில் கொசுத் தொல்லையைக் கட்டுப்படுத்த சில நடவடிக்கைகளை சென்னை மாநகராட்சி எடுத்து வருகிறது.

மலேரியா நோய் அதிகமாகக் காணப்படும் பகுதிகளைக் கண்டறிந்து, அந்தப் பகுதிகளுக்குக் களப் பணியாளர்கள் ஒதுக்கீடு செய்வதுடன், உடனுக்குடன் இரத்தத் தடவல்கள் எடுத்து பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்க 86 மலேரியா மருந்தகங்களை ஏற்படுத்திச் செயல்பட்டு வருகிறது.

கொசுக்கள் வளரும் இடங்களை – கிணறு, மேல்நிலைத் தொட்டி மற்றும் கீழ்நிலைத் தொட்டிகள் போன்ற நீர்நிலைகளை விஞ்ஞான முறையில் மூடி வைக்கத் தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நீர்நிலைகளை மூடுவதற்கு பம்பாய் நகரில் உள்ளது போன்ற விஞ்ஞான முறையில் மூடும் மூடிகளை சென்னை மாநகராட்சி தயாரித்து, ரூபாய் 300 என்ற சலுகை விலையில் வீட்டு உரிமையாளர்களுக்கு வழங்கி வருகிறது. புதுக் கட்டடங்கள் கட்டுவதும் மலேரியா நோய்க்கு முக்கிய காரணம் என்பதால், கொசுத் தடுப்பு சேவைக் கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, ஆயிரம் சதுர அடிக்கு மேலாகக் கட்டப்படும் புதிய கட்டடங்களுக்கு ஒரு சதுர அடிக்கு ரூபாய் ஒன்று வீதம் கொசுத் தடுப்புப் பணிகள் ஓராண்டுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நீர்நிலைகளை விஞ்ஞான முறையில் மூட வேண்டுமென்று கட்டடம்



2000 ஏப்ரல் 11]

கட்டுமான விதியாக சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்படி ஏறக்குறைய 10 விதிகளை சென்னை மாநகராட்சி ஏற்படுத்தி, அதைத் தீவிரமாக அமல்படுத்தி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அக்கா பொன்னம்மாள் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே கொசுக்கள் அதிகமாக இருப்பதாகச் சொன்னார்கள். அங்கே ஏற்கெனவே மாநகராட்சியைச் சேர்ந்த மலேரியா நோய்த் தடுப்பு ஊழியர்கள் மருந்துகளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து ஒவ்வொரு நாளும் மருந்து அடிப்பதற்கு இந்த அரசு மாநகராட்சியைக் கேட்டுக்கொள்ளும்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலேரியா போன்ற கொடிய நோய்களை உண்டாக்கக் கூடிய இந்தக் கொசுக்கள், சகிப்புத் தன்மையில் பெண்களையும் மிஞ்சக்கூடியவையாக இருக்கின்றன. ஒரு immunity, அளவுக்கு மீறிய சகிப்புத் தன்மை, இப்போது இருக்கிற எல்லா மருந்துகளுக்கும் susceptibility, immunity-யை develop செய்து இருக்கின்றன. எனவே, மாற்று கொசுக் கொல்லி மருந்து தயாரிக்க அரசினிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன். இது மட்டுமல்ல, night blood sample என்று சந்தேகப்படுகின்ற நோயாளிகளிடமிருந்து இரவிலே இரத்தம் எடுத்து பரிசோதனை செய்து பார்த்தால் மட்டுமேதான் அந்தக் கிருமிகளை நாம் கண்டறியும் சூழ்நிலை இருக்கிறது. எனவே night blood sample-ஐ இந்தத் துறை எடுப்பதற்கு field work செய்கின்ற நர்ஸ்களுக்கு அரசு உத்தரவிடுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கே மக்கள் மலேரியா நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ, அங்கெல்லாம் இரவு நேரங்களிலே சம்பந்தப்பட்ட நோயாளிகளினுடைய இரத்தத்தை எடுத்து பரிசோதனை செய்து, அவர்களுக்கு மலேரியா நோய் காய்ச்சல் இருக்குமானால் உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

குளோராக்யூன், பிரைமா க்யூன் போன்ற மாத்திரைகள் எல்லாம் அவர்களுக்கு அளித்து அந்தக் காய்ச்சலிலிருந்து அவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள்.

[2000 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் காஞ்சனா கமலநாதன் பேசுகிறபோது சகிப்புத் தன்மையிலே கொசுக்கள் பெண்களை மிஞ்சிவிடும் போல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இது உண்மையிலேயே கடிக்கும் தன்மையைப் பொறுத்ததா என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொல்கிறபோது இதற்கான மருந்துகளை எல்லாம் கண்டுபிடித்ததாகச் சொல்கிறார்கள். மாலை நேரத்திலேதான் பொதுவாக 5 மணியில் இருந்து 7 மணி வரை கொசுக்கள் அதிகமாக இருக்கின்றன. இந்தக் கொசுக்களை ஒழிப்பதற்கு அரசு என்ன திட்டத்தை வைத்திருக்கிறது? இதற்காக ஒரு குழுவைப் போட்டோம். அந்தக் குழு என்ன பரிந்துரை செய்திருக்கிறது? இதுபோன்ற கொசுக்களை ஒழிப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து ஏதாவது திட்டத்தை இதுவரை கண்டறிந்து அதைச் செயல்படுத்த இருக்கிறார்களா என்பதையும் அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுண்ணுயிர் பூச்சிக் கொல்லி மூலமாக மலேரியா நோய்-கொசுப்புழுக்கள் மூலம் இந்த நோய் பரவுகிறது. அதை அழிப்பதற்காக உரிய நடவடிக்கை அரசாங்கத்தாலே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிபுணர் குழுவைப் பற்றிச் சொன்னார்கள். பேராசிரியர் சதானந்தம், திரு. கெஜபதி, திரு. ஆர்.எம். சுந்தரம் ஆகியோர் பம்பாய் போன்ற மாநகராட்சிகளுக்கு எல்லாம் சென்று பார்த்து அந்தக் கொசுக்களை ஒழிப்பதற்கு என்ன என்ன திட்டங்கள் வைத்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் தயார் செய்து ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையை, கடந்த வாரம் நான் இந்த அவையிலே சொன்னதைப் போல, இந்த அரசு பரிசீலித்து, இரண்டு மாதங்களில் முடிவு எடுத்து, எல்லா நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் அனுப்பி, அவர்கள் கொடுத்த அறிக்கையின்படி நடவடிக்கை எடுப்பதற்கு அவர்களை வற்புறுத்த அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு மூலமாக வழங்கக் கூடிய கொசு ஒழிப்பு மருந்துகள் மாநகராட்சி, நகராட்சிகளுக்கெல்லாம் வழங்கப்படுவதாக மாண்புமிகு



2000 ஏப்ரல் 11]

அமைச்சர் அவர்களின் பதிலிலே இருக்கிறது. அநேகமாக இப்போது நகராட்சிகளிலேயோ, மாநகராட்சிகளிலேயோ சென்னை போன்ற இடங்களில் மட்டும்தான் இந்தக் கொசு ஒழிப்பிற்காக புகைச்சல் அடிக்கப்படுகிறது. இதற்கு முன்னாலே நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் மருந்து அடிக்கின்ற நிலை இருந்தது. இப்போது மருந்தே வரவில்லை;. கொசு ஒழிப்பதற்கான மருந்துகளே வழங்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஆகையால் நகராட்சிகளிலே எந்தவித மருந்தும் இல்லை. அதற்கு முன்னால் கைத் தெளிப்பான் மூலமாக சாக்கடைகளிலே கொண்டுபோய் நேரடியாக மருந்தை அடித்து கொசுவை ஒழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. கைத் தெளிப்பான் மூலமாக அடிக்கின்ற முறையே இன்று முற்றிலுமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் மீண்டும் நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் மருந்து அடிக்கின்ற முயற்சிகளை எடுப்பார்களா? இந்தக் கொசுவிலே எத்தனை வகையான கொசுக்கள் இருக்கின்றன? அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் சக்ரபாணி அவர்கள், கொசுக்களிலே 4 வகை இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அவை 4 வகைதான் என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாத நிலையும் இருக்கிறது. கொசுக்களிலே பல வகைகள் இருக்கின்றன. ஆனால், மலேரியா காய்ச்சலைப் பரப்புகின்ற கொசுக்கள் எங்கே இருந்தாலும், அவற்றை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளைத்தான் அரசு எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, நகராட்சிகளிலே அந்த மருந்துகளைத் தெளிக்கக்கூடிய சூழ்நிலை இல்லையென்று சொன்னால், உள்ளாட்சித் துறை அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. பாண்டுரங்கன்.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அசுத்தங்களினால்தான் கொசுக்கள் உற்பத்தியாகி பரவுகின்றன. குறிப்பாக, நகர்ப்புறங்களில், கிராமப்புறங்களில் என்று மட்டுமல்ல; பல இடங்களில் சாலையோரங்களே கழிப்பிடங்களாக தற்போது மாறி வருகின்றன. எனவே, இப்படிப்பட்ட சாலையோரங்கள் கழிப்பிடங்களாக மாறி வருவதைத் தடுக்க, அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[2000 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட அசுத்தங்கள் தமிழ்நாட்டிலே, சாதாரண கிராமப் பகுதிகளிலேகூட இருக்கின்றன. அவற்றையெல்லாம் சரிசெய்ய வேண்டுமென்றுதான் அரசு நினைக்கிறது. ஆனால், நிதியாதாரம் இடம் கொடுக்கவில்லை. நிதியாதாரம் இடம் கொடுக்குமானால், தனிக் கழிப்பிடங்கள் கட்டிக் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில்தான் மலேரியா காய்ச்சலைப் பரப்புகிற பெரிய கொசுக்கள் எல்லாம் இருக்கின்றன. ஏனென்றால், கூவம் ஆறு இருப்பதனால், எம்.எல்.ஏ ஹாஸ்டல் மற்றும் கூவம் ஆற்றின் கரைகள் பூராவும் உள்ள குடிசைகளில் கொசு பற்றி, தமிழ்நாடு முழுவதும் அதைப் பரப்புகிறது. உதாரணமாக, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே, என்னை பெரிய கொசுக்கள் கடித்துவிட்டன. நான் மலேரியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, ரங்கபாஷ்யம் ஆஸ்பத்திரியில் போய் வைத்தியம் பார்த்தேன். எனக்கே வைத்தியம் பார்க்கப்பட்டு, செத்துப் பிழைத்தமாதிரி வந்தேன். அதுவும் இரத்தம் எடுப்பதிலே, நகத்திலேயிருந்து எடுத்தால் நோயைக் கண்டுபிடிக்க முடியவில்லை. முதுகுத் தண்டிலேயிருந்து எடுத்து, 'மலர்' ஆஸ்பத்திரியிலே இருந்து வந்துதான் கண்டுபிடிக்கக்கூடிய நிலை; அவர்கள் வைத்துள்ள Needle-ஆல் விசேஷ டாக்டர்களால் கண்டுபிடிக்க முடிந்தது. அதுமட்டுமல்லாமல், எம்.எல்.ஏ.க்களினால் தான் மலேரியா தமிழ்நாடு முழுவதும் பரவுகிறது. இங்கேயுள்ள கொசுக்கள் கடித்துத்தான் பரவுகிறது. ஆகையினால், எம்.எல்.ஏ-க்கள் ஒவ்வொருவரும் ஊருக்குப் போகும்போது, இரத்தத்தை டெஸ்ட் செய்து—முதுகுத் தண்டிலேயிருந்து இரத்தத்தை எடுத்து டெஸ்ட் செய்வதற்குண்டான நடவடிக்கைக்கு அரசு ஆவன செய்யுமா? வீட்டுக்கு ஒரு கொசு வலை மற்றும் கொசு மருந்து, பரீட்சார்த்தமாக சென்னை மாநகரத்திலே கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் தாமரைக்கனி அவர்களுடைய கருத்தை ஆதரித்து எழுதிக் கொடுத்தால், அரசு நடவடிக்கை எடுக்கும். இல்லாவிட்டால், மற்ற எம்.எல்.ஏ.க்கள் அரசுமீது வழக்குத் தொடர்ந்து விடுவார்கள். (சிரிப்பு)



2000 ஏப்ரல் 11]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாகத்தான் மலேரியா, கிராமப் பகுதிகளுக்குப் பரவுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி சொல்லியிருக்கிறார். என்னைப் பொறுத்தவரையில், அப்படி நான் நினைக்கவில்லை. தாமரைக்கனியை மலேரியா கொசு கடித்து, அவரே நன்றாக இருப்பதிலிருந்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாகத்தான் அது பரவுகிறது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி வளாகத்தில், மலேரியா கொசு மருந்து அடிப்பதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலேரியா ஒழிப்புத் திட்டம் மூலமாக, பத்தாண்டுகளுக்கு முன்னால், தமிழ்நாட்டிலேயிருந்து மலேரியா முழுவதுமாக ஒழிக்கப்பட்டுவிட்டது என்று அரசாங்கத்தாலே ஓர் அறிவிப்பு வந்தது. அதுபோல, சில காலங்கள் அந்த மலேரியா என்ற தாக்குதல் இல்லாமல் இருந்தது. மீண்டும் அந்த மலேரியா பரவுவதற்கான அல்லது ஆரம்பமாவதற்குண்டான சூழ்நிலை, வெளிநாடுகளிலேயிருந்து அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டதா? மேலும், மலேரியா ஒழிப்புத் திட்டம் என்பது, சில மாவட்டங்களில் மட்டும்தான் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அது எல்லா மாவட்டங்களிலும், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலும் மலேரியா நோய் இப்போது பரவியிருக்கிற நேரம். எனவே, நகராட்சிகள், பேரூராட்சிகள், பஞ்சாயத்துக்கள் இவை எல்லாவற்றிலும்கூட மலேரியாவை ஒழிக்கக்கூடிய கைத் தெளிப்பான் மூலமாக, கொசுவை ஒழிக்கக்கூடிய திட்டத்தை, கிராமப் பகுதிகளிலேகூட பரவலாக நாம் கொண்டு வருவதன் மூலமாகத்தான், அதை முழுமையாகத் தடுத்து நிறுத்த முடியும் என்று நான் கருதுகிறேன். எனவே, மூன்று ஆண்டுகள் என்று காலத்தைக் குறிப்பிட்டு, அந்தக் காலத்திற்குள்ளாக மலேரியாவை சுத்தமாக தமிழ்நாட்டிலேயிருந்து ஒழிக்கக்கூடிய நடவடிக்கை எடுத்து, முன்கூட்டியே சில பணியாளர்களை வைத்து ஒவ்வொரு வீட்டிலும் போய் அதைப் பரிசீலிக்கிற ஒரு நிலையை ஏற்படுத்துகின்ற வகையில் அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2000 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலேரியா கொசுக்கள் வளர்வதற்கான ஒரு வாய்ப்பினை நம்முடைய நாட்டு மக்கள்தான் உருவாக்குகிறார்கள். சில இடங்களிலே நீர்நிலைகள் இருக்கின்றன. சில இடங்களிலே கிணறுகள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களிலே சாக்கடைகள் வெளிப்படையாகவே தெரு முழுவதும் ஓடுவதற்குண்டான வாய்ப்பு உண்டாகிறது. இவை மூலமாகத்தான் கொசுக்கள், அந்தச் சாக்கடைகளிலே, கிணறுகளிலே, நீர்நிலைகளிலே உருவாகின்றன. இதையெல்லாம் தடுக்க வேண்டுமென்றுதான், அரசாங்கம் மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் அறிவுரை வழங்கியிருக்கிறது. அந்தப் பணிகளை பெரும்பாலான இடங்களிலே நிறைவேற்றவில்லை. அவை எல்லாம் நிறைவேற்றப்பட்டால், இந்த மலேரியா கொசுக்கள் நிச்சயமாக வளராது. அப்படி வளர்ந்தாலும் அவற்றை அழிப்பதற்கான, முட்டையிலேயே அழிப்பதற்கான மருந்துகள் இருக்கின்றன. அதன்மூலம் அவற்றை அழிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 282, திரு. லி. அய்யலுசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**282—**

**மருத்துவர்கள்**

***26044—திரு. லி. அய்யலுசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, எட்டயபுரம் அரசு மருத்துவமனையிலுள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி தொகுதி, எட்டயபுரம் அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2000 ஏப்ரல் 11]

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டயபுரம் தாலுகா புதியதாக சமீபத்தில் உருவாக்கப்பட்டது. அதில் பல கிராமங்கள் சேர்ந்து இப்போது வளர்ந்து வரக்கூடிய சூழ்நிலையில், நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால், அங்கு டாக்டர்களை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டயபுரம் அரசு மருத்துவமனை 30 படுக்கைகள் கொண்டது. அங்கு 2 மருத்துவர்களுக்குத்தான் இப்போது வேலைவாய்ப்பு இருக்கிறது. நோயாளிகளுடைய எண்ணிக்கை அதிகமாக வந்ததாகத் தெரியவில்லை. அங்கே இரண்டு மருத்துவர்களும் நிரந்தரமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, 2 செவிலியர்கள் இருந்தார்கள். அந்தச் செவிலியர்களுடைய எண்ணிக்கை தற்போது நான்காக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அது தாலுகா மருத்துவமனையாக உயர்த்தப்பட்ட காரணத்தினால்தான், அங்கே அறுவை அரங்கம், ஆய்வுக்கூடம், Ultra Sound Scan போன்ற கருவிகள் எல்லாம் வழங்கப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. உள்நோயாளிகளுடைய எண்ணிக்கை உயருமானால், அந்த நேரத்திலே புதியதாக டாக்டர்களை நியமிப்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு சி.டி. ஸ்கேன் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அது முழுமையாக இயங்குவதற்கு நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் இல்லை என்ற குறை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் எழுதிக் கொடுத்தபோது, அதற்கான உத்தரவை உடனே பிறப்பித்தார்கள். ஆனால் துறை அதிகாரிகள், இருக்கின்ற அறுவை சிகிச்சை நிபுணர்களை ஆங்காங்கே இருக்கக்கூடிய மருத்துவமனைகளிலே நியமித்துள்ளார்கள். வருங்காலங்களிலே, அந்தக் காலியிடங்களை நிரப்புவதற்கான, பணி நியமனம் செய்வதற்கான உரிய நடவடிக்கையை அரசு

[2000 ஏப்ரல் 11

மேற்கொள்கின்றபோது, அது நிறைவு செய்யப்படும் என்று எங்களுக்கு பதில் எழுதியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திண்டுக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு ஒரு நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணரை உடனடியாக ஏற்படுத்தித் தருவார்களா? தாங்கள் ஏற்படுத்தித் தந்த சி.டி. ஸ்கேன் முழுமையாகச் செயல்படுவதற்கு அதுதான் உகந்ததாக இருக்கும் என்ற நிலையிலே, அதை ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் தலைமை மருத்துவமனையை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், நம்முடைய அமைச்சர் மாண்புமிகு திரு. ஐ. பெரியசாமி அவர்களும், நானும் சென்று பார்த்தோம். அவர் விடுத்த வேண்டுகோளை ஏற்றுத்தான், அங்கே ஒரு சி.டி. ஸ்கேன் புதியதாக பொருத்தப்பட்டிருக்கிறது. அங்கே மற்ற மருத்துவர்கள் இருக்கிறார்கள். ஆனால் நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் அங்கே தேவை என்று சொன்னார்கள். உடனடியாக நானும் நம்முடைய ஊரக மருத்துவத் துறை டி.எம்.எஸ். அவர்களை, அங்கே ஒரு நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணரை நியமிக்கும்படி கேட்டுக்கொண்டேன். போதுமான நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் இப்போது நம்மிடத்தில் இல்லை. புதியதாக தேர்வு எழுதி இப்போது வந்திருக்கிறார்கள். அவர்களுடைய பட்டியல் இன்னும் ஓரிரு வாரங்களிலே கிடைக்கும். அது கிடைத்தவுடன் புதியதாக நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் அங்கே நியமிக்கப்படுவார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 283, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**283—**

**அங்காடி திறத்தல்**

***10708—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 11]

திண்டிவனம் நகரத்தில், செஞ்சி பேருந்து நிலையம் அருகில் காய் கனி வியாபாரிகளுக்காக அரசு சார்பில் பல இலட்சம் ரூபாய் செலவில் பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட அங்காடியைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டிவனம் நகரத்தில், செஞ்சி பேருந்து நிலையம் அருகில் கட்டப்பட்ட அங்காடியும், அதைச் சார்ந்த இடமும், உழவர் சந்தை அமைப்பதற்காக மாவட்ட விற்பனைக் குழுவிற்கு 3 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஆண்டு காலமாக காலியாக இருந்த அந்த இடத்தில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை தந்து, தனது பொற்கரங்களால் உழவர் சந்தையைத் திறந்து வைத்தார்கள். அதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த உழவர் சந்தை இருக்கும் வளாகத்தின் உள்ளே நிறைய இடம் காலியாக இருக்கின்ற காரணத்தினால், மக்களுடைய கோரிக்கைக்கிணங்க, ஒரு Super Market வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். காலியாக உள்ள பகுதியில் Super Market இயங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அதோடு அங்கே இடம் இருக்கின்ற காரணத்தினால் பூமாலைத் திட்டத்தையும், தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Super Market ஏற்படுத்துவது என்பது அவ்வளவு சாத்தியமில்லை. ஆனால், பூமாலைத் திட்டம் தேவைப்பட்டால், அதற்கான ஆய்வுகள் நடத்தப்பட்டு, அது சரியான முறையில் இயங்கும் என்று தெரிந்தால், அதில் மீதி இடமும், அவர் சொல்வது போல இருக்குமானால், உழவர் சந்தை நடத்திக்கொண்டிருக்கிறவர்களுக்கு, அது தேவையில்லையென்று கருதினால், நகராட்சி மன்றத்திற்கு தெரிவித்து, முறைப்படி அனுமதி ஏதாவது தேவைப்படுமானால், அரசுக்கு வந்தால், அதைப்பற்றி பரிசீலிக்கப்படும்.

[2000 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 284, திரு. பி. வி. எஸ். வெங்கடேசன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**284—**

**நகரியமாக்குதல்**

***29397—திரு. பி. வி. எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போச்சம்பள்ளியை நகரியமாக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

போச்சம்பள்ளியை நகரியமாக்கும் திட்டம் ஏதும் அரசின் கவனத்தில் இல்லை.

**திரு. பி. வி. எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போச்சம்பள்ளி ஒரு வட்டத் தலைநகரமாக உருவாகி 4 ஆண்டுகள் ஆகின்றது ஊராட்சியாக இருப்பதால், எந்தவிதமான வளர்ச்சியிலும் அது பங்குகொள்ளாமல் இருக்கின்ற காரணத்தாலே, அதைப் பேரூராட்சியாக ஆக்க வேண்டுமென்று அரசுக்குத் தீர்மானம் அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தின்மீது அரசு நடவடிக்கை எடுத்து, அது பேரூராட்சியாகவாவது ஆக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியலமைப்புச் சட்டம் 74-வது திருத்தத்தையொட்டி, 1966 முதல் நகராட்சி மற்றும் பேரூராட்சியினுடைய நிர்வாகக் கட்டுப்பாட்டில் இருந்துவந்த அனைத்து நகரியங்களும், நகராட்சி களாகவோ அல்லது பேரூராட்சிகளாகவோ மாற்றப்பட்டுவிட்டன. தற்போது, தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்பில் எந்த ஒரு நகரியமும் இல்லை. ஆகையினாலே, இதை நகரியமாக ஆக்க இயலாது. இருந்தாலும், பேரூராட்சியாக ஆக்க வேண்டுமென்று கருதினால், தற்போது இருக்கின்ற சட்டத்தின் அடிப்படையில், ஓர் இலட்சம் ரூபாய் வருமானமும், 5000 மக்கள் தொகையும் இருந்தால் போதும் என்று இருக்கிறது. ஆனால்,



2000 ஏப்ரல் 11]

அப்படி இருக்கிற பேரூராட்சிகள் எல்லாம் சரியாக இயங்கவில்லை, அதைத் தரமாக முறைப்படி நடத்தவில்லை. பொருளாதார நிலைகளும், மற்ற எல்லா நிலைகளும் சீர்கெட்டுவிட்டது என்பதைக் கருதி, தற்போது, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இடம்பெற்று, நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் இசைவு பெறப்பட்டு, விரைவில் நடைமுறைக்கு வரும். அதாவது விதிகள் எல்லாம், இப்போது உருவாக்கப்பட்டு வருகின்றன. அது முடிவுற்றவுடன், அந்த 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் உள்ளாட்சி அமைப்பு சட்டத்தின்படி, கணக்கெடுப்போமானால், 20000 மக்கள் தொகைக்குக் குறைவு இல்லாமலும், ஆண்டுக்கு 30 இலட்சம் ரூபாய்க்கு வருமானம் குறையாமலும் இருந்தால்தான், அதை பேரூராட்சியாக இயக்கலாம். ஆனால், தற்போது இருக்கின்ற 1991-வது வருடத்தின் அடிப்படையில் இருக்கிற மக்கள்தொகை கணக்கெடுப்பு அடிப்படையில் பார்த்தால், இந்த ஊராட்சிக்கு 6505 மக்கள் தொகைதான் இருக்கிறது. இதையொட்டி, இதற்கு அடுத்தாற்போல இன்னொரு முறை அவர்கள் கணக்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கணக்கில் 20000 மக்களுக்குக் குறையாமல் இருக்குமானால், அதைப்போல 30 இலட்சம் ரூபாய் வருமானம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்குமானால், அதை பேரூராட்சியாக உருவாக்குவதற்கான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 285, திரு. ப. மோகன் கந்தசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**285—**

**நோய் தாக்குதல்**

***24209—திரு. ப. மோகன் கந்தசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி, கோயம்புத்தூர், குண்டடம் பகுதிகளில் தென்னை மரங்களைக் கடுமையான நோய் தாக்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஒருங்கிணைந்து கட்டுப்படுத்த, விவசாயிகளுக்குத் தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் மருந்துகள் கொடுத்து உதவ அரசு முன்வருமா?

[2000 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பொள்ளாச்சி, கோவை, குண்டடம் பகுதிகளில் தென்னை மரங்களில் சிலந்திப் பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் பரிந்துரை செய்துள்ளவாறு 15 மில்லி லிட்டர் மோனோகுரோட்டாபாஸ் என்ற பூச்சி மருந்தை 10 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து, பாதிக்கப்பட்ட தென்னை மரங்களில் வேர் மூலம் செலுத்துவதின் மூலம், இப்பூச்சி தாக்குதல் 60 முதல் 80 சதவீதம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையைக் கையாளுமாறு, விளம்பரச் சாதனங்கள் மூலம் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், விவசாயிகளுக்கு உதவிட 1998-99 ஆம் ஆண்டில் கோவை மாவட்டத்திற்கு ரூ.18.50 இலட்சம் செலவு செய்யப்பட்டது. 1999-2000 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் எரியோஃபைட் சிலந்திப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த ரூ.79.42 இலட்சம் செலவழிக்கப்படுகிறது.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை நான் கேட்கும்போது இருந்த சூழ்நிலையைக் காட்டிலும், இன்றைக்கு தமிழகம் முழுவதும் பரவலாக இந்த சிலந்தி நோயால் தென்னம்பிள்ளைகள் எல்லாம் சீரழிந்துகொண்டிருக்கின்றன. 'பெத்த பிள்ளை காப்பாற்றாவிட்டாலும், வைத்த பிள்ளை காப்பாற்றும்' என்ற பழமொழியை நம்புகிற, தென்னை பயிரிடுகிற விவசாயிகள் எல்லாம் பெரும் விசனத்திலே இன்றைக்கு இருக்கிறார்கள். அண்மையிலே, நம்முடைய அரசு தென்னை மேம்பாட்டு ஆணையத்தை ஏற்படுத்தியிருக்கிறது. நேற்றைக்கு முன்தினம் தேங்காய்க்கு ஒரு வளாகம் அமைத்திருக்கிறார்கள்.

முற்பகல் 9-55

அதேநேரத்திலே, கொப்பரைத் தேங்காய்க்கு ஆதரவு விலையெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம். ஆனால், 'சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத முடியும்'. 'கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்' என்று சொல்வார்கள்.



2000 ஏப்ரல் 11]

தென்னம்பிள்ளை முழுவதும் அழிந்ததற்குப் பின்னால் எப்படி இதையெல்லாம் வைத்து நாம் காப்பாற்றப் போகிறோம் என்று புரியவில்லை. அமைச்சர் அவர்களும் அறிவார்கள். ஒரு மருந்தை இப்போது சொன்னார்கள். அந்த மருந்தெல்லாம் இன்றைக்கு பொய்த்துப்போன சூழ்நிலை இருக்கிறது. எப்படி கொசுவிற்கு, ஏற்கெனவே அவர்கள் சொல்லி, அந்தக் கொசு அதை ஜீரணித்து, இந்தக் கொசு அதிகமாகப் பரவிக்கொண்டிருக்கிறது என்று டாக்டர் காஞ்சனா கமலநாதன் சொன்னார்கள். அதுபோல, இன்றைக்கு இந்த மருந்துகள் எல்லாம் உபயோகம் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. நம்முடைய ஆராய்ச்சியாளர்களைக் காட்டிலும் பெரிய ஆராய்ச்சியாளர்கள் உலகத்திலே இல்லை. எனவே அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கடுமையான நடவடிக்கை எடுத்து இதற்கு எப்படியாவது ஒரு மருந்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே நான் சொன்னேன். கேரளாவிலே வேப்ப எண்ணெய், சோப்பு, அதேபோல வெள்ளைப் பூண்டு ஆகியவற்றைக் கலந்து பரிட்சார்த்தமாகச் செய்து பார்த்ததில், சில இடங்களிலே அது போய்விட்டதாகச் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதையும் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, கொஞ்சம் கடுமையான நடவடிக்கை எடுத்து இந்தத் தென்னை மரத்தைக் காப்பாற்றி, விவசாயிகளுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று சொல்லி, மீண்டும், மீண்டும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998 ஆம் ஆண்டு, இந்த சிலந்திப் பூச்சி தாக்குதல் முதலில் நம்முடைய மாநிலத்திலே உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, கோவை, ஈரோடு, திண்டுக்கல், தேனி ஆகிய பகுதிகளில் தொடங்கியது. தொடங்கியவுடன் அரசுக்குத் தகவல் கிடைத்ததும், வேளாண்மைத் துறையும், வேளாண்மைப் பல்கலைக் கழகமும் இணைந்து அந்த சிலந்திப் பூச்சி தாக்குதலிலிருந்து மரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொண்டதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நன்கு அறிவார்கள். ஆனால், முதலிலே மோனோகுரோட்டாபாஸ் போன்ற மருந்துகளை Spray செய்வது, பிறகு வேர் மூலம் செலுத்துவது, ஆகிய இரண்டு முறைகளை நாம் மேற்கொண்டு, விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. ஆனால், எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்பது உண்மைதான். இருந்தாலும், இந்த அரசு, அதுவும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறைச் செயலாளர், வல்லுநர்களையெல்லாம் அழைத்து அவர்களுடைய

53-78—2a

*[2000 ஏப்ரல் 11*

அறையிலே இதைக் கட்டுப்படுத்த எப்படிப்பட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், எப்படி தீவிரமாக அதிலே அக்கறை செலுத்த வேண்டும் என்று எங்களுக்கு அறிவுரையும் வழங்கினார்கள். அந்த அறிவுரையின் பேரிலே, உடனடியாக—அதுவும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இரண்டு, மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளையெல்லாம் சந்தித்து அவர்களுடைய கருத்தையும் கேட்டு, இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எடுத்திருக்கின்ற முறை, மேலும் எப்படிப்பட்ட ஆலோசனைகளை விவசாயிகள் தருகிறார்கள் என்பதைக் கேட்டு அறிந்து எனக்குச் சொல்ல வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்னொன்று, ஏற்கெனவே நாம் எடுத்த அந்த முறையிலே முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாத 6, 7 மாவட்டங்களிலிருந்து இப்போது பரவலாக தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும், எந்த மாவட்டத்திலும் இல்லை என்று சொல்ல முடியாத அளவிற்கு பரவி இருக்கிறது. ஆனால் மரம் அழிந்து போகக் கூடிய நிலையிலே இல்லை. தேங்காய் குரும்பை விடுகிறபோது, பாளையிலிருந்து வெடித்து, குரும்பையாக இருக்கின்ற அந்த நேரத்திலேயே அதன் அடிப்பாகத்திலே இந்த சிலந்திப் பூச்சி தாக்குதல் தொடங்கக்கூடிய காரணத்தால், பிஞ்சு விழுந்து விடுகிறது. தாக்குப் பிடிக்கக் கூடிய பிஞ்சு வளருகிறபோது, அதன் உள்ளே பருப்பு இலேசாக ஆகிவிடுகிறது. காய் பெருத்து பெரிய அளவிலே அது வளர முடியாத ஒரு நிலை. கட்டுப்படுத்த முடியாத நிலையிலே, அந்தச் சிலந்தியினாலே இன்றைக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதற்காக இப்போது இந்தக் கருத்தையெல்லாம் அடிப்படையாக வைத்துத்தான், நம்முடைய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம், பயிர்ப் பாதுகாப்பு மைய இயக்குநர் தலைமையிலே ஒரு சிறப்புக் குழு, விஞ்ஞானிகளையெல்லாம் கொண்ட குழு அமைத்து, பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தருடைய வழிப்படுத்தும் குழு ஒன்றும் அமைக்கப்பட்டு, அந்த ஆராய்ச்சியிலே இப்போது ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 10-00*

அத்தோடு மத்திய அரசின் தோட்டக் கலை ஆணையர் மற்றும் தென்னை வளர்ச்சி வாரியத் தலைவர் அவர்களுடைய தலைமையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலே 18-2-2000 அன்று ஒரு ஆய்வுக் கூட்டம்கூட நடைபெற்றது. அந்த ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப் போல கேரள பல்கலைக்கழகத்திலே அவர்கள் ஆராய்ச்சி செய்து, இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு மருந்தைக் கண்டுபிடித்திருப்பதைச் சொன்னதையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, (1) பூண்டு 20 கிராம், 20 மில்லி லிட்டர் வேப்ப எண்ணெய் மற்றும் 50 கிராம் சோப்பினை, 100 லிட்டர் தண்ணீரில் கலந்த கலவையைத் தெளிக்கலாம். (2) டைகோபால் 6 மில்லி லிட்டர், ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். (3) ஒரு லிட்டர் தண்ணீரில் 5 கிராம் நனையும் சல்ஃபர் மருந்தைக் கலந்து தெளித்தால் கட்டுப்படுத்த முடியும் என்று அவர்கள் சொன்ன ஆலோசனையை நம்முடைய பல்கலைக்கழகத்திலே பரிசீலித்து, உடனடியாக நடவடிக்கை எடுக்கின்ற அளவில், இன்றைக்கு அந்த ஆய்வுக் கூட்டத்திலே எடுத்துச் சொல்லப்பட்டு, அதுவும் ஆய்விலே இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் எவ்வளவு வேகமாக இதிலே அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்வதிலேயிருந்து மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிவார்கள். ஆகவே பாதிக்கப்பட்ட மரங்களுக்குக்கூட கொச்சியிலே இருக்கிற தென்னை வாரியம் உதவிட வேண்டும், மத்திய அரசாங்கம் உதவிட வேண்டுமென்று மாநில அரசாங்கத்தின் சார்பில் நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.



*2000 ஏப்ரல் 11]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், கோவை மாவட்டம் மற்றும் சில மாவட்டங்களில் தென்னை மரங்களுக்கு வந்திருக்கின்ற கொடிய நோய்களான சிலந்தி நோய், அதேபோல் வாடல் நோய் ஆகியவற்றினால் இன்றைக்கு பெருமளவில் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இன்று எப்படி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குழந்தைகளுக்கு இளம்பிள்ளைவாத நோயை ஒழிக்கின்ற அளவில், போலியோ சொட்டு மருந்து கொடுத்து . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைக் கேள்வி சுருக்கமாக இருக்க வேண்டும்; பதிலும் சுருக்கமாக இருக்க வேண்டும்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** அந்த இளம்பிள்ளைவாத நோயை இன்றைக்கு ஒழித்திருக்கின்றாரோ, அதுபோல் தென்னை நாற்றங்காலிலே நடப்படுகின்ற அந்தத் தென்னங்கன்றுகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்தக் கொடிய நோயை ஒழிக்கின்ற அளவில், சிகிச்சையளிக்கின்ற அளவில்

[2000 ஏப்ரல் 11

வேளாண்மைத் துறை ஈடுபடுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேத்து நாற்று விடுகிறபோது இதுபோன்ற நோய்கள் எல்லாம் வருவதில்லை. இது சமீபத்திலேதான் பரவி வந்திருக்கின்றது. ஏற்கெனவே மெக்ஸிகோவிலேயிருந்து இந்த சிலந்திப் பூச்சி பரவி, காற்று வழியாகப் பரவி வந்ததுதான் என்று சொல்கிறார்கள். முதலிலே அது கேரளாவிலே பாதித்தது. இப்போது அது தமிழ்நாட்டிற்குப் பரவியிருக்கிறது. அரசியலிலே எப்படி சில நேரங்களில் ஜனநாயகத்தின் பெயரால் புல்லுருவிகள் தோன்றுகின்றார்களோ, அதுபோன்று இந்த நோயும் பரவக்கூடிய ஒரு நோயாகத்தான் இருக்கிறதே தவிர, அடிப்படையிலே இது தென்னங்கன்றிலேயிருந்து தோன்றிய நோய் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 286, திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**286—**

### கடல் ஆமை

***1911—திரு. இரா. தாமரைக்கனி,**

**திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் 300 கடல் ஆமைகள் 16-7-1996 ஆம் நாளன்று விமானத்தின் மூலம் வெளிநாட்டிற்குக் கடத்தப்பட்டதாக அரசிற்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.



2000 ஏப்ரல் 11]

(ஆ) 15-7-1996 அன்று பகல் சுமார் 12-45 மணியளவில் வன உயிரினக் காப்பாளர் சென்னை அலுவலகத்திற்கு, நட்சத்திர ஆமைகளை (Starred Tortoise) விமானத்தில் எடுத்துச் செல்ல ஒருவர் முயல்வதாக சென்னை சர்வதேச விமான நிலையத்தாரிடமிருந்து தகவல் வந்தது. உடனே, வன உயிரின வலிந்து செயல்படும் பிரிவு (Wildlife Enforcement Wing) வனச் சிப்பந்திகளோடு விமான நிலையத்திற்கு விரைந்து சென்று மூன்று அட்டைப் பெட்டிகளில் வெங்காயத்திற்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 301 நட்சத்திர ஆமைகளைக் கைப்பற்றி கடத்தலில் ஈடுபட்ட நான்கு குற்றவாளிகளைப் பிடித்து தலா ரூ. 20,000 வீதம் மொத்தம் ரூ.80,000 அபராதம் வசூலித்துள்ளனர்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நட்சத்திர ஆமைக்கு சர்வதேச சந்தையிலே, நல்ல விலை இருக்கிறது. சர்வதேச சந்தையில் வெளிநாட்டில் நல்ல மார்க்கெட் இருக்கிறது. ஆகவே வெளிநாட்டிற்கு இதைக் கடத்துகிறார்கள். அன்னியச் செலாவணி இதற்கு அதிகமாகக் கிடைப்பதனால் இதை அரசாங்கமே எடுத்து, நம்முடைய தமிழ்நாட்டில் ஆழமான கடற்கரைப் பகுதிகளிலே, தூத்துக்குடி, குளச்சல் இந்த மாதிரி பகுதிகளுக்கு வந்து, துறையின் மூலமாகவோ அல்லது தனியாருக்கோ, இந்த நட்சத்திர ஆமையைப் பிடிப்பதற்கு அனுமதி கொடுத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா? இந்த நட்சத்திர ஆமையைக் கடத்துவதை நிரந்தரமாக— விமானத்தின் மூலம் கடத்துவதைத் தடுத்துவிட்டீர்கள். கப்பல் மூலமாக, விசைப்படகு மூலமாகக் கடத்துகிறார்கள். இப்போது பாகிஸ்தானுக்கு பஸ் போகிறது. பஸ் மூலமாகக்கூட பாகிஸ்தானுக்கு நட்சத்திர ஆமையைக் கடத்துகிறார்கள். இதையெல்லாம் நிரந்தரமாக—தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15-7-1996 அன்றுதான் இப்படிப்பட்ட ஒரு நிகழ்வு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து செங்கல்பட்டிலே 1,016 கடல் ஆமைகளைக் கடத்துவதற்காக முயற்சி செய்த நேரத்தில் அது தடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று மேலும் 10 குற்றங்களுக்கு உட்பட்ட 2,684 நட்சத்திர ஆமைகளும் பறிமுதல் செய்யப்பட்டு இருக்கின்றன. இவற்றை சிங்கப்பூருக்குக் கடத்தி அங்கிருந்து வேறுபல நாடுகளுக்குக்

[2000 ஏப்ரல் 11

கடத்துகிறார்கள். உணவுக்காக இதைக் கடத்துவதாகக் கூறுகிறார்கள். மருந்துக்காகக் கடத்துவதாகக் கூறுகிறார்கள். சிலர் அதை மேலை நாடுகளிலே செல்லப் பிராணிகளாக வீட்டிலே வளர்க்கிறார்கள். நம் ஊரில்தான் ஆமை புகுந்த வீடு, அமீனா புகுந்த வீடு என்று ஆமை என்ற பெயர் கேட்டாலே அலறி அடித்துக்கொண்டு ஓடிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் வெளிநாடுகளிலே இதை குழந்தையைப்போல் வளர்க்கிறார்கள். எனவே இந்த நட்சத்திர ஆமைகளைக் கடத்துவது என்பது சமீப காலத்திலே ஏற்பட்டிருக்கிற ஒன்று. ஆகையினால் இது பாகிஸ்தானுக்கு பஸ்ஸிலே போகாது.

நம்முடைய பகுதிகளில்தான் இது இப்போது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. கண்டுபிடிக்கப்பட்ட நட்சத்திர ஆமைகளைக் கொண்டு போய் மீண்டும் நீர்நிலைகள், முதுமலைக்காடு, மூணாறு இல்லம் போன்ற இடங்களில் விட்டிருக்கிறார்கள். உயிரினப் பூங்கா கிண்டியிலும், அறிஞர் அண்ணா உயிரினப் பூங்காவிலும் இதை விட்டிருக்கிறார்கள். எனவே நட்சத்திர ஆமைகள் தேவை என்று நம்மிடத்திலே வெளிநாட்டிலேயிருந்து யாரும் கேட்கவும் இல்லை. ஏற்றுமதி குறித்து கேட்டார். இதுவரையிலே அந்தமாதிரி எண்ணத்தில் இந்த அரசு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வெளிநாடுகளிலே ஆமைக்கு அதிக கிராக்கி இருப்பதாக அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து தெரிகிறது. (குறுக்கீடு) கடத்துவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் என்ன என்றும், மேலை நாடுகளிலே ஆமைக்கு நல்ல வரவேற்பு இருப்பதாகவும் சொன்னார்கள். ஆகவே இப்படி கடத்தப்பட்ட நேரத்திலே அமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொண்டு அதைத் தடை செய்ய நடவடிக்கை எடுத்ததை மனதார வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். அதேநேரத்திலே இந்த ஆமைகள் எந்தெந்த பகுதியிலே வளர்கின்றன? இப்படி கிராக்கி இருக்கக்கூடிய இந்த ஆமைகளை மேலும் வளர்ப்பதற்கு, ஏற்றுமதி செய்வதற்கு, அன்னிய செலாவணியைப் பெருக்குவதற்கு நம்முடைய அரசு முன்வருமா? அதற்கான திட்டங்கள் ஏதாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, வெளியிலே 15-7-1996 அன்று கடத்தப்பட்டிருக்கின்ற ஆமைகள் ஆந்திரா எல்லையிலும்,



2000 ஏப்ரல் 11]

பழவேற்காடு பகுதியிலே எல்லாம் பிடிபட்டதாகத்தான் அப்போது டி.வி.யிலே சொன்னார்கள். பத்திரிகையிலே நாம் பார்த்தோம். மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் வெளிநாடுகளுக்கு இதை ஏற்றுமதி செய்வீர்களா என்று கேட்டார்கள். நம்மை யாரும் இதுவரையிலே கேட்கவில்லை. யாரோ ஒருவர் ஒரே ஒரு முறை இதை வெங்காய கூடைக்குள் போட்டுக் கொண்டுபோனார். யாரோ ஆமையைக் கடத்துகிறார் என்று சொன்னார். வனத் துறையினர் போய் மீட்டுக்கொண்டு வந்துவிட்டார்கள். அவ்வளவுதான். பிறகு செங்கல்பட்டிலேயே கொஞ்சம் பேர் ஆமையை வைத்திருந்தார்கள். ஒன்றல்ல, இரண்டல்ல, ஆயிரம் ஆமை. இது எதற்கு என்று கேட்டோம். பிறகு அவரைப் பிடித்தார்கள். பிறகு வேறு ஒரு இடத்திலே ஒருவர் 2000 ஆமைகளை வைத்திருந்தார். அவரையும் பிடித்தார்கள். ஆனால் அவர்களுக்கா என்று கேட்டால் ஒருவருக்கும் தெரியாது என்கிறார்கள். ஏதோ பக்கத்து ஊரிலே இருக்கிற சுந்தரம் செட்டியார் கேட்டார், செங்கல்பட்டிலே இருக்கிற முனுசாமி கேட்டார் என்றுதான் சொல்கிறார்களே தவிர நேரடியாக வெளிநாடுகளிலிருந்து இவ்வளவு வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் கடத்தியவர்களை, குற்றவாளிகளை இதை எதற்குப் பயன்படுத்துகிறார்கள் என்று கேட்டோம். சாப்பிடுகிறார்கள், மருந்து பண்ணுகிறார்கள் என்றார்கள். வீட்டிலே வளர்க்கிறார்கள், அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 287, திரு. இரா. மகேந்திரன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**287—**

## அணையை அழகுபடுத்துதல்

*** 27977—திரு. இரா. மகேந்திரன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், வெலக்கல்நத்தம் அருகிலுள்ள செட்டேரி அணையை அழகுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2000 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வெலக்கல்நத்தம் கிராமம் அருகில் உள்ள செட்டேரி அணையை அழகுபடுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சராக வந்த நேரத்தில் அந்த அணையை அவருடைய திருக்கரங்களால் திறந்து வைத்தார்கள். கடந்த 10 ஆண்டுகாலமாக தண்ணீர் இல்லாமல் அந்த அணை வறண்டு கிடக்கிறது. அந்த அணையை நம்பியிருக்கிற சுமார் 25-க்கும் மேற்பட்ட ஏரிகள் காய்ந்து கிடக்கின்றன. குடிதண்ணீருக்குக்கூட வருகிற காலகட்டத்தில் மிகவும் கஷ்டமான நிலை ஏற்படும் என்று நான் எண்ணுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட அந்த அணையைப் பார்வையிட்டு வருகிற காலகட்டத்தில் நிச்சயமாக ஆவன செய்வேன் என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் இங்கே இருக்கிற காரணத்தினால் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எங்கள் ஊரிலே இருக்கிற அந்த அணைக்குத் தண்ணீர் கொண்டுவந்தால் என் தொகுதியிலே சுமார் 40, 50 கிராம மக்கள் நல்ல முறையிலே இருப்பார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்கு ஆவன செய்வார்களா என நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி அந்தச் செட்டேரி அணையை அழகுபடுத்த அரசு ஆவன செய்யுமா என்பது. அது இல்லை என்று சொன்னேன். அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் பேசாமல் இப்போது அணையில் நீரே இல்லை; வறண்டுபோய் இருக்கிறது; 10 ஆண்டுகாலமாக வறண்டுபோய், தூர்ந்துபோய் இருக்கிறது; அதற்கு நீர் வரத்தை ஏற்படுத்தித் தர முடியுமா என்று கேட்டிருக்கிறார். கிராமத்திலே சொல்வார்கள், "விட்டுக்கொள்வதற்கே காணோம் என்றால் தொட்டுக்கொள்வதற்கு போனான்" என்பார்கள். தண்ணீரே இல்லை, அதை அழகுபடுத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர், அந்த அணையை ஆழப்படுத்தி தண்ணீர் வருவதற்கு வழி செய்யப்படுமா என்று மூலக் கேள்வி போட்டிருக்க வேண்டும். இருந்தாலும் அதை எடுத்துக்கொண்டு பதில் சொல்கிறேன். இந்த அணைக்குத் தண்ணீர் ஆந்திராவிலிருந்து வர வேண்டும். ஆந்திராவின் border-லேதான் கட்டப்பட்டு இருக்கிறது. ஆனால், ஆந்திர அரசு அந்த அணைக்கு மேலே ஆந்திர பார்டரிலே நம் ஊரை ஒட்டி அவர்கள் ஒரு அணையைக் கட்டிவிட்டார்கள். ஆகையினாலே அதற்குத் தண்ணீர் வரமுடியவில்லை. ஆக, தமிழ்நாட்டு எல்லைக்குள்ளே எவ்வளவு தண்ணீர் வருகிறதோ அதுமட்டும்தான் இப்போது அணைக்கு வரும். ஆகையினாலே அந்தக் கால்வாயை வேண்டுமானால் தூர் வாரி அணைக்கு கொஞ்சம் தண்ணீர் வருவதற்கு ஏற்பாடு செய்யலாம்.



2000 ஏப்ரல் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 288, திரு. பால. ஆனந்தன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**288—**

## பேருந்து இயக்குதல்

***26489—திரு. பால. ஆனந்தன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட வழித் தடம் டி-57 செய்யாறு கிளையில் இருந்து சரியாக இயக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனை எப்போது அரசு நெறிமுறைப்படுத்தும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்பேரில் 4-10-1997 முதல் அவர் கோரியுள்ள இந்த வழித் தடம் செய்யாறு-உக்கல் 4 நடைகளும், செய்யாறு-கோவிலூர் 4 நடைகளும், செய்யாறு-வந்தவாசி 2 நடைகளும், செய்யாறு-வட இலுப்பை 4 நடைகளும், செய்யாறு-முக்கூர் 2 நடைகளும் என மாற்றியமைக்கப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. 4-10-1997 முதல் மழைக் காலங்களில் சாலைப்பழுதின் காரணமாகவும் மற்றும் ஏதாவது

{2000 ஏப்ரல் 11

எதிர்பாராத நிகழ்ச்சிகளின் காரணமாகவும் சில நடைகள் இழப்புகளுடன் இத்தடம் தொடர்ந்து சீராக இயக்கப்பட்டு வருகிறது.

**திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தடம் எண் டி.57 என்பது ஒரு காலகட்டத்திலே பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தினால் இயக்கப்பட்டது. அது காலம் கடக்கக் கடக்க Irregular operation ஆலே E.P.K.M. இல்லை என்று அதை நிறுத்திவிட்டார்கள். Unremunerative என்று அதற்கு ஒரு நிலையை ஏற்படுத்தி நிறுத்திவிட்டார்கள். சட்டமன்ற உறுப்பினராக நான் பொறுப்பேற்ற பிறகு, அந்தப் பகுதிக்குச் சென்றபோது இதை மீண்டும் இயக்கச் சொல்லிக் கேட்டார்கள். இதுகுறித்து அந்த நிர்வாக இயக்குநரிடம் பல முறை எடுத்துக்கூறியும் இயக்கப்படுவதற்கான வாய்ப்பு அமையவில்லை. ஆனால் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினருக்கு என்று இரண்டு வழித் தடங்களை ஒதுக்கிய காரணத்தினால் அதில் இதற்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கொடுத்து கோவிலூர்-செய்யாறு, செய்யாறு-உக்கல் என்று Multi Project Scheme-லே இந்த இரண்டு ஊர்களிலே மட்டும்தான் என் தொகுதியிலே இயக்கச் சொல்லி கடிதம் கொடுத்தேன். ஆனால், மூக்கூருக்கு, நாவலூருக்கு, வட இலுப்பைக்கு என்று இப்படி ஒரே தடவை ஒரு நேரத்தை எடுத்து பல ஊர்களுக்கு இயக்குவதனால், என்னால் கொடுக்கப்பட்ட அந்தக் கோரிக்கையானது சரியாக அந்தப் பொதுமக்கள், 40 கிராமங்களை அடக்கிய அந்தப் பொதுமக்களுக்குச் சென்றடையவில்லை. எனவே, நான் கொடுத்த கோரிக்கையின்படி மட்டுமே இந்த வழித் தடத்தை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறையினருக்குத் தகுந்த அறிவுரைகள் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த கோரிக்கையின் அடிப்படையிலேதான் செய்யாறு-உக்கல் 4 நடைகளும், செய்யாறு-கோவிலூருக்கு 4 நடைகளும் இயக்கப்படுகின்றன. அந்த வழித் தடத்திலே அடர்வு மிகவும் குறைவாக இருக்கிறது. இந்தப் பேருந்து 1989-லேயிருந்து இயக்கப்பட்டு நடுவிலே நிறுத்தப்பட்டு விட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கையின் அடிப்படையிலேதான்



2000 ஏப்ரல் 11}

இந்த 4, 4 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. ஒரு பேருந்தை இயக்குகிறபோது அதை ஓரளவிற்காவது இலாபகரமாக நடத்த வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் அந்த வழித் தடத்தையும் சேர்த்து மற்ற வழித் தடங்களும் இயக்கப்படுகின்றன. ஆக, ஒவ்வொரு வழித் தடத்திற்கும் ஒரு பேருந்து இயக்குவது என்பது இயலாத காரியமாகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை 4 வழித் தடங்களின் மூலமாக நிறைவேற்றப்பட்டிருக்கிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினருடைய தற்போதைய கோரிக்கையை இப்போது ஏற்க இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 289, திரு. இரா. விசுவநாதன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**289—**

## பேருந்து விடுதல்

***33127—திரு. இரா. விசுவநாதன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் நகரிலிருந்து வடமதுரைக்குப் புதிய வழித் தடத்தில் புறநகர் பேருந்து விடுவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோரிக்கைத் தடத்தில் பயணிகள் விழுக்காடு சராசரியாக 40% தான் உள்ளது. மேலும், கோரிக்கைத் தடத்தில் பகுதிவாரியாகப் பேருந்து வசதி உள்ளதால் கூடுதலாக புறநகர் பேருந்து இயக்க அவசியம் எழவில்லை.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 290, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 11

**290—**

## மேம்பாலம் கட்டுதல்

***22492—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, எறையூர்-தொரப்பாடி பகுதியில் செய்யாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி எறையூர்-தொரப்பாடி, செய்யாற்றின் குறுக்கேயுள்ள சிமெண்ட் குழாய் பொருத்திய மூழ்குபாலத்திற்கு மாற்றாக மேம்பாலம் அமைக்க ரூ.2 கோடியே 40 இலட்சம் செலவாகும். பெருந்தொகை தேவைப்படும். இப்பாலப் பணியினை, இப்பணியின் முக்கியத்துவத்திற்கேற்ப 2000-2001 ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தில் சேர்க்க பரிந்துரை செய்யப்படும்.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலங்களின் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கிறபோது ஒரு காலத்தில் தமிழகத்தில் மாண்புமிகு கலைஞர் அவர்களின் நல்லாட்சியில் ஏராளமான மேம்பாலங்களும், தரைப்பாலமும் கட்டியிருக்கிறார்கள். அப்பப்பா, அவை எத்தனை யுகங்கள் கடந்தாலும் கொஞ்சமும் அசைக்கமுடியாத அளவுக்கு எவ்வளவு உறுதியோடும், எவ்வளவு அழகோடும், எவ்வளவு பொலிவோடும் விளங்குகின்றன. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: கேள்விக்கு வாருங்கள். சொற்பொழிவை நிறுத்துங்கள்.



2000 ஏப்ரல் 11]

**திரு. கொ.வீ. நன்னன்**: என்று சொல்லக்கூடிய அளவுக்கு இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கட்டியிருக்கிறார்கள். கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் எங்கள் தொகுதியில் ஓடும் செய்யாற்றிலே எறையூர்-தொரப்பாடி பகுதியில் வெள்ளம் வந்தால் போக்குவரத்திற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதனால் மறுபரிசீலனை செய்து உடனடியாக அதை சேர்த்துக் கட்டித் தரும்படி கேட்டுக்கொண்டு, இந்த ஆண்டே அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டில் நபார்டு திட்டத்திலே இது பரிந்துரைக்கப்படும் என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று சொல்கிறாரா. வேண்டாம் என்று சொல்கிறாரா என்று தெரியவில்லை. இந்த ஆண்டு அது பரிந்துரை செய்யப்படும். அதை எடுத்துக்கொள்கின்ற அல்லது வேண்டாம் என்று சொல்கின்ற உரிமை நபார்டு நிறுவனத்திற்கு இருக்கிறது. ஏனென்றால் ·சில பாலங்களை வேண்டாம் என்று மறுக்கிறார்கள். இந்தப் பாலத்தை எடுத்துக் கொள்வார்களா இல்லையா என்பது அவர்களுடைய ஆய்வுக்குப் பிறகு தெரியும். இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன். செய்யாற்றில் சுதந்திரம் கிடைத்த பிறகு 1989 வரை ஒரு மேம்பாலம்கூட கட்டப்படவில்லை. 1989 ஆம் ஆண்டுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டபோது ஒரே ஒரு பாலம் சட்டப்பட்டது, ஆரணி-சேத்துப்பட்டுக்கு இடையிலே. அதற்குப் பிறகு இப்போது 106 பாலங்கள் கட்டுகின்ற இந்தப் பணியில் திருவண்ணாமலை-போளூர் இடையே கலசப்பாக்கம் அருகில் ஒரு மேம்பாலம்., வந்தவாசி-காஞ்சிபுரத்திற்கு இடையிலே ஒரு மேம்பாலம், கலவை-வாழப்பந்தல் அருகிலே இன்னொரு மேம்பாலம் ஆகிய இந்த மூன்று பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மொத்தமாக கலைஞருடைய ஆட்சியில் நான்கு மேம்பாலங்கள் செய்யாற்றிலே மட்டும் கட்டப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் நன்னன் கேட்பது ஐந்தாவது பாலம். மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் இன்னொரு பாலம் கேட்கிறார். அது ஆறாவது பாலம்.

[2000 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 291, திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**291—**

## இணைப்புச் சாலை

***24766—திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போடிநாயக்கனூர் தொகுதியிலுள்ள டி. மீனாட்சிபுரம்-கேரள மாநில எல்லை இணைப்புச் சாலையை, சாக்குளத்துமெட்டு வரை புதிதாக அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 292, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**292—**

## வாடகை நிர்ணயம்

***24121—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் கோயில் நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு மார்க்கெட் விலையின் அடிப்படையில் வாடகையை உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



2000 ஏப்ரல் 11]

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசாணை (நிலை) எண் 353, தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள் 4-6-1999-ன்படி, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் பத்து இணை ஆணையர் மண்டலங்களுக்கும் தொடர்புடைய இணை ஆணையரைத் தலைவராகக் கொண்டு 'வாடகை நிர்ணயக் குழு' அமைக்கப்பட்டு சென்னையில் மட்டுமல்லாது தமிழகம் முழுவதிலும் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்களுக்கும், மனைப் பகுதிகளுக்கும் சந்தை மதிப்பிற்கேற்றபடி நியாய வாடகை நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக சென்னை நகரைப் பொறுத்தவரை மாதம் ஒன்றிற்கு மட்டும் சுமார் 50 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் உயர்வு கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள அறநிலையத் துறைக்குச் சொந்தமான கட்டடங்கள் மற்றும் மனைப் பிரிவுகளில் குடியிருப்பவர்களுக்கு கடந்த பல ஆண்டுகளாக வாடகை உயர்த்தாத ஒரு சூழ்நிலை உள்ளது. ஆனால் அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் தற்சமயம் 10 மண்டலங்களாகப் பிரித்து வாடகையை உயர்த்துவதாக அறிவித்துள்ளார்கள். இருப்பினும் சென்னையைப் பொறுத்தவரையில் பல ஆயிரம் கோடி ரூபாய்க்குச் சொந்தமான அறநிலையத் துறைக்குச் சொந்தமான கட்டடங்களிலே குடியிருக்கிறார்கள். இன்றைய சந்தை மதிப்பில் பார்த்தோமானால் அதற்கு வாடகை பல கோடி ரூபாய் கிடைக்கும் என்று உத்தேசமாக பல கோயில் அறங்காவலர்கள் கூறிக்கொள்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் கருத்திலே கொண்டு இந்த வாடகையைத் திருத்தி அமைக்கின்றபோது அமைச்சர் அவர்கள் பிரத்தியேகமாக அதற்குள் தலையிட்டு கூடுதலாக வாடகையை வசூல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடு, அரசுக்குச் சொந்தமான காலியிடங்களில், சென்னை மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள பகுதிகளில் குடிசைகளைப் போட்டுக்கொண்டு பல ஆண்டுகாலமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். வறுமைக் கோட்டிலே இருப்பவர்கள். அந்த வறுமைக் கோட்டிலே

[2000 ஏப்ரல் 11

இருக்கின்ற ஏழைகளுக்கு அந்த இடத்தைப் பட்டா செய்து கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே இரண்டு வினாக்கள் அடங்கியிருக்கின்றன. குறிப்பாக, தமிழ்நாட்டில் அறநிலையத் துறைக்குச் சொந்தமான கட்டடங்கள் மற்றும் வீடுகள் 18 ஆயிரத்து 545. அடிமனைகள் 50 ஆயிரத்து 626. இதில் தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்துப் பகுதிகளுக்குமே வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. முதலில் 19-2-1993-ல் ஓர் அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பலரும் வாடகை மிக அதிகமாக இருக்கிறது என்று தெரிவித்தார்கள். மீண்டும் உயர்மட்டக் குழுவைக் கூட்டி ஆய்வு செய்த பிறகு அது சற்றுக் குறைத்து மதிப்பிடப்பட்டு, மீண்டும் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது. அதன்படி குடியிருப்புகள் என்று சொன்னால் அதனுடைய விலை மதிப்பில் 0.6 என்ற வகையிலும், அது வணிக நோக்கத்திற்காக இருந்தால் 0.6. அதுவே குடியிருப்புக்காக இருந்தால் 0.2 என்ற அளவிலும் பிறகு அடிமனையாக இருந்தால் 0.3 என்ற அளவிலும் அது வணிக நோக்கத்திற்காக இருந்தால். அதுவே குடியிருப்புக்காக இருந்தால் 0.2 என்ற அளவிலும்தான் வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது. அந்த அடிப்படையில் ஏற்கெனவே 66 இலட்சமாக இருந்த அந்த வாடகை நிர்ணயம் இப்போது 1 கோடியே 93 இலட்சமாக உயர்ந்திருக்கிறது. எனவே, இதற்கு மேலும் கடுமைப்படுத்துவது என்பது பொருத்தமாக இருக்காது. காரணம், முழுக்க முழுக்க இது அந்த இடத்தினுடைய சந்தை மதிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர் தருகிற மதிப்பு, சார்பதிவாளர் தருகிற மதிப்பு இவற்றில் எது அதிகமோ அதை வைத்துத்தான் நிர்ணயிக்கப்படுகிறதே தவிர தனிப்பட்ட முறையில் எந்த விருப்பு வெறுப்பின் அடிப்படையிலும் நிர்ணயிக்கப்படுவதில்லை. இதுகுறித்து மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் நிர்ணயிக்கப்பட்ட வாடகை குறித்து உயர்நீதிமன்றத்திற்கு வழக்கு வந்தபோது நீதிமன்றம் தெளிவாகத் தீர்ப்பு அளித்திருக்கிறது. இது முழுமையாக அரசு ஆணைகளின்படி தெளிவான வரைமுறைகளை வைத்து நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இதை மறுப்பதற்கில்லை. கோயில் நிர்வாகம் செய்தது முற்றிலும் சரி என்று தீர்ப்பளித்திருக்கிறது. அந்த அடிப்படையில் சென்னையில் மட்டுமே



2000 ஏப்ரல் 11]

இப்போது 3,210 கட்டடங்கள் இருக்கின்றன. அடிமனைகள் 2,710 இருக்கின்றன. இதுவரைக்கும் 3,092 கட்டடங்களுக்கும் 1,952 அடிமனைகளுக்கும் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதுவே முறையானதாக இருக்கும்.

இரண்டாவது, ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்களே இந்த அவையில் தெரிவித்திருக்கிறார்கள். கோயில் இடங்களில் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டும் என்று சொன்னால், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையோ, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையோ கையகப்படுத்திய பிறகுதான் தரமுடியுமே தவிர கோயிலே நேரடியாகத் தருவதற்கான வாய்ப்பும் இல்லை; அதற்குச் சட்டத்தில் வழிவகையும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 293, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர்.

**293—**

### திருக்கோயிலைப் புதுப்பித்தல்

***25943—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், ஊர்குடி கிராமம் அருள்மிகு வேணுகோபால்சுவாமி திருக்கோயில் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது புதுப்பிக்கப்படும்?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆலயத்திற்கு நிதி ஆதாரமில்லாத சூழ்நிலையில், திருப்பணிக் குழு அமைத்து உபயதாரர் திருப்பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2000 ஏப்ரல் 11

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுகிற இந்த ஆலயத்திற்கு தற்போது திருப்பணி கமிட்டி அமைக்கப்பட்டு வருகிறது என்பதை நானும் அறிவேன். இருப்பினும் இது பாதுகாப்பானதாக இல்லை. அங்கே 50 சிலைகள் இருப்பதாகவும், அதேபோல நகைகள் இருப்பதாகவும் பொதுமக்கள் கூறுகின்றனர். எனவே, இதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படும்? வருகிற நிதியாண்டிலேயே இதைப் புதுப்பிப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர்கள் பெரும்பாலும் கோயில்களுக்குத் திருப்பணி செய்யும்படி கேட்கிறபோது அதனுடைய உண்மையான நிதி நிலைமை என்ன என்பதையும் கொஞ்சம் கருத்தில் கொண்டால் நன்றாக இருக்கும். அவர் குறிப்பிடுகிற இந்தக் கோயிலுக்கு ஓர் ஆண்டு வருமானம் வெறும் 700 ரூபாய் மட்டும்தான். இதை அடிப்படையாக வைத்துத்தான் அதற்குத் திருப்பணி செய்ய வேண்டும். ஆவன செய்வோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 294, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**294—**

### நியாயவிலைக் கடைகள்

***20416—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர்ப்பட்டி தொடக்க வேளாண்மை வங்கியிலிருந்து பிரித்து தாரமங்கலம் தொடக்க வேளாண்மை வங்கியில் இணைக்கப்பட்டுள்ள மூன்று நியாயவிலைக் கடைகளையும் மீண்டும் அரூர்ப்பட்டி தொடக்க வேளாண்மை வங்கியுடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2000 ஏப்ரல் 11]

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சம்பந்தப்பட்ட மூன்று நியாயவிலைக் கடைகளையும் மீண்டும் அரூர்ப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியுடன் இணைக்க மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி பெற்று 7-4-2000 அன்று சேலம் மண்டல இணைப் பதிவாளர் உத்தரவிட்டுள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இணைப்பதற்கு உத்தரவு வழங்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 295. திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**295—**

### மூடப்பட்ட தொழிற்சாலைகள்

***29580—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியிலுள்ள துரைப்பாக்கம், பெருங்குடி, தாம்பரம் மெப்ஸ், பெருங்களத்தூர் போன்ற பகுதிகளில் எத்தனை தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன?

(ஆ) தொழிற்சாலைகள் மூடப்பட்டதற்கான காரணம் என்ன மற்றும் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையைப் படிக்க தங்கள் அனுமதியைக் கோருகிறேன்.

(அ) மற்றும் (ஆ): சுமார் 47 தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன.

[2000 ஏப்ரல் 11

**திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதியிலே மட்டும் சுமார் 47 தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவையிலே அறிவித்தபடி இவை பொருளாதார ரீதியாக மூடப்பட்டிருந்தால்கூட, நிபுணர்கள் குழு மூலமாக அதைப்பற்றி ஆலோசனை செய்யலாம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்களே, அதன்படி ஆலோசனை செய்யப்பட்டதா? குறிப்பாக, ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி திறக்கமுடியாத ஒரு நிலையில் இருக்கிறது என்பதை அங்குள்ள தொழிலாளர்களே உணர்ந்துவிட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குச் சேரவேண்டிய பணம் உரிய காலத்தில் சேரவேண்டுமென்று, நான் செல்கின்றபோது தொகுதி பூராவும் கேட்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்காக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதியிலே மத்திய அரசாலே தொடங்கப்பட்டு அன்னியச் செலாவணி ஈட்டுகின்ற நோக்கத்தோடு பல பொருட்களை உற்பத்தி செய்கின்ற 'மெப்ஸ்' என்ற அமைப்பு-மத்திய அரசாலே உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதில் மொத்தம் 82 நிறுவனங்கள் உள்ளன. அந்த 82 நிறுவனங்களிலே 37 மூடிக் கிடக்கின்றன. அதற்குப் பல காரணங்கள். மத்திய அரசுக்கு வாடகை கொடுக்கவேண்டும். கொடுக்கவில்லை. Excise Department Permission பெற்றுத்தான் விற்பனை செய்யவேண்டும் என விற்பனை தடை செய்யப்பட்டிருக்கிறது. நிதி நெருக்கடி, உற்பத்திக் குறைவு. Competition, Technical ground, Marketing என்று பல பிரச்சினைகள். அதுமட்டுமல்லாமல், சீனாதான் உலகச் சந்தையிலே அன்னியச் செலாவணிக்காக ஏற்றுமதி செய்கின்ற பொருட்களை வளாகத்திலிருந்து ஏற்றுமதி செய்வதற்கு உதவி செய்கின்றது. அவர்கள்தான் விலையை நிர்ணயிக்கிறார்கள். ஆகையினாலே, இதில் இப்போது 37 மூடிக் கிடக்கின்றன. இந்த 37-ஐப் பொறுத்தமட்டில், 27-ல் வேலை செய்கிற தொழிலாளர்கள் இந்தப் பிரச்சினை குறித்துப் பேசவில்லை. Dispute எழுப்பவும் இல்லை. 7-ல் சம்பந்தப்பட்ட தொழிலாளர் பிரச்சினை, கோர்ட்டுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இரண்டிலே 12(3) ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஒன்றைப் பொறுத்தவரையிலே பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது.



2000 ஏப்ரல் 11]

அடுத்து, துரைப்பாக்கம், பெருங்குடி, இதுபோன்று தாம்பரம் பகுதியில், 10 தொழிற்சாலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. அவற்றிலும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, Standard Motor-ஐப் பொறுத்தமட்டிலே B.I.F.R. நிறுவனமே இவை இயங்கமுடியாது என்று அறிக்கை கொடுத்து, வேறு வழியில்லாமல், உயர்நீதிமன்றத்திற்குச் சென்று அது Liquidation-ல் இருக்கிறது. எனவே கடன்காரர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் அந்த ஆலைகளின் அது பட்டுவாடா செய்யவேண்டிய நிலையில் இருக்கிறது. இதற்கிடையில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, Promoter வருவாரேயானால், நிச்சயமாகத் திறக்கலாம், சாத்தியக் கூறுகளை ஆராயலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பதில் அப்படியே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 296, திரு. இ.ஜி. சுகவனம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**296—**

### மாணவர் விடுதி தொடங்குதல்

***33142—திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி, பர்கூரில் மாணவர்களின் நலன் கருதி, பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பர்கூர் தொகுதி, பர்கூரில், பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[2000 ஏப்ரல் 11

**திரு. இ. ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் நகரைச் சுற்றியுள்ள பல குக்கிராமங்களிலிருந்து ஏழை எளிய பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் அங்கே வந்து படிக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சியிலே இலவச பஸ் பாஸ் வழங்கியிருந்தாலும்கூட, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மாணவர்கள் பர்கூரிலே வந்து படிப்பதற்கு இன்றைக்கு இரண்டு மூன்று பேருந்துகளில் மாறி வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதேநேரத்தில் ஏழை எளிய கூலி வேலை செய்கிற மக்கள் அங்கே அதிகமாக இருக்கின்ற காரணத்தாலே கல்வித் துறையிலே இன்றைக்கு அக்கறை வைத்துள்ள கழக ஆட்சி, மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆட்சி, அதை மறுபரிசீலனை செய்து அங்கே மாணவர்கள் தங்கிப் படிப்பதற்குண்டான ஒரு மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர் நல விடுதி அமைத்துத் தர ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையின் மூலமாக தமிழகத்தில் 972 விடுதிகள் இயங்குகின்றன. அவற்றில் 64 விடுதிகள் தருமபுரி மாவட்டத்தில் மட்டும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மேலும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அறிவிப்பின்படி பிளஸ் 2 வரை படிக்கிற மாணவர்கள் இலவச பஸ் பயணத்திற்கு அனுமதி அளித்ததன் மூலமாக மாணவர்கள் தற்சமயம் வீட்டிலேயிருந்து பள்ளிக்குச் சென்று படிக்கிற காரணத்தால், அந்த மாணவர்கள் விடுதியில் தங்குகிற வாய்ப்பு இல்லாத காரணத்தால், இந்தத் துறையின் மூலமாக இந்தக் கருத்துக்களை பரிசீலிப்பதற்கு எண்ணம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 297, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.



2000 ஏப்ரல் 11]

**297—**

### வாடகைக் குடியிருப்பு கட்டுதல்

***27479—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் அரசு வாடகைக் குடியிருப்பு இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குறைந்த அளவிலாவது வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ): அரசிடம் செயற்குறிப்பு தற்போது இல்லை.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி நகரிலே மாவட்ட அளவிலான பல அரசு நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. பரமக்குடியில் போதுமான வாடகை வீடுகள் இல்லாத காரணத்தால் மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் போன்ற பகுதிகளிலிருந்து தினமும் அரசு அலுவலர்கள் பணிக்கு வருவதால், பணிகள் பாதிக்கப்படுவதோடு பொது மக்கள் மிகவும் அவதிக்கு உள்ளாகின்றனர். எனவே பரமக்குடியிலே, பரமக்குடி மையத்திலே இருக்கிற வேளாண் துறைக்குச் சொந்தமான பல ஏக்கர் நிலம் பரமக்குடி நகரின் மத்தியில் இருக்கிறது—இதனால் அங்கே மலேரியா நோய்கூட பரவக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிற காரணத்தாலே—வேளாண் துறைக்குச் சொந்தமான இடத்தை அந்தத் துறையிடமிருந்து பெற்று, பரமக்குடி நகரில் அரசு வாடகைக் குடியிருப்பை கட்டுவதற்கு அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடியில் 120 வீடுகள் கட்டுவதற்காக 3.58 ஏக்கர் நிலத்திலே ஏற்பாடு செய்யப்பட்டது; அரசு அனுமதி அளித்தது. ஆனால் அந்த இடத்திலே நகராட்சியினுடைய குடிநீர்த் தேக்கம் இருக்கிற காரணத்தால், அது கழிவுநீரால் பாதிக்கப்படும் என்று அவர்கள் மறுப்பு சொன்ன காரணத்தால், அந்தத் திட்டம்

கைவிடப்பட்டது. இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அந்த இடத்தைப் பெற்றுத்தர முயற்சித்தால், அதை வருங்காலத்தில் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 298, திரு. லா. சந்தானம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**298—**

**சத்துணவு மையம் அமைத்தல்**

***26403—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், சின்ன ஊர்ச்சேரியிலுள்ள புதிய ஆரம்பப் பள்ளிக்குச் சத்துணவு மையம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சோழவந்தான் தொகுதி அலங்காநல்லூர் ஒன்றியம், சின்ன ஊர்ச்சேரி புதிய ஆரம்பப் பள்ளியில் 14-9-1999 முதல் 53 மாணவர்களுடன் புதிய சத்துணவு மையம் செயல்பட்டு வருகிறது.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா சென்ற ஆண்டு தொடுக்கப்பட்டது. அதற்குப் பின்னால் அமைச்சர் அவர்கள் மதிய உணவுக் கூடத்தை அமைத்துத் தந்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல சென்ற ஆண்டு 66 மேட்டுப்பட்டி, கெங்கமுத்தூரில் தொடங்கப்பட்ட பள்ளிகளுக்கும் மதிய உணவுக் கூடங்களை அமைத்துத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? பல்வேறு பள்ளிகளிலே இந்த மதிய உணவு



அமைப்பாளர்கள் இல்லை என்கிற நிலையும் இருக்கிறது. அதையும் நிரப்புவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இரண்டு இடங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். குறைந்தபட்சம் 25 மாணவர்களுக்கு மேல் இருந்தால் நிச்சயமாக அங்கே புதிய சத்துணவு மையம் தொடங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டு எதிர்காலத்திலே தொடங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக, அங்கு காலியாக உள்ள இடங்களை நிரப்புவது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே இந்த ஊட்டச் சத்து மையங்களிலே 30,000 ஊழியர்கள் அதிகமாக-இரண்டு உதவியாளர்கள் என்ற நிலையில் இருந்தவர்களை மற்ற மையங்களுக்கு தற்சமயம் அரசு மாற்றி வருகிறது. அவ்வாறு, அங்கே காலியாக இருந்தால் அந்த முறையிலேதான் அங்கே காலியிடம் நிரப்பப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 299, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**299—**

**தொடக்கப் பள்ளி தொடங்குதல்**

***24242—திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை மூங்கில்ஊரணி கிராமத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக தொடக்கப் பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) இல்லை.*

*(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.*

**திரு. கே. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மானாமதுரை அருகிலேயுள்ள மூங்கில்ஊரணி கிராமம், 200-க்கும் மேற்பட்ட குடியிருப்புகளைக் கொண்ட கிராமமாகும். அந்தக் கிராமத்தில் ஆதிதிராவிட நலத் துறையின் மூலமாக தொடக்கப் பள்ளியை ஏற்படுத்த முடியாவிட்டாலும்கூட—கல்வித் துறைக்கு மாவட்ட கல்வித் துறை பரிந்துரைகள் எல்லாம் அரசுக்கு வந்திருக்கின்றன. எனவே—கல்வித் துறை மூலமாவது ஆரம்பப் பள்ளியை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக புதிதாகப் பள்ளிகள் தொடங்கப்படுவதில்லை. கல்வித் துறையின் மூலமாக புதிதாக ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் ஆதிதிராவிடக் குடியிருப்புகளில் தொடங்கப்பட்டு வருகின்றன. அதிலும் குறிப்பாக, 18 விழுக்காடு ஆதிதிராவிடக் குடியிருப்புகளில் தொடங்கப்பட வேண்டுமென்று அரசாணையும் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் கல்வித் துறையை அணுக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் அந்த மூங்கில்ஊரணி கிராமத்தில் 200 மக்கள் தொகை இருப்பதாகச் சொல்கிறார்கள். 300 பேர் வாழ்கின்ற கிராமத்தில் தான் தொடக்கப்பள்ளி தொடங்க வேண்டுமென்று அரசு விதி இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் கல்வித் துறையை அணுகினால், சாத்தியக்கூறுகள் இருந்தால், பள்ளி வருவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 300, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.*

**300—**

## சோப்பு அலகுத் தொழிலாளர்கள்

***27472—திரு. கே. சுப்பராயன்:**

*மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரிய சோப்பு அலகுகளில் எத்தனைத் தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்?*

*(ஆ) அவர்கள் அனைவரும் நிரந்தரப் பணியாளர்களா?*

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் 37 சோப்பு அலகுகள் இயங்குகின்றன. அதிலே 219 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். அவர்கள் அனைவரும் நிரந்தரப் பணியாளர்கள் அல்ல. குறைந்தபட்ச ஊதிய விகிதத்தில் பணியாற்றுகின்றனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**திரு. கே. சுப்பராயன்:** *பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு சந்தேகம். அந்த சோப்பு அலகுகள் நிரந்தரமானவைதானா? அல்லது தற்காலிகமானதா? நிரந்தரமான ஒரு தொழிலில் தற்காலிகமாகத் தொழிலாளர்களை வைக்க வேண்டிய அவசியம் என்ன என்பதை அமைச்சர் விளக்குவாரா?*

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சோப்பு அலகுகளில் பணிபுரிகிற தொழிலாளர்கள் தங்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள். ஆனால் அந்தப் பணியாளர்கள் நிரந்தரமாக்கப்படுவதற்குத் தகுதியானவர்களா என்பதைக் கண்டறிய மாவட்டத் தொழிற்சாலை துணைத் தலைமை ஆய்வாளருக்கு, நீதிமன்றம், ஆய்வு செய்து அறிக்கை தரும்படி உத்தரவிட்டது. ஆனால் தொழிற்சாலை துணைத் தலைமை ஆய்வாளர்கள் ஒவ்வொருவரும்*

[2000 ஏப்ரல் 14

மாவட்டத்திற்குத் தகுந்தமாதிரி தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். ஒரு மாவட்டத்தில் ஓர் அலகில் 5 பேர், 6 பேர் பணியாற்றுகிறார்கள். இன்னொரு மாவட்டத்தில் 9 பேர் பணியாற்றுகிறார்கள் என்று தங்களுடைய ஆய்வறிக்கையில் அளித்திருக்கிறார்கள். தொழிற்சாலையில் 10 பேர் வேலை செய்யவேண்டும். தொழிற்சாலைச் சட்டம் 1948, பிரிவு 2-ன்படி 10 பேருக்கு அதிகமாக இருந்தால்தான் பணி நிரந்தரம் செய்ய முடியும் என்பதை அந்த விதிகள் கூறுகின்றன. ஆனால் தொழிற்சாலையில் 10 பேருக்குக் குறைவாக தொழிலாளர்கள் உள்ளனர் என்பது கண்டறியப்பட்டது. அதனுடைய அடிப்படையில்தான் இன்றைக்கு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் என்பது ஒரு Model Employer. எனவே ஒரு முன்மாதிரியாகத் திகழ வேண்டிய மாநில அரசு, சட்டத்தில் இத்தகையதொரு பிரச்சினை இருக்குமானால் உரிய திருத்தத்தைக் கொண்டு வந்து அந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்குவதற்குரிய நடவடிக்கை எடுப்பதை விட்டு, பிரச்சினையில் இருந்து நழுவி ஓடுவது நல்லதல்ல. எனவே மாநில அரசை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, பொருத்தமான சட்டத் திருத்தங்களின் மூலம் அந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டியது ஓர் அம்சம்.

இரண்டாவது, தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதிய அளவைக்கூட அந்தத் தொழிலாளர்களுக்கு வழங்குவதில்லை. அத்தகைய நிலையை மாற்றி உரிய ஊதிய திருத்தத்தை மாநில அரசு அவர்களுக்குச் செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணி நிரந்தரம் சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீதிமன்ற தீர்ப்பின்படி அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



2000 ஏப்ரல் 14]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### தமிழக மீனவர்களை பாகிஸ்தான் சிறையிலிருந்து மீட்டல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், நான் கூப்பிட்ட பிறகு நீங்கள் எழுந்திருக்கலாம். பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 19 தமிழ் மீனவர்களை மீட்க, தக்க நடவடிக்கை எடுப்பது குறித்து விவாதிக்க மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் தே. குமாரதாஸ், திரு. இரா. தாமரைக்கனி, திரு. சி. ஞானசேகரன், திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. ஜி. நிஜாமுதீன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. ஐ. கணேசன், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. இரா. பெர்னார்டு, திரு. சி. வேலாயுதன் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். இது கன்னியாகுமரி மாவட்டப் பிரச்சினை என்ற முறையில், குமரி மாவட்டத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சிக்கு ஒருவர் பேசலாம் என்று கருதி, முதலில் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களை அழைக்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் 19 பேர் கழிந்த ஓராண்டுக்கும் மேலாக பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். கழிந்த நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றபோதுகூட, இப்பொழுது பாரதத்தினுடைய பிரதமராக இருக்கின்ற மரியாதைக்குரிய வாஜ்பாய் அவர்கள், தேர்தலில் வாக்குகள் சேகரிக்கிறபோது—அப்பொழுதும் பிரதமராக இருந்தார்—இடைக்கால பிரதமராக—அன்றைக்குச் சொன்னார், 'நான் டெல்லிக்குச் சென்றவுடன் அவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வேன்' என்று கடற்கரையில் சொல்லி, கிட்டத்தட்ட 35% வாக்குகளை வாங்கிச் சென்றார். ஆனால் மாதங்கள் பல உருண்டோடிவிட்டதே தவிர, அவர்களை மீட்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களை மீட்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்று சொல்லி, இரண்டு, மூன்று முறை சொன்னாலும், கழிந்த டிசம்பர் மாதம் எழுதிய கடிதத்திற்கு இந்த ஆண்டு பிப்ரவரி மாதம்தான் மத்திய அரசிடமிருந்து பதில் வந்திருக்கிறது என்று சொன்னால், எவ்வளவு சுணக்கம் காட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) இது

மூன்றாவது மாதம். பேக்ஸ் என்றால் 5 நிமிடத்திற்கு ஒரு தரம் பதில் வாங்க முடியும். அதிலும் ஒரு தமிழக முதல்வர் அனுப்பிய கடிதத்திற்கு மத்திய சர்க்கார் மூன்று மாத கால அவகாசம் எடுத்து பதில் கொடுப்பது என்று சொன்னால் வேதனையளிக்கிறது.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இரண்டாவது முறையாக இந்தக் குற்றச்சாட்டை இங்கே கூறுகிறார்கள். அதனால்தான் நான் பதில் சொல்ல விரும்புகிறேன். டிசம்பர் கடைசியிலே எழுதப்பட்ட கடிதத்திற்கு பதில் வந்தது. ஒரு மாதம் அல்லது 1 1/2 மாத இடைவெளியிலே வந்தது என்றால், அதற்கிடையிலே அவர்கள் பாகிஸ்தான் அரசோடு கலந்து பேசவும், அங்குள்ள தூதுவர்களோடு கலந்து பேசவும் நேரம் எடுத்துக்கொள்ள வேண்டாமா? அந்த நேரத்தை அவர்கள் எடுத்துக்கொண்ட காரணத்தினால்தான் இடையிலே இந்தத் தாமதம்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டினுடைய ஒரு ஆகாய விமானத்தைக் கடத்தியவுடன் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள், அதிலே இந்தியாவைச் சேர்ந்தவர்கள், வட மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் வெளிநாட்டுக்குக் கடத்தப்பட்ட நேரத்தில், அதைத் தேயிலை கொடுத்துக்கூட மீட்க வேண்டுமென்று சொல்லி, இங்கிருந்து பெட்டியோடு சென்று மீட்டு வருவதற்கு மத்திய அரசு முயற்சிக்கவில்லையா? அதிலே காட்டுகிற முனைப்பை ஏன் இதிலே காட்டவில்லை? ஏன் இதிலே சுணக்கம் காட்டுகிறார்கள் என்பது என்னுடைய கேள்வியாக இருக்கிறது. இதுமாத்திரமல்ல, குறிப்பாக, தமிழகத்தினுடைய மீனவர்கள், மீன் பிடிக்கச் செல்கிறபோது, இலங்கை அரசாங்கத்தாலும் பிடிக்கப்பட்டு இப்போது இலங்கை சிறையிலேயும் வைத்திருக்கிறார்கள். இப்படி ஒட்டுமொத்தமாக தமிழகத்தினுடைய கடற்கரையிலே வாழ்கின்ற மீனவர்களுக்கு வாழ இயலாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களை உதாசீனப்படுத்திவிட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. அவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பு கொடுப்பதற்கான ஒரு வழிவகையை நீங்கள் காண வேண்டும். இலங்கை சிறையிலே இருக்கிறவர்களை-கழிந்த மாதம் 5 பேரைக் கைது செய்து, அதிலே ஒருவர் இறந்துவிட்டார், அவருடைய பிணம்தான் வந்து சேர்ந்தது. மற்றவர்கள் விடுதலையாகி இன்னும் வந்து சேரவில்லை. இவை எல்லாம் தொடர்ச்சியாக மீனவர்கள் மத்தியிலே ஒரு





அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. குமரி மாவட்டத்திலே அனைத்துக் கட்சிகளும், திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட, தமிழ் மாநில காங்கிரஸ் உட்பட அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து நாளையதினம் ஒரு பெரிய 'பந்த்'தை நடத்த இருக்கிறார்கள். ஆக, கடற்கரைப் பகுதி மக்களிடம் இந்த பந்த் பரவுகிறபோது தமிழகம் முழுவதும் இதற்கான பின்விளைவுகள் ஏற்பட்டுப் போராட்டங்கள் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, நீங்கள் தோழமை வைத்திருக்கிற பாரதிய ஜனதா கட்சியினுடைய பிரதமரோடு - இன்றைக்கு பத்திரிகையிலே மாண்புமிகு முதலமைச்சருக்கு மரியாதைக்குரிய வாஜ்பாய் அவர்கள் வாழ்த்துச் சொல்லி, இவர்களுடைய பிரச்சினைகளைப் பேசியதாக செய்திகளைப் பார்த்தோம். அதே நேரத்தில், இதை நீங்கள் துரிதப்படுத்தி, விரைவுபடுத்தி, உடனடியாக எப்படியாவது அவர்களை விடுதலை செய்வதற்கு - ஒருவேளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லலாம், நம்முடைய உறவும் பாகிஸ்தானுடைய உறவும் சரியாயில்லை, அதனாலே காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்று சொன்னால், என்றைக்கு பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் நல்லுறவு வரப்போகிறது? அதுவரைக்கும் நாம் காத்துக்கொண்டிருப்பதா? உங்களால் இயலவில்லை என்று சொன்னால், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புகளின் மூலம், அவர்களிடம் வேண்டுகோளாக விடுத்து, அவர்கள் மூலமாகவாவது மீட்டு வருவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். எனவே, குமரி மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கிற இந்தப் பதட்டநிலை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது அவர்களை மீட்பதற்கான ஆக்கப்பூர்வமான பணிகளை அறிவிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, மீனவர் பிரச்சினையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. பெர்னார்டு.

***திரு. இரா. பெர்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தின் இறையாண்மையையும் சமூக நீதியையும் காத்துவரும் ஜனநாயகப் பேரியக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தனிப் பெரும் தலைவராக எட்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு, மத்திய அரசின் மாண்புமிகு பிரதமர் வாஜ்பாய் அவர்கள் வாழ்த்தும், பாராட்டும் தெரிவித்த அந்த நேரத்தில்கூட, பாகிஸ்தான் சிறையில் வாடுகின்ற 19 மீனவர்களைக்

காப்பாற்ற எப்படித் தாய் தவிப்பார்களோ அந்த உணர்வோடு, அந்த நேரத்திலும்கூட அதற்காக இந்தியப் பிரதமரிடம் வேண்டுகோள் வைத்து, அந்த வேண்டுகோளை நிறைவேற்ற துரித நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, மீனவ மக்கள் மீது இவ்வளவு அக்கறை கொண்ட, அவர்களது வளர்ச்சியிலே, வாழ்விலே அக்கறை கொண்ட முதல்வர் அவர்களுக்கு, நான் மீனவ மக்கள் சார்பில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வேண்டுகோளையும் ஏற்று விரைந்து செயல்படுவோம் என்று பாரதப் பிரதமர் கொடுத்திருக்கிற உறுதிக்கும், நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் அதே நேரத்தில் அவர்கள் பல மாதங்களாக சித்திரவதை அனுபவிக்கிறார்கள் என்பதை உணர்ந்து தமிழக முதல்வரும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும் உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுத்து தகவல் தந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நாடு அறியும். பாகிஸ்தான் நமக்கு நேச நாடு அல்ல என்பதை நாம் இந்தச் சோதனையான நேரத்திலே கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்போது ஒரு அருமையான சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. நேற்றையதினம் நம்முடைய இந்தியக் கடல் எல்லைக்குள் குஜராத் பகுதியில் பாகிஸ்தான் மீன்பிடிக் கப்பலில் 5 மீனவர்கள் வந்தபோது நம்முடைய கடலோரப் பாதுகாப்புப் படையினர் கைது செய்து வைத்திருக்கிறார்கள்.

(மணி 10-45)

இது ஒரு சரியான சந்தர்ப்பம் என்பதை நான் இங்கே இந்த மீனவ மக்களின் வளர்ச்சியிலும் அக்கறையிலும் மிகுந்த பாசத்தோடு செயல்படுகிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குத் தெரிவித்து, இதை மத்திய அரசுக்கும் தெரிவித்து, வேகமாக, விரைந்து, தொடர்ந்து அந்த நடவடிக்கையைத் தொடர்வதற்காக வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் கச்சத் தீவைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். ஆம். அங்கும் இந்தப் பிரச்சினை தொடர்ந்து வருகிறது. இதற்கும் தாங்கள் மத்திய அரசோடு தொடர்புகொண்டு அந்தக் கடல் எல்லைப் பகுதியில் சரியான, உரிய பாதுகாப்பு வழங்குவதற்கும் நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லி, உங்களுடைய பெருமுயற்சி வெற்றிபெற்று மீனவ





மக்களுக்கு மகிழ்ச்சி கொடுக்க விரைந்து அவர்களை மீட்டுத்தர வேண்டும் அரசின் கவனத்தை ஈர்க்கிறேன் நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைச் சேர்ந்த 19 மீனவர்கள் கடல் கொந்தளிப்பின் காரணமாக அந்தப் பகுதியிலே சென்று சேர்ந்து, இன்றைக்கு அவர்கள் சுமார் ஓர் ஆண்டு காலமாக, கராச்சி நகரத்திலே அடைக்கப்பட்டு, துன்பத்திலே ஆழ்ந்திருக்கின்றார்கள். ஏற்கெனவே குஜராத் மாநிலத்தில் இப்படி ஒரு நிகழ்வு ஏற்பட்டு, அவர்களை விடுதலை செய்வதில் மத்திய அரசாங்கம் எந்த அளவுக்கு அக்கறையோடு செயல்பட்டு அந்த மக்களை மீட்டு வந்தார்களோ, அந்த முறையில் அல்லது அந்த அளவிற்கு ஒரு தன்மையை நாம் பார்க்க முடியவில்லை என்பதுதான். நம்முடைய தமிழ்நாட்டைச் சார்ந்த மீனவர்கள் அது இப்போது பாகிஸ்தான் சிறையில் இருக்கிறவர்களானாலும் சரி, தங்களுடைய வாழ்க்கையை ஓட்டிக்கொள்வதற்காகப் பல்வேறு நாடுகளில் சென்று மீன்பிடிக்கச் செல்கின்றார்கள். அதனுடைய விளைவாகத்தான், சட்டப்படியாக ஒரு நாட்டிற்குச் சென்று அங்கிருந்து இன்னொரு நிலையிலே, கடலிலே ஏற்பட்டு, அந்த நாட்டிலிருந்து அவர்கள் துரத்தியடிக்கப்பட்டு, இன்று பாகிஸ்தான் சிறையிலே இருக்கின்றார்கள். இந்த ஓராண்டுக் காலம் இந்த மீனவர்களை மீட்டுவர தேவைதானா என்பதுதான் பிரச்சினை என்பதால் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த சுமார் 15 பேரும், நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த 4 பேரும். அவர்களைச் சார்ந்த குடும்பங்கள், இத்தனை காலம் தங்களுடைய குடும்பத்தாருடன் அவர்கள் இல்லையென்ற ஒரு உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டு வருகிறது என்பதால், நான் மாநில அரசைக் கேட்டுக்கொள்வது எல்லாம், ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் மாண்புமிகு பிரதமரோடு பேசுகின்றபோது, இதைக் கவனத்திலே கொண்டுவந்து நினைவூட்டி இருக்கிறார். அந்த நினைவூட்டலுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இருந்தாலும் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படவில்லை. பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட வேண்டும் என்பதுதான் இதனுடைய உள்நோக்கம். அந்த அடிப்படையிலே விரைவாக நம்முடைய மீனவர்களை மீட்டுத்தர மாநில அரசு இன்னும் மத்திய அரசை வற்புறுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ள அரசினுடைய கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு வருகிறேன்.

[2000 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. சி. வேலாயுதன்.*

**திரு. சி. வேலாயுதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைச் சார்ந்த 19 மீனவர்கள் பாகிஸ்தான் சிறையில் வாடுவது நம் அனைவருக்கும் மிகுந்த வேதனையாக இருக்கிறது. பொதுவாக, பாகிஸ்தானைப் பொறுத்தமட்டில், சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம், நம்முடைய நாட்டிற்கு எப்படி எப்படி தொந்தரவு கொடுக்கலாம் என்று நம்முடைய நாட்டினுடைய உள் பிரச்சினையாகட்டும், பாரத நாட்டினுடைய எல்லைப் பிரச்சினையாகட்டும், அனைத்திலும் தொந்தரவு கொடுத்துக்கொண்டிருப்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். கார்கில் யுத்தமும் சரி, அதற்கு முன்னால் நடந்த பலவிதமான யுத்தங்களும் சரி, இப்பொழுது சமீபத்தில் காஷ்மீரில் 35 பேர்களைச் சுட்டுக் கொன்றது, இதுபோன்ற வாய்ப்புக் கிடைக்கும்போது நமக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடிய அந்த அரசாங்கம், இன்று 19 மீனவர்களையும் எளிதாக விடாமல், நமக்குச் சிரமத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற, நமக்குச் சிக்கலை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் செய்கின்றது. ஆனால், நேற்றைய சம்பவம் ஒரு நல்ல உதாரணமாக அமைந்திருக்கிறது. பாகிஸ்தான் நம்முடைய நாட்டிற்குக் கொடுத்து வரக் கூடிய தொந்தரவுகள் ஐ.நா. சபையில் எழுப்பப்பட்டு, ஐ.நா. சபையே இதை ஏற்றுக்கொண்டு, பாகிஸ்தானை ஐ.நா.-விலிருந்து வெளியேற்ற வேண்டுமென்ற முடிவுக்கு வரக்கூடிய நிலைக்கு ஐ.நா. அணிசேரா நாடுகள் சென்று இருப்பது.....*

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் இந்த மீனவர் பிரச்சினையைப் பற்றிப் பேசி முடியுங்கள்.*

**திரு. சி. வேலாயுதன்:** *இதிலே சம்பந்தம் இருக்கிறது. அவர்கள் சென்றிருப்பதற்கு நிச்சயமாக பாரத அரசாங்கத்தையும் வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களையும் அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம். எம்.ஜி.ஆர். அவர்கள் 'வெற்றி மீது வெற்றி வந்து நம்மைச் சேரும்' என்று ஒரு பாடலைப் பாடி இருக்கிறார்கள். அதேபோன்று பாரத நாட்டிற்கு அனைத்துத் துறைகளிலும் உலக அரங்கில் வெற்றி ஒன்றுக்குமேல் ஒன்றாக வந்துகொண்டிருக்கக் கூடிய இந்தக் காலக்கட்டத்தில் இந்த மீனவர்கள் பிரச்சினையிலும் நம்முடைய மத்திய மாநில அரசுகள்....*



*2000 ஏப்ரல் 11]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மீனவர் பிரச்சினை பற்றி மட்டும் பேசுங்கள். இது நாடாளுமன்றம் அல்ல. வெளியுறவுத் துறை அமைச்சருக்குப் பாராட்டுச் சொல்ல வேண்டிய இடம் இதுவல்ல. ஆகையினால், இந்த மீனவர் பிரச்சினையைப் பற்றி மட்டும் பேசுங்கள்.*

**திரு. சி. வேலாயுதன்:** இந்த மீனவர் பிரச்சினையில், மத்திய அரசு, இப்போது உலக நாடுகளோடு இருக்கிற தொடர்பைப் பயன்படுத்தி 19 பேர்களை விரைந்து பாரத நாட்டிற்குக் கொண்டுவர ஆவன செய்யும். அதற்கு நம்முடைய தமிழக அரசும் இடைவிடாது முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நாளை நடக்க இருக்கக்கூடிய 'பந்த்' தை கைவிட்டு, அரசாங்கத்திற்கு ஒத்துழைப்புக் கொடுக்குமாறு இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டு, தக்க முயற்சிகளை மத்திய மாநில அரசுகள் எடுக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)*

**திரு. இரா. தாமரைக்கனி:** *நாங்களும் அறிவிப்புக் கொடுத்து இருக்கிறோம் அல்லவா?*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் உட்காருங்கள். நான் சொல்கிறேன். அலுவல் ஆய்வுக் குழுவிலே கூடி இந்தத் தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னால் இப்படிப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்பு அறிவிப்புகளில் 15, 16 பேர் பேசி, ஒவ்வொரு தீர்மானத்திலும் பேசி, எல்லா கட்சிகளுக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டிய சூழ்நிலையைத் தவிர்க்க வேண்டும் என்று எல்லோரும் ஏற்றுக்கொண்டு, பிரதான எதிர்க்கட்சி ஒன்றுக்கும், அதற்குப் பிறகு, கால முன்னுரிமையில் 2 பேருக்கும் கொடுப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது. அதிலே எல்லா கட்சித் தலைவர்களும் இருந்தார்கள். அந்த அடிப்படையிலேதான், இந்த அறிவிப்பைப் பொறுத்தவரையில் பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற முறையில் டாக்டர் குமாரதாஸ் அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, மீதம் இரண்டு பேர் என்ற சூழ்நிலையில், அந்த மாவட்டத்தில் இருக்கின்ற 5 சட்டமன்ற உறுப்பினர்களில், 4 பேருக்கு வாய்ப்புக் கொடுத்தேன். திரு. தாமரைக்கனி

அவர்கள் கேட்பதைப் போல எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்றால். அடுத்த பெரிய கட்சியாக இருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலேகூட திரு. சிவபுண்ணியம் அவர்கள் அறிவிப்பு கொடுத்து இருக்கின்றார்; திரு. ஐ. கணேசன் அவர்கள் கொடுத்து இருக்கிறார்; திரு. நிஜாமுதீன் அவர்கள் கொடுத்து இருக்கிறார். அவர்களை எல்லாம் அழைக்கவில்லை. குறிப்பிட்டு யாரையும் பேச அனுமதிக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு செய்யப்பட்டதல்ல. அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுத்த முடிவின் அடிப்படையிலே இங்கே நான் பேச அனுமதித்தேன். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**திரு. இரா. தாமரைக்கனி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர் பிரச்சினை....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய கட்சி; அதனால் எங்கள் கட்சிக்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நாட்டிலே பெரிய கட்சியாக இருக்கலாம். சட்டமன்றத்தில் பெரிய கட்சி என்று நான் சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை, நான் ஒன்றும் யாரையும் குறையாகச் சொல்லவில்லை. நீங்கள் நாட்டில் பெரிய கட்சியாக இருக்கலாம். சட்டமன்றத்தில் உங்களைக் காட்டிலும் பெரிய கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி; அவர்களுக்கே நான் வாய்ப்புக் கொடுக்கவில்லை; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிட்டேன்; நீங்கள் சொன்ன கருத்துக்கு பதில் சொல்லிவிட்டேன்; உட்காருங்கள். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கடலூர் மாவட்டங்களைச் சேர்ந்த 19 மீனவர்கள் சவூதி அரேபியாவுக்கு ஒப்பந்த அடிப்படையில் மீன்பிடித் தொழில் செய்வதற்கு அழைத்துச் செல்லப்பட்டு 12-2-1999 அன்று சவூதி அரேபியாவில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, கடலில் திசை தெரியாமல் ஈரான் நாட்டுக் கடல் எல்லையில் சென்றுவிட்டதால், 16-2-1999 அன்று அந்நாட்டினர் அம்மீனவர்களை, கடவுச்சீட்டு மற்றும் அயல்நாட்டு நுழைவிசைவு இல்லாத காரணத்தால், அந்நாட்டின் கடல் எல்லைக்குள் மீன் பிடித்ததாகக் கூறி சிறையில் அடைத்தார்கள். பின்னர் 5-6-1999 அன்று அவர்களை இந்தியாவிற்கு அனுப்புவதாகக் கூறி அழைத்துச் சென்று பாகிஸ்தான் எல்லையில் விட்டுச் சென்றதால், அயல்நாட்டு





நுழைவிசைவு மற்றும் கடவுச் சீட்டு இல்லாத காரணத்தால் பாகிஸ்தான் அரசால் மீண்டும் கைது செய்யப்பட்டு, பாகிஸ்தானில் உள்ள ஹட்டா மாவட்டம், க்யூட்டா என்ற இடத்தில் சிறை வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களை மீட்டு தாயகம் அழைத்துவர தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் மத்திய அரசின் வெளி விவகாரத் துறை மூலமாக பாகிஸ்தான் அரசைக் கேட்டுக்கொள்ளுமாறு மீன் வளத் துறை இயக்குநர் முதலில் அரசைக் கேட்டுக்கொண்டார். அதன்படி மத்திய அரசின் வெளி விவகாரத் துறை மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சகத்திலிருந்து இஸ்லாமாபாத்திலுள்ள இந்தியத் தூதரகத்திற்கு அரசின் 14142/மீன்6/99-1 எண்ணுள்ள 14-7-1999 நாள் கொண்ட ஃபேக்ஸ் செய்தி மூலம் தொடர்புகொள்ளப்பட்டது.

முற்பகல் 10-55

பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 19 மீனவர்களின் பெயர்கள் கீழ்வருமாறு:-

1. திரு. ரோனிமுஸ், கடியப்பட்டினம், கன்னியாகுமரி மாவட்டம்
2. திரு. லீனஸ், கடியப்பட்டினம், கன்னியாகுமரி மாவட்டம்
3. திரு. சுவாமிநாதன், கடியப்பட்டினம், கன்னியாகுமரி மாவட்டம்
4. திரு. ததேயூஸ் அந்தோணி சகாயம், கன்னியாகுமரி மாவட்டம்
5. திரு. ராஜா, கடியப்பட்டினம், கன்னியாகுமரி மாவட்டம்
6. திரு. சகாய ராஜ், முட்டம், கன்னியாகுமரி மாவட்டம்
7. திரு. பெசிவின் ராஜ், முட்டம், கன்னியாகுமரி மாவட்டம்
8. திரு. டைகுளோஸ், முட்டம், கன்னியாகுமரி மாவட்டம்
9. திரு. கொன்சாகு, கோடிமுனை, கன்னியாகுமரி மாவட்டம்
10. திரு. ஸ்டாலின், கோடிமுனை, கன்னியாகுமரி மாவட்டம்
11. திரு. ஜார்ஜ், கோவளம், கன்னியாகுமரி மாவட்டம்
12. திரு. கிளிட்டஸ், பெரியகாடு, கன்னியாகுமரி மாவட்டம்
13. திரு. நசரேன், பொழிக்கரை, கன்னியாகுமரி மாவட்டம்

[திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்] [2000 ஏப்ரல் 11

14. திரு. ஜெரால்ட், கன்னியாகுமரி மாவட்டம்
15. திரு. ஆரோக்கியம், கன்னியாகுமரி மாவட்டம்
16. திரு. ஜான் சிலுவை நேசம், பெருமணல், திருநெல்வேலி மாவட்டம்.
17. திரு. போஸ்கோ, கட்டப்புளி, திருநெல்வேலி மாவட்டம்.
18. திரு. கண்ணன், கடலூர் மாவட்டம்.
19. திரு. இப்ராஹிம், வாலிநோக்கம், இராமநாதபுரம் மாவட்டம்.

இந்த 19 தமிழக மீனவர்களையும் பாகிஸ்தான் சிறையிலிருந்து விடுவித்து தமிழகத்திற்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு தமிழக அரசு பலமுறை மத்திய அரசை வலியுறுத்தி வந்துள்ளது. இது குறித்து மத்திய அரசின் வெளி விவகாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 14-9-1999 அன்று கடிதம் அனுப்பியுள்ளார்கள். அதன் மீது முன்னேற்றம் ஏதும் இல்லாத காரணத்தால் கடந்த 25-12-1999 அன்று பாரதப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் உடனடியாக 19 மீனவர்களையும் விடுவித்து அழைத்து வர உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கடிதம் எழுதியிருந்தார்கள். அந்தக் கடிதத்தினைப் பெற்றுக்கொண்ட பாரதப் பிரதமர் அவர்களும் 31, டிசம்பர் அன்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். 'கடிதத்தினைப் பெற்றுக்கொண்டேன், நடவடிக்கை மேற்கொள்வேன்' என்று கூறியுள்ளார்கள்.

மாண்புமிகு முதல்வரின் கடிதத்திற்குப் பதில் அளித்து மத்திய வெளி விவகாரத் துறை அமைச்சர் திரு. ஜஸ்வந்த் சிங், 1-2-2000 அன்றைய நாளிட்டு மாண்புமிகு தமிழக முதல்வருக்கு எழுதிய கடிதம் தமிழக அரசுக்குக் கிடைத்துள்ளது. அக்கடிதத்தில், பாகிஸ்தான் சிறையில் உள்ள தமிழக மீனவர்களை பாகிஸ்தானில் உள்ள இந்திய தூதர் 3-1-2000 அன்று சந்தித்துள்ளார் என்றும், அதன் தொடர்ச்சியாக இந்த 19 மீனவர்களையும் தமிழகத்திற்கு அழைத்து வர அவசர அடிப்படையில் மத்திய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் மத்திய வெளி விவகாரத் துறை அமைச்சர் திரு. ஜஸ்வந்த் சிங் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.



2000 ஏப்ரல் 11] [திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்]

மேலும், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை மீட்க அரசால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரத்தைத் தெரிவிக்குமாறு 21-2-2000 அன்று அரசைக் கேட்டுக்கொண்டார். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியருக்கும் 10-3-2000 அன்று மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மற்றவர்கள் பாகிஸ்தானிலிருந்து மீண்டு வந்துவிட்டார்கள் என்ற செய்தியெல்லாம் சொன்னார்கள். எங்களால் பெறப்பட்ட தகவலின்படி பாகிஸ்தான் அதிகாரிகள் 19 தமிழக மீனவர்ளை விடுவிப்பது குறித்து முடிவான தேதியை இதுவரை தெரிவிக்கவில்லை.

மே 1999 முதல் இதுநாள் வரை பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே எந்தவிதமான கைதிகள் பரிமாற்றமும் நடைபெறவில்லை என்று இந்திய அரசு வெளி விவகாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

மேலும், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே கைதிகள் பரிமாற்றம் தொடர்பான பேச்சுவார்த்தை மார்ச் 1999-க்குப் பிறகு நடைபெறவேயில்லை என்றும் தெரிவித்துள்ளார்கள்.

இதுமட்டுமல்லாமல் இது ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்கும் இடையேயுள்ள பிரச்சினையல்ல. இலங்கையில் பிடிபட்ட மீனவர்கள் ஆனாலும் சரி, மற்ற அண்டை நாடுகளில் பிடிபட்ட மீனவர்கள் ஆனாலும் சரி, அவர்களை அந்த நாட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பித்து முறைப்படிதான் அவர்களை வெளியே கொண்டுவர முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இலங்கையிலுள்ள மீனவர்களை மீட்க வேண்டுமென்று சில தினங்களுக்கு முன்புகூட நம்முடைய முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதி கூடிய விரைவில் மீனவர்களை மீட்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் நேற்றைய தினத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கழகத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக பாரதப் பிரதமர் அவர்கள் பாராட்டும் தருணத்தில், அப்போதுகூட, தன்னுடைய பாராட்டை மட்டும் பெற்றுக்கொள்ளாமல் இந்த மீனவர்கள் பிரச்சினையை பாரதப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து தீவிர நடவடிக்கை எடுத்து, அவர்களை மீட்டு வர வேண்டுமென்று நமது முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த

அரசும், மத்திய அரசும் தமிழக மீனவர்களை மீட்டு வர துரித நடவடிக்கைகளை தீவிரமாக எடுத்து வருகின்றன என்பதை இந்த அவையின் முன் தெரிவித்துக் கொள்வதோடு, அந்த மாவட்டத்தில் 'பந்த்' நடத்துகின்ற அனைத்து மக்களையும் கேட்டுக்கொள்வது, இந்த அரசும், மத்திய அரசும் மீனவர்பால் கவனம் செலுத்தி, மீனவர்களை மீட்டு வர நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன என்பதைக் கருத்தில் கொண்டு பந்தைக் கைவிடுமாறு கேட்டுக்கொண்டு, இந்த அளவில் முடித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கிறேன். Existing agenda முடிந்துவிட்ட பிறகு உங்களுக்கு அனுமதி கொடுக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன், அமைச்சரிடம் என்ன விளக்கம் கேட்கப் போகிறீர்கள்?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே மீனவர்களிடையே வந்திருக்கின்ற பிரச்சினை, இவர்கள் சிறை பிடிக்கப்பட்ட பிறகு, குஜராத் மாநிலத்திலிருந்து சென்ற மீனவர்களைப் பாகிஸ்தான் சிறையிலிருந்து மத்திய அரசு மீட்டுக்கொண்டு வந்திருக்கிறது. ஆனால் அந்த அளவுக்கு அவர்கள் மீதுள்ள அக்கறை நமது மீனவர்கள் விஷயத்தில் காட்டப்படவில்லை என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. குஜராத்திலே கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டார்கள் என்பது உண்மைதானா? அது எந்த பின்னணியிலே என்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விளக்க உரையிலே கூட சொன்னேன். பாகிஸ்தான் அதிகாரிகள் 19 மீனவர்களை விடுவிப்பது குறித்து முடிவான தேதியை இதுவரை தெரிவிக்கவில்லை என்றும், மே மாதம் 1999 முதல் இதுநாள் வரை பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் எந்தவிதமான கைதிகள் பரிமாற்றமும் நடைபெறவில்லை என்றும் இந்திய அரசு வெளி விவகாரத் துறை அதிகாரிகள், தெரிவித்துள்ளனர். மேலும், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே கைதிகள் பரிமாற்றம்





தொடர்பான பேச்சுவார்த்தை மார்ச் 19, 1999-க்குப் பிறகு நடைபெறவில்லை என்றும் குறிப்பிட்டு இருக்கிறேன்.

## 3. அறிவிப்பு

### தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரிய மேலாண்மைக் குழுவிற்கு மூன்று உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரிய மேலாண்மைக் குழுவிற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க கீழ் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக நியமனத் தாள்கள் வரப்பெற்றுள்ளன. திருவாளர்கள் (1) ஆ. நடராஜன் (2) அன்பில் பெரியசாமி மற்றும் (3) வி.சி. சண்முகம். தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும் முறையாக வரப்பெற்றுள்ள நியமனத் தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், மேற்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு

### திருப்பூர், நல்லூர் பேரூராட்சி, சுப்பிரமணியம் நகரில் சாக்கடை நீர் தேங்கி நிற்பதால் வீடுகள் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து திரு. கே. சுப்பராயன் அவர்கள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்ப்பார்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர், நல்லூர் பேரூராட்சி, சுப்பிரமணியம் நகரில் சாக்கடை நீர் செல்ல வழியின்றி தேங்கி நிற்பதால் அருகிலுள்ள வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

கோயம்புத்தூர் மாவட்டம், நல்லூர் பேரூராட்சியில் 9 மற்றும் 10-வது வார்டுகளில் அமைந்துள்ள சுப்பிரமணியன் நகரிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் அருகில் அமைந்துள்ள ஏரியில் விடப்பட்டு வந்தது. மேற்படி ஏரி தற்போது விளையாட்டுக் கழகத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டு சுற்றிலும் முள்வேலி அமைத்து சாக்கடை நீர் செல்லவிடாமல் அடைக்கப்பட்டுவிட்டது. இதனால் நீர்த்தேக்கம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து பேரூராட்சியால் மேற்படி சாக்கடை நீர் வெளியேற ஏதுவாக புல்டோசர் மூலம் வாய்க்கால்கள் ஏற்படுத்தி நீர் பூமியில் உறிஞ்சும் வண்ணம் தற்காலிகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தண்ணீர் தேங்காததால் தற்போது சுவர்கள் இடிந்துவிழும் நிலையில் இல்லை. தற்போது அமைக்கப்பட்டுள்ள வாய்க்காலின் இருபுறமும் கோரைப்புல் வளர்க்கவும், பூமியில் நீர் உறிஞ்சும் வகையில் புல் வளர்ப்பின் மூலம் தேங்கும் நீரின் அளவைக் குறைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவர அறிக்கையில் தற்காலிக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதேபோல தற்போது சுவர் இடிந்து விழும் நிலையில் இல்லை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நிரந்தரமாக அங்கே பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த இடத்திலே பெரிய சாலை மறியல் எல்லாம் நடைபெற்றது. நானே அந்த இடத்தை முழுமையாகச் சுற்றிப் பார்த்தேன். கிட்டத்தட்ட இரண்டு ஏக்கருக்கு மேல் சாக்கடைத் தண்ணீர் மட்டுமே தேங்கி நிற்கிறது. மண்ணிலே நீர் இறங்கி எல்லா சுவர்களின் அஸ்திவாரங்களிலேயும் இறங்கிவிடுவதால் நிரந்தரமாக வீடுகளில் ஈரம் இருந்துகொண்டிருக்கிறது. எந்த நிமிடமும் இடிந்து விழலாம் என்கிற அபாயம் இருக்கிறது. கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் தற்காலிகமாக அங்கு அத்தகைய நிலை இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அது ஒரு very serious-ஆன பிரச்சினையாக இருக்கிற காரணத்தால் இந்தப் பிரச்சினையில் அந்த நல்லூர் பேரூராட்சி மட்டுமே தன்னுடைய சொந்த நிதியிலிருந்து அந்தப் பகுதியிலிருந்து அவற்றை நொய்யல் வரையிலும் கொண்டு செல்வதற்குரிய அளவிற்கு நிதிநிலை வலுவாக இல்லை. எனவே, இதை ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதவேண்டுமென்ற முறையிலேயும் ஒரு சிக்கலான, நெருக்கடியான, உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய ஒரு பிரச்சினையாக இருக்கிற காரணத்தால் மாண்புமிகு உள்ளாட்சித்





துறை அமைச்சர் அவர்கள் இதை ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி எடுத்துக்கொண்டு அங்கிருந்து நொய்யலுக்குக் கொண்டு வருவதற்குரிய வாய்க்கால் அமைப்பதற்குரிய செலவை மதிப்பீடு செய்ய நிபுணர் குழுவை அனுப்புவதற்கும், அவற்றைச் செய்து முடிக்க ஏற்படும் செலவை ஏற்றுக்கொள்வதற்கும், சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்வதற்கும் மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கவன ஈர்ப்பு என்ற உடனேயே தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து வாங்கப்பட்ட தகவல் இது. இது நேரிடையாக நானோ அல்லது என் துறையில் உள்ள மேலதிகாரிகளோ பெற்ற ஒரு தகவல் அறிக்கை அல்ல. இருந்தாலும் அவர்கள் தற்போது இருக்கிற நிலையைத்தான் குறிப்பிட முடியும். ஆகையால் நேற்றையதினம் துறையில் அதுபற்றி தெரிவித்திருக்கிறேன். விரைவாக இங்கிருந்து ஒருவரை அனுப்பி அதை எப்படிச் சீர்செய்வது என்பதைத் தெளிவாகத் தெரிந்து, அதற்குப் பிறகு உரிய நடவடிக்கை எடுத்து நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன் என்பதை இந்த அவையின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-05*

## 5. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் மீண்டும், மீண்டும் ஞானசேகரனைக் கேட்டுக்கொள்வது, இந்த நிகழ்வு குறித்து அறிவிப்பு கொடுத்து இருக்கிறேன், என்ன ஆயிற்று என்று கேளுங்கள்.** இது நாளை எடுத்துக்கொள்ளப்படும். இதில் யார், யார் கொடுத்து இருக்கிறார்களோ அத்தனை பேருக்கும் பேச அனுமதி கொடுக்கப்படும். (குறுக்கீடு) என்ன Point of Order? நீங்கள் உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2000 ஏப்ரல் 11

முற்பகல் 11-10

**

முற்பகல் 11-15

**

**திரு. ச. அழகிரி:** Point of Order, Sir. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அழகிரி Point of Order கேட்கிறார். திரு. ஞானசேகரன், ஒரு நிமிடம் உட்காருங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவருடைய தீர்ப்பையே முடிவாகக் கருதி, இதுவரை நடைபெற்ற எல்லா விவாதங்களையும் நீங்கள் நீக்கிவிடலாம் என்று நான் ஆலோசனை வழங்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒட்டுமொத்தமாக எல்லா விவாதங்களையும் நீக்கிவிடுகிறேன்.

இப்போது கல்வி மானியத்தின்மீது விவாதம் தொடங்குகிறது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது உங்களுக்கு அதிலே என்ன சொல்ல வேண்டும்?

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எது சம்பந்தமாக இருந்தாலும் இப்போது அனுமதி இல்லை. (குறுக்கீடு) இது அவ்வாறு கிடையாது. நீங்கள் உட்காருங்கள். இப்பொழுதே மணி 11.17 ஆகிவிட்டது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



## 6. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும் —தொடர்ச்சி

### கோரிக்கை எண் 17-கல்வி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது கல்வி மானியத்தின் மீது விவாதம் தொடங்குகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன், பேசுங்கள். (குறுக்கீடு) எது சம்பந்தமாகவும் இப்போது இல்லை. இப்போது நேரம் இல்லை. திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுகின்ற உறுப்பினர்கள் அனைவரும் 10 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக்கொள்ளக் கூடாது. காரணம், இன்று இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியதாக இருக்கிறது.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**திரு. வி.கே. லட்சுமணன்:** அரசுக் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் கணிப்பொறிப் பாடத்தை அறிமுகப்படுத்தியதற்காகவும், அறிவியல் நகரத்தை உருவாக்கிட அரசு எடுத்துள்ள முயற்சிகளுக்காகவும், வேலைவாய்ப்பினை அளிக்கும் தொழிற் கல்வி, Vocational Education-ஐ கல்லூரிகளில் தொடர முன்வந்ததற்காகவும் நான் இந்த அரசைப் பாராட்டுவதோடு, விளையாட்டுத் துறைக்காகத் தனியாக ஒரு அமைச்சகத்தை ஏற்படுத்தியதற்காகவும் நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** ஆனால், அதே நேரத்திலே, சென்னைப் பல்கலைக்கழகத்திலே அண்மையிலே ஒரு தேர்வு நடைபெற்று இருக்கிறது. அந்தத் தேர்விலே, சிண்டிகேட்டைச் சேர்ந்த உறுப்பினர்கள், ஒவ்வொருவருக்கும் 0.5 சதவிகிதம் மதிப்பெண்களை அளிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அங்கேயிருந்த ஆசிரியப் பெருமக்கள் எல்லோருக்குமாக அந்த 0.5 சதவிகிதத்தை அளித்து,

பல இடங்களிலே ஒரு நபருக்கு 10 முதல் 15 மார்க்குகள் கூட, கூடுதலாகக் கிடைக்கின்ற அளவிற்கு நிலைமை போய் அவர்கள் Pass செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

(முற்பகல் 11-20

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** ஒரு சிறிய விளக்கம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு பல்கலைக்கழகத்திலேயிருந்து கிடைத்த விவரத்தின்படி, யார் யாருக்கு புள்ளி ஐந்து, அதாவது அரை மார்க் சேர்க்கப்படுவதன் மூலமாக, அந்த 'பார்டர்'லிருந்து அவர்கள் விடுபடுவார்களோ, அவர்களுக்குத்தான் செய்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. 49.5 வருமானால், அவர்களுக்கு 50 ஆக்க வேண்டும்; 59.5 வருமானால், 60 ஆக்க வேண்டும் என்று அந்த margin-இல் வருகிறவர்களுக்காகச் செய்யப்பட்டதாகப் பல்கலைக்கழகத்திலேயிருந்து ஒரு செய்தி வந்திருக்கிறது.

இரண்டாவது, அது இந்த அரசாங்கத்தின் நேரடிப் பொறுப்பு அல்ல. "பல்கலைக்கழகம் is more autonomous than other autonomous collegs." அவர்கள் ஆட்சிக் குழுவிலே தீர்மானிக்கவும், அதிலே ஏதேனும் சிக்கல் வருமானால், நீதிமன்றத்திலே போய் அவர்களே நியாயம் பெறவும், அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கிற காரணத்தால், பல்கலைக்கழகத்தினுடைய இந்த நடவடிக்கையைப் பற்றி நேர்முகமாக அரசு ஒரு திட்டவட்டமான கருத்தைத் தெரிவிக்கக்கூடிய வாய்ப்பு இல்லை.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த margin-இல் இருக்கிற மாணவர்களுக்கு புள்ளி ஐந்து சதவிகிதம் கூடுதலாக மதிப்பீடு கொடுப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், சிண்டிகேட் எடுத்த இந்த முடிவைத் தவறாகப் பயன்படுத்தி, மார்க் போடுகிறவர்கள், 10, 15 மாணவர்களுக்குக் கூடுதலாக மார்க்கைப் போட்டு, அவர்களை வெற்றிபெறச் செய்திருக்கிறார்கள் என்பதைத்தான் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



அதுமட்டுமல்லாமல், தொழிற் கல்வி நுழைவுத் தேர்விலே கேள்வியே தவறு என்று 3 கேள்விகளைப் பற்றி இங்கே செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. தொழிற் கல்வி நுழைவுத் தேர்விலே வினாத் தாள்களிலே வருடா வருடம் சில தவறுகள் நடந்து வருகின்றன என்று மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடம் நடத்துபவர்கள் கருதுகின்றனர். கடந்த 1999 ஆம் ஆண்டு நுழைவுத் தேர்வின் வினாத் தாளிலேகூட, கணிதவியல் வினாத் தாளில் 3 வினாக்களிலும், வேதியல் பாட வினாத் தாளிலே 2 வினாக்களிலும்...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு ஒருவேளை அதுபற்றி சரியான விளக்கங்கள் கிடைத்து, அதைச் சொல்லக்கூடிய வாய்ப்பு அவர்களுக்கு இருக்கலாம். அமைச்சருக்கு அவ்வளவு திறமை கிடையாது. ஏனென்றால், யாரும் அமைச்சராக இருக்கக்கூடும். என்னைப் பொறுத்தவரையில், கேள்வித் தாளிலே எது தவறு என்று சொல்லக்கூடிய தகுதி எனக்குக் கிடையாது. அப்படி எதுவும் இருக்குமானால், ஆங்காங்கே அதற்கான கவுன்சில் இருக்கிறது. Examination நடத்த — Academic body-கல்வியாளர் குழு இருக்கிறது. அவர்களுக்குத் தெரிவிக்கப்படுமானால், அவர்கள் அதை ஆய்வு செய்து, அந்தக் குறைபாடுகளைப் போக்க அவ்வப்போது நடவடிக்கை எடுக்கிறார்கள். அதற்கு யார் வேண்டுமானாலும் தெரிவிக்கலாம்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** அதற்குரிய ஆதாரங்களை நான் அமைச்சர் அவர்களிடத்திலே அளிக்க விரும்புகிறேன்.

(உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன், சில தாள்களை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்தில் தந்தார்.)

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரவு-செலவு அறிக்கையிலே 6,000 பள்ளி ஆசிரியர்களுக்கு வேலையளிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளியாசிரியர்கள், இடைநிலைப் பள்ளியாசிரியர்களா, அல்லது பட்டதாரி ஆசிரியர்களா, அவர்கள் எந்த ஆசிரியர்கள் என்ற விவரம், அதிலே தெளிவாகச் சொல்லப்படவில்லை. அதுமட்டுமல்ல; இப்போது இருக்கிற காலிப பணியிடங்கள் 6,000 மட்டும்தானா? இன்னும் எவ்வளவு பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்பதையும் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், கடந்த பல ஆண்டுகளாக பட்டதாரி எஸ்.சி., எஸ்.டி. மாணவர்கள், ஏறத்தாழ 2425 பேர் வேலை இல்லாமல் இருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்கு விரைவாக வேலை கொடுப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சின்னாளப்பட்டியில் தேவாங்கர் சமுதாயம் நடத்துகிற ஒரு பள்ளி; அந்தப் பள்ளிக்கு அங்கீகாரம் பெறாமல், அந்தச் சங்கமானது நடத்துகிறது. தலைமையாசிரியர் என்று ஒருவரை நியமித்து, 8 ஆண்டுகளாக அவர் அந்தப் பணியிலே இருந்துக்கொண்டிருக்கிறார். ஆனால், அரசு அதை அங்கீகரிக்கவில்லை; பணம் கொடுக்கவில்லை. இருந்தாலும்கூட, அந்தப் பள்ளியானது, அவரைத் தலைமையாசிரியராக ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால், உரிய முறையிலே அளிக்க வேண்டிய அனுமதி கொடுக்காமல், அவரை அங்கே தலைமையாசிரியராக நியமித்து இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; ஒரு ஆசிரியர் மீது தவறுதலாக நடவடிக்கை எடுத்து, அதன் பின்னாலே அவர் நீதிமன்றத்திற்குப் போய், நீதிமன்றமும் மற்றும் முதலமைச்சருடைய பிரிவிலிருந்தும் — Chief Minister Cell -லே இருந்தும்கூட அவருக்கு நிலுவை ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று தாக்கீது வந்து, அதன் பின்னாலேகூட பல ஆண்டுகளாக அவருக்கு நிலுவை ஊதியம் வழங்கப்படாமல் இருக்கிறது. அங்கீகரிக்கப்படாத, பதிவு செய்யப்படாத அந்தச் சங்கத்தின் மூலமாக நடைபெறுகிற அந்தப் பள்ளியினுடைய சட்ட முறைகளை அரசு கவனித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

அதுமட்டுமல்லாமல், பட்டதாரி ஆசிரியர் — ஏறத்தாழ நம்முடைய பட்டதாரி ஆசிரியர்களுக்கு — அவர்கள் நேர்முகத் தேர்விற்கு வருகின்றபோது 40 வயதிற்கு மேல் ஆகிவிடுகிறது. பல சமயங்களில் 45 வயதுகூட ஆகிவிடுகின்றது என்று நான் கேள்விப்படுகிறேன். ஒருவருக்கு 56-வது வயதில் நேர்முகத் தேர்விற்கு ஆணை வந்து, 2 ஆண்டுகள் பணிபுரிந்து, 58 வயதிலே அவர் ஓய்வு பெற்றிருக்கிறார் என்பதைக்கூட நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, இந்த 2 இலட்சம் பட்டதாரி ஆசிரியர்களுக்கு விரைவாக வேலை கொடுப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு . . .



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நாடு அறிந்தவர்கள். நாட்டு நிலவரம் தெரியும். இரண்டு இலட்சம் பேருக்கு வேலை கொடுப்பதற்கு வேறு எந்த அரசாங்கம் வந்தாலும் முடியாது. மத்திய அரசாங்கத்தினாலேகூட முடியாது. படிப்பது, கல்வி பெறுவது என்பது ஒன்று. தகுதி பெற்ற காரணத்தால் வேலையிலே இடம் பெறுவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. உரிமை உள்ளவர்களுக்கெல்லாம் வேலை கொடுப்பதற்கான வாய்ப்பு அரசாங்கங்களுக்கு கிடையாது. அமெரிக்கா உட்பட.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுவதற்கு முக்கியமான காரணம், 45 வயதிலே அவர்கள் பணிக்குச் செல்கிறபோது, அவர்கள் படித்த பாடத்தை எல்லாம் மறந்து இருப்பார்கள். பல இடங்களிலே அவர்களுடைய குழந்தைகள் Secondary Grade Teacher-ஆக வந்து விடுகிறார்கள். ஆனால், இவர் பட்டதாரி ஆசிரியராக வர முடியவில்லை. இதுதான் நம்முடைய கல்வித் தரம் கீழே போவதற்குக் காரணமாக இருக்கிறது என்பதைக்கூட நான்....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆண்டவன் படைப்பிலே சில பேரை 6 வயதிலேயே அழைத்துக் கொண்டு போகிறான், சில பேரை 90 வயதிலே அழைத்துப் போகிறான். ஆண்டவன் படைப்பிலேயே அப்படி இருக்கும்போது, சாதாரண மனிதத் திறமையினாலே என்ன செய்ய முடியும் என்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர்தான் எனக்கு ஆலோசனை வழங்க வேண்டும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** 1986 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி அவர்கள் அறிவித்த National Educational Policy, (N.E.P.)-என்று சொல்கிறார்களே, அதிலே கல்விக்கு வேறு ஒரு பெயர் கொடுத்து இருக்கிறார்கள், Human Resources Development-மனித வள மேம்பாடு என்று. அப்படி மனித வள மேம்பாடு என்று சொல்கிறபோது, கல்விக்கு செலவிடுகிற பணத்தை முதலீடு என்றுதான் சொல்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டிலே, சென்ற ஆண்டு பள்ளிக் கல்விக்காக மொத்த வருவாயிலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பத்து நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. வி.கே. லட்சுமணன்:** பள்ளிக் கல்விக்காக மொத்த வருவாயிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 17.78 சதவிகிதம். இந்த ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அது அதிகமாகி விடவில்லை. 0.24 சதவிகிதம்தான் அதிகமாகி இருக்கிறது. அதேபோல, உயர் கல்விக்குக்கூட, சென்ற ஆண்டு மொத்த செலவிலே 4.86 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த ஆண்டு அது 3.77 சதவிகிதமாகக் குறைந்து இருக்கிறது. அதாவது, 1.09 சதவிகிதம் குறைந்து இருக்கிறது. ஆக, இந்த முதலீடு என்பது உயர் கல்விக்கு செய்யப்பட வேண்டியது. ஆனால், உயர் கல்விக்காகச் செய்யப்படாமல் குறைக்கப்படுகிறது என்பதைத்தான் நான் இப்போது சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே, கலைக் கல்லூரிகளைப் பொறுத்தமட்டிலே, அரசு கலைக் கல்லூரிகள் 60-ம், உதவிபெறும் கல்லூரிகள் 133-ம், உதவி பெறாத கல்லூரிகள் 172-ம் இருக்கின்றன. ஒட்டுமொத்தமாக அரசாங்கம் அளிக்க வேண்டிய கல்வியை, இந்தத் தனியார் துறை அளித்து அரசாங்கத்தினுடைய பளுவை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் இந்தக் கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களையும் நல்ல முறையில் ஆய்வு செய்து, ஆலோசனை வழங்க வேண்டிய மாநில உயர் கல்வி மன்றமானது, என்ன செய்கின்றது என்று தெளிவாகத் தெரியவில்லை.

முற்பகல் 11-30

சென்ற ஆண்டு ஒரு அறிக்கை கொடுத்தார்கள். இப்பொழுதுகூட, எல்லா பல்கலைக்கழகத்திற்குமான ஆண்டு அறிக்கைகளை இங்கே வந்ததற்குப் பிறகுதான் பார்த்தோம். ஒருவேளை நேற்றைக்குக் கொடுத்திருந்தால், அதைப் படித்துப் பார்த்திருக்கலாம். இங்கே வந்த பின்னால்தான் அந்த ஆண்டறிக்கைகளை நான் இங்கே பார்க்க முடிந்தது. ஆனால், அதிலேகூட, மாநில உயர் கல்வி மன்றத்தினுடைய அறிக்கை இங்கே காணவில்லை என்பதை நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மாநில உயர் கல்வி மன்றமானது, பல்கலைக்கழக மானியக் குழு எதை விரும்புகிறதோ, அதை



நிறைவேற்றுவதற்கு உதவியாக இருக்க வேண்டும். குறிப்பாக, இதற்காக, ரஸ்தோகி கமிட்டியினுடைய ஆலோசனைகளில், நம்முடைய தமிழக அரசு சில ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதாவது G.O. 111 மூலமாக, சில ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதில் முதல் ஆலோசனையாக சொல்லப்பட்டிருப்பது ஒவ்வொரு கல்லூரியும் ஒரு ஆண்டிலே 150 நாட்கள் பணியாற்ற வேண்டும் என்பதுதான். அதை இங்கே ஏற்றுக்கொண்டதாகச் சொல்ல முடியாது.

அதேபோல், பல்கலைக்கழக மானியக் குழு, ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மாதிரி பல்கலைக்கழகத்தை உருவாக்க வேண்டுமென்று விரும்புகிறது. அதற்கும், இந்த மாநில உயர் கல்வி மன்றம் எந்த முயற்சியும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவை குறித்துப் பின்னர் நான் பதில் சொல்வதென்றால் சரியாக வராது. ஏனென்றால், பல்வேறு பிரச்சினைகள் எழுப்பப்படும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணன் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ரஸ்தோகி குழுவினுடைய கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதை நடைமுறைப்படுத்துவதற்குக் கல்லூரிக் கல்வித் துறை இயக்குநர், ஆசிரியர் சங்கங்களை அழைத்து 180 வகுப்பு நாட்கள் நடைபெற வேண்டுமென்று, இரண்டு பருவமாக, நடைபெற வேண்டுமென்று ஏற்றுக்கொள்ளச் செய்திருக்கிறார்கள். அதை ஆசிரியர்கள் சங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. நடைமுறைப்படுத்த முடியும் என்று — நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள்.

மற்றொன்று, மாதிரிப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற ஆலோசனை. இருக்கிற பல்கலைக்கழகம் எதனை வேண்டுமானாலும் மாதிரியாக்கலாம். மாதிரியாக்குவதற்கு தேவை அவ்வப்போது, அங்குள்ள பல்கலைக்கழகப் பாடத் திட்டக் குழுக்கள், புதிய, புதிய பாடங்களைக் கொண்டுவந்து அல்லது தரம் உயர்த்தி, தகுதியை உயர்த்தி வளர்ப்பதுதானேதவிர, மாதிரிப் பல்கலைக்கழகம் என்ற ஒரு ideal பல்கலைக்கழகம் வர முடியாது. அப்படி, ஒன்று வந்தது என்றாலும், அடுத்த 5 வருடங்களிலே வேறு ஒரு மாதிரி பல்கலைக்கழகம் தேவைப்படும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவையிலே பாரதியார் பல்கலைக்கழகம் இந்த செமஸ்டரிலே வெறும் 43 நாட்கள்தான், எங்களுடைய கல்லூரி ஆசிரியர்களைப் பணியாற்றச் சொல்லியிருக்கிறது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், பல்கலைக்கழக மானியக் குழு தகுதியுள்ள எல்லா கல்லூரிகளுக்கும் தன்னாட்சி வழங்க வேண்டும். அதற்கு அரசு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அதில், தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டிலே வெறும் 44 கல்லூரிகள்தான் இங்கே தன்னாட்சி பெற்றிருக்கின்றன. மீதம்.....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எல்லா விவரங்களும் தெரியும். இருந்தாலும், வாதாட வேண்டுமென்பதற்காகச் சொல்கிறார். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் தன்னாட்சிக் கல்லூரிகள் அதிகம். வேறு எந்த மாநிலத்திலும் இவ்வளவு கல்லூரிகள், தன்னாட்சி பெற்ற கல்லூரிகள் இல்லை. இரண்டாவது, தன்னாட்சி வழங்குவது என்பது, பல்கலைக்கழகம் ஒரு ஆய்வுக் குழுவினை அனுப்பி, அந்தக் கல்லூரிகள் உரிய அளவிற்கு எல்லாவிதமான வசதிகளையும் பெற்று, தரமான பாடங்களை நடத்துகின்றனவா என்பதை ஆய்ந்து, அவர்கள் கருத்து தெரிவித்து அந்தப் பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டு, அதற்குப் பின்னர் பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு அனுப்பி அவர்கள் ஒப்புக்கொண்டால்தான் தன்னாட்சி வழங்க முடியும். அப்படி பெற்றிருக்கக்கூடிய கல்லூரிகளை இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் அதிகமாகப் பெற்றிருக்கிறோம். புள்ளிவிவரம் என்னிடத்திலே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லட்சுமணன் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** சீக்கிரம் பேசி முடித்துக்கொள்கிறேன். இரண்டு முக்கியமான கருத்துக்கள் இருக்கின்றன. சீக்கிரம் பேசி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, National Council for Assessment and Accreditation என்ற ஒரு கவுன்சில் இருக்கிறது. அந்தக் கவுன்சில் கல்லூரிகளை ஆய்ந்து அவர்களுக்கு grade கொடுக்கிறது. ஆனால், கல்லூரி மட்டுமல்ல, பல்கலைக்கழகத்திலும் அப்படிக் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ரஸ்தோகி கமிட்டி என்ன சொல்கிறது என்று சொன்னால், கல்லூரி



மட்டுமல்ல, பல்கலைக்கழகமும் அதற்கு உட்படுத்தப்பட வேண்டுமென்று சொல்லி இருக்கிறது. தமிழ்நாட்டிலே இருக்கிற 11 பல்கலைக்கழகங்களிலே, வெறும் 6 பல்கலைக்கழகங்கள் மட்டும்தான் அதற்கு விண்ணப்பம் செய்திருக்கின்றன. எனக்குள்ள சந்தேகம் எல்லாம், எங்காயினும் பல்கலைக்கழகங்களைக் காட்டிலும், கல்லூரிகள் அதிக மதிப்பெண் பெற்றுவிட்டால், ஒருவேளை கேவலமோ என்று நினைத்து, அந்தப் பல்கலைக்கழகங்கள் விண்ணப்பம் செய்யவில்லையோ என்று நான் கருதுகிறேன்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அப்படி இருக்க முடியாது. ஏனென்றால், கல்லூரிக்கு ஒரு தர வாய்ப்பாடு, பல்கலைக்கழகத்திற்கு வேறொரு தர வாய்ப்பாடுதான் இருக்கலாகும். Different meters— கல்லூரிக்கு வேறு தகுதி, பல்கலைக்கழகத்திற்கு வேறு தகுதி முறை இருக்கும். கல்லூரியினுடைய நிலையை வைத்துத்தான் அந்தத் தரம் தீர்மானிக்கப்படுகிறது. ஆகவே, அது காரணம் அல்ல. எல்லா பல்கலைக்கழகங்களும், எல்லா வகையிலேயும் முன்னின்று இந்தத் தரத்தைப் பெறுவதற்கு முயற்சிக்காமல் இருக்கலாம். அவர்கள் முயற்சிக்க வேண்டுமென்று நாம் கேட்டுக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லட்சுமணன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன். ரஸ்தோகி கமிட்டி இன்னொரு கருத்தையும் சொல்லியிருக்கிறது. கல்லூரிகளிலே முதுகலைப் படிப்பை சொல்லிக் கொடுப்பதற்கு பேராசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று சொல்லி இருக்கிறது. தமிழ்நாட்டிலே அது போன்ற நிலைமை இல்லை. எனவே, அரசு, முதுகலைப் படிப்பைச் சொல்லிக் கொடுப்பதற்குப் பேராசிரியர்களை நியமிக்க வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இந்த Centre of Excellence என்பது ஏதோ பல்கலைககழகத்தில் மட்டும்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. கல்லூரியிலும் இருக்கலாம். ஒரு காலத்திலே, நவோதயா கல்வி வரவேண்டும் என்று சொன்னபோது, அதற்கு மாற்றாக இந்த Centre of Excellence-ஐச் சொன்னார்கள். நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம், பல்கலைக்கழகத்தில் மட்டும் அல்லாமல், கல்லூரியிலும் இந்த Centre of Excellence-ஐ

உருவாக்குவதற்கு அரசு முன்வர வேண்டும் என்பதுதான். தமிழ்நாட்டிலே ஆங்கிலக் கல்வியினுடைய தரம் உயர வேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறோம். தமிழ்நாட்டிலே இருக்கிற பல பள்ளிகளிலே ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர்கள் ஆங்கிலத்திலே பட்டம் பெற்றவர்களாக இல்லை. English literature-லே பட்டம் பெற்றவர்களாக இல்லை. ஆகவே, ஆங்கிலம் படித்த பட்டதாரிகளை அந்தப் பணிக்கு நியமிக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, அரசாங்கத்தினுடைய பெரிய சுமையைக் குறைக்கிற இந்தத் தனியார் கல்லூரி நிறுவனங்களுக்கு பல்கலைக்கழகத்திலே சிண்டிகேட்டிலும், செனட்டிலும் உரிய இடம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், (மணியடிக்கப்பெற்றது) இந்த Private Colleges Regulation Act என்பது, அது வந்த காலத்திலே சரியாக இருந்திருக்கலாம். அது வந்தபோது, சுயநிதிக் கல்லூரி இல்லை. ஆனால், அதற்குப் பின்னாலே நிறைய Unaided Colleges வந்து விட்டதினாலே இதை Aided Colleges Regulation Act என்று மாற்ற வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பாலிடெக்னிக்கைப் பொறுத்தமட்டிலே, இன்றைக்கு ஒற்றைச் சாளர முறை தோற்றுவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். சான்றாக இன்றையதினம், பாலிடெக்னிக்கிலே சுமார் 43,600 இடங்களிலே 16,500 இடங்கள்தான் நிரப்பப்பட்டிருக்கின்றன. பாக்கி இடங்களெல்லாம் காலியாக இருக்கின்றன. ஆகவே, இந்த ஒற்றைச் சாளர முறையை மாற்றி மண்டல வாரியாக இதைச் செய்தோம் என்று சொன்னால், ஏழை மாணவர்கள் கிராமங்களிலேயிருந்து சென்னைக்கு வந்து சேருகின்ற அந்தத் துன்பத்திலேயிருந்து காப்பாற்றப்படுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 20 நிமிடங்கள் ஆகின்றன. அடுத்து, திரு. கோ. மோகனதாசன்.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 2000-2001 ஆம் ஆண்டு கல்வி மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பு அளித்தமைக்கு தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்விக்காக இந்த ஆண்டு நம்முடைய அரசு, நம்முடைய மொத்த வருமானத்தில் நான்கில் ஒரு பங்கு என்று எண்ணுகின்ற அளவுக்கு 4648 கோடியே 95 இலட்சம் ரூபாயை கல்விக்காக ஒதுக்கீடு



செய்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இதுமட்டுமல்லாமல், வேளாண்மைத் துறை மூலமாகவும், கால்நடைத் துறை மூலமாகவும், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாகவும், ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாகவும் பல்வேறுபட்ட வகையிலே நம்முடைய அரசு நிதி ஒதுக்கியிருப்பது உண்மையிலேயே ஏழை மக்களின் வாழ்க்கையினை முன்னேற்றுவதற்கான ஒரு திட்டமாகும். மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் என்ற முறையிலே 60,000 பெண் குழந்தைகளுக்கு படிப்பிற்காக ஒரு வருடத்திற்கு 500 ரூபாய் வீதம் வழங்குவது உண்மையிலேயே பாராட்டத்தக்கது. அதுமட்டுமல்லாமல் 5-வது முதல் 6-வது வரையிலே படிக்கின்ற மாணவிகளுக்கு ஒரு மாதத்திற்கு 100 ரூபாய் வீதம் 30,000 ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்கத்தக்கது. அனைத்துக் கல்லூரிகளிலும் கணினி பயிற்சி பெற கணினிகள் — Computers மற்றும் இணையத்தை — Internet-ஐ உபயோகிப்பதற்கான செயல் அறிவு அன்றாட வாழ்வியலில் தவிர்க்க இயலாத ஒன்றாகி விட்டது. கணினி மற்றும் இணையத்தில் செயல்திறன் உடைய பணியாளர்கள் அதிக ஊதியம் பெறுவதுடன், இந்தக் கணினி அறிவு இல்லாத மாணவர்கள் வேலைவாய்ப்பிற்கான போட்டியில் தவிர்க்கப்படும் நிலை ஏற்படுகிறது. மிகவும் அதிக அளவிலான பயிற்சிக் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு அதற்கு ஈடான தரமுடைய கல்வியைத் தராத, காளான்கள் போல் பெருகிவிட்ட தனியார் கணினி பயிற்சி நிறுவனங்களின் வளர்ச்சி தற்போது கல்லூரிகளில் அளிக்கப்படும் மரபுசார் கல்வித் திட்டத்தின் குறைபாட்டுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

முற்பகல் 11-40

இன்றைய நிலையில் பொருளியல், நிதி, புள்ளியியல் மற்றும் இதுபோன்ற பல்வேறு துறைகளில் திறமை பெற்றிருப்பினும், அத்துடன் கணினியைப் பயன்படுத்துவதிலும் திறமை பெற்றவர்களுக்கே வேலை வாய்ப்புக்கான கூடுதல் சாத்தியக்கூறுகள் உள்ளன. கணினி மற்றும் இணையப் பயன்பாட்டு அறிவு மாணவர்களுக்கு இருப்பின் எந்தப் பொருள் குறித்தும், எந்த ஒரு கல்லூரி நூலகமும் தர இயலாத அளவிற்கு மிகக் கூடுதலான விவரங்களைப் பெறுவதற்கு பயனுள்ளதாக அமையும். எனவே, 21 ஆம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்க உள்ள இத்தருணத்தில், எந்தப் பாடப் பிரிவில் பயின்று வந்தாலும் அனைத்து இளங்கலைப் பட்ட வகுப்பு கல்லூரி மாணவர்களுக்கும் கணினி மற்றும் இணையம் சார்ந்த கல்வி அறிவைப் புகட்ட வேண்டும்

[திரு. கோ. மோகனதாசன்] 

என்ற இலட்சியத்தை – மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் கலை மற்றும் அறிவியல், பொறியியல், சட்டம் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் — இத்திட்டத்தினை 2000-2001 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தச் சொல்லியிருக்கிறார்கள். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் பெரும்பான்மையினர் ஏழைக் குடும்பங்களைச் சார்ந்தவர்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் இத்திட்டம் பெரிதும் உதவும். மேலும் இது மிகவும் பயனுள்ளதாகவும் இருக்கும். இத்திட்டம் இந்தியாவிலேயே ஒரு புரட்சிகரமான திட்டமாகும். இதை நாங்கள் வரவேற்கிறோம். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கணினி பயிற்சித் திட்டத்திற்கு வழங்கிவரும் முக்கியத்துவத்தைப் போற்றுவதுடன் தமிழ்நாட்டில் இளைஞர்களின் எதிர்காலம் பொன்னானதாக அமையும் என்பதை முழுமையாக நம்புகிறோம்.

மேலும், இந்தியாவிலேயே முதன்முதலாக கலைஞர் ஆட்சியில் கடந்த ஆண்டு கணினி கல்வித் திட்டம் 666 அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்பட்டது. ஒரு பள்ளிக்கு 40 மாணவர்கள் வீதம் இதுவரை சுமார் 25,000 மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் கணினி பயிற்சி பெற்றுவருகிறார்கள். கடலூரிலிருந்து தக்கலை வரை, ஆண்டிப்பட்டியிலிருந்து குன்றத்தூர் வரை உள்ள கிராம மக்கள் கணினி பயிற்சி பெற்றுள்ளார்கள். கணினி என்றால் என்னவென்றே பார்க்காத கிராமப்புறங்களில் வசிக்கின்ற தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மக்களுக்கு இத்திட்டம் ஒரு வரப்பிரசாதமாகும். தமிழகத்தில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தை மற்ற மாநிலங்களும் பின்பற்றி வருகின்றன. இத்திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தி, விடுபட்ட அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும் இந்த ஆண்டு செயல்படுத்தப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தார்கள். இது ஒரு மிகச் சிறந்த திட்டமாகும். இத்தகைய திட்டத்தினை நாங்கள் வரவேற்கிறோம்.

என்னுடைய தொகுதியிலே சில பள்ளிகள் இருக்கின்றன. அவற்றை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, சங்கரன்பந்தல் அரசு உயர்நிலைப்பள்ளியில் அதற்காக ரூ. 2 லட்சம்



 [திரு. கோ. மோகனதாசன்]

பணம் கட்டியிருக்கிறார்கள். அதை இந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, திருவெண்காட்டிலே இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அவை அறநிலையத் துறைக்குச் சொந்தமான பள்ளிகள். அந்தப் பள்ளிகளை அறநிலையத் துறைக்குச் சொந்தமான பள்ளிகள் என்று ஒதுக்கிவிடாமல், அவற்றையும் அரசு சார்ந்த பள்ளிகளாகக் கருதி, இரண்டு உயர்நிலைப் பள்ளிகளையும் — ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொரு பள்ளியிலும் 100 பேருக்கு மேல் 10 ஆம் வகுப்பு படித்துத் தேறி, பிற இடங்களுக்குச் செல்ல முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த திருவெண்காடு எஸ்.எஸ்.டி. ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, பெண்கள் உயர்நிலைப்பள்ளி இரண்டையும் — மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தில்லையாடியிலே ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. தில்லையாடி வள்ளியம்மையின் பெயரால் இயங்கிக் கொண்டிருக்கின்ற அந்தப் பள்ளியையும் மேல்நிலைப் பள்ளியாக ஆக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செம்பனார்கோவிலில் இயங்கிக்கொண்டிருக்கிற அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இடம் பற்றாக்குறையாக உள்ளது. அதற்கு இட வசதி செய்து கொடுக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அதற்கு கட்டடங்கள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

முற்பகல் 11-45

**HON. DEPUTY SPEAKER:** Tmt. Anne D' Monte.

***TMT. ANNE D' MONTE:** Hon. Deputy Speaker, Sir, Anglo Indian Schools have the right to cater to the needs of the community and the basic tenet for such schools is the medium of instruction which is English, the mother tongue of the Anglo Indian Community. Therefore, English has always been the first language of study and any other language of study has been considered as the second language. Even to make English as the second language, though the medium of instruction be unchanged, is an infringement of our fundamental rights and as such unconstitutional.

At the Adhoc Committee meeting of the members of the State Board for Anglo Indian Education, the move by the Government to make English as the second language and Tamil as the first language was opposed with regard to Anglo Indian Schools. Despite our opposition, an order was issued by the Secretary to the Director of Primary School Education which reads as follows:—

"In all schools, including Matriculation, Government and Government aided schools and self financing schools, the first language must be Tamil".

This is definitely against all norms of justice and truth, for Tamil as the first language would never be accepted by the State Board of Anglo Indian Schools.

My next Point...

**HON. PROF. K. ANBAZHAGAN:** Mr. Deputy Speaker, Sir, I would like to clarify the point raised by the Hon. Member. The Government have accepted that English alone is the mother tongue of the Anglo Indian Community and therefore, there is no question of introducing Tamil as the medium of instruction in Anglo Indian Schools. But, on the other hand, in the State, every school should adopt only Tamil as the first language and they have to record English as the second language. As far as the Anglo Indian Institutions are concerned the second language will be the medium of instruction and therefore, there is no question of intruding into their rights.

**TMT. ANNE D' MONTE:** Hon. Deputy Speaker Sir, I thank the Hon. Minister for clarifying my point. My next point would be the fee compensation grant given by the Government for the Anglo Indian children studying in Anglo Indian Schools, which is grossly inadequate as per the present rates of fees approved by the Inspector of Anglo Indian Schools and levied by the Schools. The Government rates for Anglo Indian Children are Rs.100 per month for Standards XI and XII and Rs.50 per month for Standards V to X. The actual cost per student between Standards V and XII is nothing less between Rs.200-450 per month. This is the cost per student to educate in the Anglo Indian Schools.



Quite frankly, I feel that because of the inadequate payment of grants, this is being used an instrument for garrotting our schools. I can well understand why our schools find it more convenient to admit non-Anglo Indian fee paying students and denying admission to students of the community. An unhappy consequence of inadequate payments of grants is that the Anglo Indian Community is perhaps the only community whose children are not getting the type of assistance under Article 45, i.e. to provide free and compulsory education to all children until they complete the age of 14. This injunction is, in fact, meaningless for the Anglo Indian Community.

I raised this issue last year and I again request the Government to enhance these amounts to the current rates of fees prevailing in each school.

Further, compensation for Standards X and XII should be for the whole year and not for 10 months only.

Audit of Accounts should be taken up once a year and sufficient staff should be posted to take up the audit of Anglo Indian Schools. A new Audit Code should be formulated in accordance with the present day cost of living.

Appointment of Library Clerk for the Anglo Indian Schools should be permitted for schools with adequate library facilities. This matter is pending since 1988 and it is, therefore, necessary that Government should issue suitable orders for the appointment of Library Clerk with retrospective effect.

I have to take up another matter, which concerns G.O.79, dated 18-1-1990, regarding appointment of teachers in languages according to which,

"Fifty percent of the substantive vacancies shall be filled by direct recruitment and out of this ten percent from among qualified secondary grade teachers under all kinds of managements i.e. Aided, Panchayat and Government Schools."

This order appears to be observed more in the breach as according to my information, in 1998-99 there were 613 teachers directly recruited and only 4 instead of 61 teachers from among the staff were recruited. In 1999-2000, there were 290 directly recruited teachers and only 15 were recruited from among the staff, instead of 29.

I request the Government to look into these anomalies and rectify them accordingly.

Thank you, Sir.

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாநில அரசின் சார்பாக முன்வைக்கப்பட்டிருக்கிற கல்வி மானியக் கோரிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகின்றேன்.

தேசிய அளவிலும் மாநில அளவிலும் கடைபிடிக்கப்படுகிற கல்விக் கொள்கை குறித்து விரிவான விவாதம் நடத்த வேண்டிய அவசியமும் தேவையும் இருந்தாலும் அதற்குரிய காலம் இல்லை என்கின்ற காரணத்தால் சுருக்கமாக அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சில விஷயங்களைத் தொட்டுக்காட்டி முடிக்க விரும்புகிறேன்.

இங்கே இருக்கிற நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எனது பெருமதிப்பிற்குரிய திராவிட இயக்கத்தினுடைய மூத்த தலைவர். நான் அவரைப் பெரிதும் மதிக்கின்றவன். அவருடைய அப்பழுக்கற்ற சமூக விழிப்புணர்வுக்கான பங்களிப்பை ஒவ்வொரு எழுத்தும், சொல்லும் மதிப்பிற்குரியவை என்ற முறையில் மதிக்கின்றவன் என்ற முறையில் இருந்துதான் நான் அவரால் முன்வைக்கப்பட்டிருக்கிற இந்த கல்வி மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களை நினைவுபடுத்துவது காலத்தின் தேவை என்று கருதுகிறேன். கல்வி என்பது சூழ்நிலையைப் பொறுத்த விஷயம்தான். கல்வி வழங்குவதற்குரிய சூழ்நிலை எப்படியிருக்கிறது என்பதைப் பொறுத்தே கல்வி அமையும் என்பது ஒரு புதிய கண்டுபிடிப்பு அல்ல. உலக அளவில் கல்வியாளர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு விஷயமே ஆகும். தமிழ்நாட்டில் கல்விச் சூழ்நிலை எப்படியிருக்கிறது என்பதைப் பரிசீலிப்பதற்கு முன்னால், இந்தியாவினுடைய கல்விச் சூழ்நிலை எப்படியிருக்கிறது என்பதையும் பரிசீலிக்க வேண்டியது அவசியம் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். துரதிருஷ்டவசமாக இந்தியாவில் இன்றைக்கு நஞ்சு கலந்த, துருப்பிடித்த சிந்தனைக்குச் சொந்தக்காரர்கள்தான் மத்திய மனித வள மேம்பாட்டுத் துறைக்கு



மந்திரிகளாக இருக்கிறார்கள். அத்தகைய சிந்தனைக்கு இரையாகிவிட்டவர்களால் உருவாக்கப்படுகிற கல்விச் சூழல் எப்படியிருக்கும் என்று சிந்திக்கிறபோது உண்மையிலேயே வேதனைப்படுகிறேன்.

எதிர்கால இந்தியாவினுடைய ஒளிமயமான வாழ்க்கை பாழாக்கப்படுவதற்குரிய எல்லா வேலைகளும் இன்றைக்கு இந்தியாவில் செய்யப்பட்டு வருகின்றன என்பதைப் பல்வேறு விவரங்களிலிருந்து என்னால் நிரூபித்துக்காட்ட முடியும். நான் அதுபற்றிய விவரங்களுக்குள்ளே இப்போது போக விரும்பவில்லை. நம்முடைய மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் ஆர்.எஸ்.எஸ்.சிலே ஊறித் திளைத்த ஒரு மனிதர். அவர்களுடைய சிந்தனை முழுவதுமே, இந்தச் சமூகத்தை ஆர்.எஸ்.எஸ். வழிபாட்டு சங் பரிவார் வழங்கிய சிந்தனைகளின் வழிப்பட்டுத்தான் சிந்திக்கிறார். அவர் என்ன சொல்கிறார் என்றால், — அவர் ஏதோ பத்தோடு பதினொன்று அத்தோடு இது ஒன்று என்று சொல்கிற மாதிரியான ஒரு மனிதர் அல்ல. அவர் குறிப்பிடுகிறார் — இந்தியாவை முதலில் இந்து மயம் ஆக்க வேண்டும்; பின்னர் ஆன்மீக மயம் ஆக்க வேண்டும்; பின்னர் தேசிய மயம் ஆக்க வேண்டும். இதுதான் எங்கள் கொள்கை என்று அவர் குறிப்பிடுகிறார். அந்த வழியிலே சிந்திக்கிறவர், இந்தியாவினுடைய கல்வி முறையை முற்றிலும் மாற்றியமைக்க வேண்டும் என்றும் விரும்புகிறார். எந்த வழியில் மாற்றியமைப்பது என்பது பற்றிய விவரங்களையெல்லாம் அவர்கள் நிறையச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்தியாவினுடைய கல்விச் சூழல் என்பது இந்தியாவினுடைய Educational System முழுவதையும் இந்து மயம் ஆக்குவது, இந்துத்துவ மயம் ஆக்குவது என்கிற வெறிகொண்ட சிந்தனைக்கு ஆட்பட்ட மனிதரால் இந்தியக் கல்விக் கொள்கை வழிநடத்தப்படுகிறது என்ற நிலையிலேயிருந்துதான் நாம் தமிழ்நாட்டின் நிலைமைகளைப் பார்க்க வேண்டியிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இங்கே....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இருபதாம் நூற்றாண்டு முடிந்து 21-ஆம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கிறோம். 21-ஆவது நூற்றாண்டு வருகிறபோது கல்விக் கொள்கையை மத அடிப்படையில் மாற்ற உலகத்திலே யாராலேயும் முடியாது. அறிவியல் வளர்ச்சியினுடைய வேகம், அதேபோல, சமூக விழிப்புணர்வு, 150 ஆண்டுக் காலமாக

[பேராசிரியர் க. அன்பழகன்] [2000 ஏப்ரல் 11

வளர்ந்த ஆங்கிலக் கல்வி வழியாகப் பெற்றிருக்கிற சில வகையான முன்னேற்றங்கள், இவை காரணமாக, 1000 ஆண்டுகளுக்கு முன்னாலேயோ, 500 ஆண்டுகளுக்கு முன்னாலேயோ யாரேனும் சிலபேர் கருதி உருவாக்கி இருக்கக்கூடிய மத அடிப்படையிலான கல்வியை, உலகத்தில் எந்த நாட்டிலுமே, யாரும் நிலைநாட்ட முடியாதபோது, மத்திய அரசிலே இருக்கிற கல்வி அமைச்சரும் அப்படி நிலைநாட்டக்கூடிய வாய்ப்பைப் பெறமாட்டார். அந்தக் கல்வி என்பது ஒவ்வொரு படிக்கட்டிலேயும் பல்வேறு குழுக்கள் மூலமாகத்தான் அவ்வப்போது வடிவமைக்கப்படுகிறதே தவிர, ஒரு கல்வி அமைச்சர் — டில்லியிலே இருந்தாலும் சரி, தமிழ்நாட்டிலே இருந்தாலும் சரி, யாரும் தங்கள் விருப்பப்படி எதுவும் செய்துவிட முடியாது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

முற்பகல் 11-55

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நான் நினைவுபடுத்திக்கொண்டு குறுக்கீட்டை நான் அனுமதிக்கிறேன். என்னுடைய நேரம் பாதிக்கப்பட்டுவிடும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Education இன்னும்கூட, Concurrent list-ல்தான் இருக்கிறது. அது ஒன்றும் Centre list-ல் இல்லை என்பதை நான் இங்கே உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவினுடைய வரலாற்றை..... (குறுக்கீடு) வருகிறேன். இந்தியாவினுடைய வரலாற்றை ஆய்வு செய்து தீர்மானிக்கிற வரலாற்று ஆய்வுக் கழகத்திற்குத் தலைமைப் பொறுப்பேற்றிருக்கிறவர் இந்திய வரலாற்றைத் தவறாகக் கற்றுக் கொடுக்கிற ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைச் சார்ந்தவர்தான் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட வரலாற்றையே மொத்தமாக 200 ஆண்டுக் காலம் வரலாற்று அடிப்படையிலே எந்த முக்கியத்துவமும்



2000 ஏப்ரல் 11] [பேராசிரியர் க. அன்பழகன்]

தராமல் ஒதுக்கி வைத்திருந்தார்கள். மாறாக அது திராவிட இயக்கத்தாலே மட்டுமல்ல, திராவிட வரலாறு என்பது ஆய்வுக் கண்ணோட்டத்திலே தொடர்ந்து வளர்ந்து ஹரப்பா, மொகஞ்சதாரோவிலே ஆரம்பித்து, மெல்ல, மெல்ல உண்மைகள் வெளிப்பட்டு, அது எப்படி முன்னணிக்கு வந்ததோ அதைப்போல, எதை மூடி மறைத்தாலும் அது முன்னணிக்கு வரும். ஆகவே அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியம், நம்மைப்போன்று வருங்காலத்திலே நம்பிக்கை உள்ளவர்களுக்கு ஏற்படத் தேவையில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியார் வாழ்ந்த இந்தத் தமிழ் மண்ணிலே அவர்கள் வந்து என்ன சொன்னார்கள் தெரியுமா? திராவிடம் என்பது இந்துத்துவத்தின் ஒரு பகுதிதான் என்று புதிதாகப் பாடம் சொல்லிவிட்டுப் போன ஆர்.எஸ்.எஸ். தலைவர்களை நாம் மறந்துவிட முடியாது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** விளக்கம் என்ன என்று கேட்டால் திராவிட நாகரிகத்திலே இருந்து முளைத்த ஒரு பகுதி சேர்ந்துதான் இந்துத்துவமாகப் பெயர் பெற்றுள்ளது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நூற்றுக்கு நூறு ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், ஆரியத்திலிருந்து பிறந்ததே திராவிடம் என்று சொல்கிறவர்கள்தான் இன்றைக்கு ஆர்.எஸ்.எஸ்.-ஐ, பி.ஜே.பி.-ஐ வழி நடத்துகிறார்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** உலகத்திலேயே திராவிட இனம் தொன்மையான இனம் என்ற வரலாறு நிலைநாட்டப்பட்ட காரணத்தால், ஆரியர் ஏதேனும் நாகரீகத்திலே கொஞ்சம் தலை எடுத்திருந்தால், அது திராவிடத்திலேயிருந்து கடன் வாங்கியது என்பது நூற்றுக்கணக்கான சான்றுகளால் நிருபிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரர்சிரியர் சொல்வதைத்தான் சொல்கிறேன். ஆனால் துரதிருஷ்டம் என்னவென்றால் அத்தகைய கருத்தை நிராகரிக்கிறவர்களை அதிகாரத்தில் அனுமதித்திருப்பது என்பதுதான் வரலாற்றில் ஏற்பட்டிருக்கிற வியப்பாக நான் பார்க்கின்றேன். அத்தகைய சிந்தனைக்கு நேர் எதிராக உள்ளவர்கள்தான் இன்றைக்கு நாடாளுகிறவர்கள்.

இந்தியாவினுடைய இந்த வரலாற்று உண்மையை முற்றிலும் நிராகரிக்கிற, மறுக்கிற கருத்தை உருவாக்குவதற்காக வரலாற்றுக் கழகத்திற்கும் ஒரு ஆர்.எஸ்.எஸ்.-ஐச் சேர்ந்தவரைத்தான் தலைவராக்கி இருக்கிறார்கள் என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அதனுடைய விளைவு என்ன வருகிறது என்றால், தமிழ்நாட்டிலும் அது பிரதிபலிக்கிறது என்பதற்காகத்தான் சொல்கிறேன. இப்போது கல்வி Concurrent list-ல் இருக்கலாம். ஆனால் தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது என்பதற்காகச் சொல்ல வருகிறேன். வருகிற 2000 ஆண்டில் மேல்நிலை இரண்டாம் ஆண்டுக்கான பொதுத் தமிழ்ப் பாடம் வெளிவரவிருக்கிறது. அந்தப் பொதுத் தமிழில், தமிழ்ப் பாடத்தில் செய்யுட் பகுதியிலே வருகிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொன்மொழி ஒன்று அதிலே பதிக்கப்பட்டிருக்கிறது. என்ன தெரியுமா? 'விவேகம் என்னும் வெள்ளி முளைத்து சாதிப் பித்து என்னும் சனி தொலைந்தால் தான் சமத்துவம் என்னும் ஞாயிறு தோன்றும்' -- கலைஞர் மு. கருணாநிதி என்றிருக்கிறது. ஆனால் கலைஞர் 'விவேகம் என்னும் வெள்ளி முளைத்து சாதிப் பித்து என்னும் சனி தொலைந்தால்தான்' என்று சொல்லவில்லை. 'சாதி, மதப்பித்து என்னும் சனி தொலைந்தால்தான் சமத்துவம் என்னும் ஞாயிறு தோன்றும்' என்றுதான் கலைஞர் சொன்னார். ஆனால், கலைஞர் தலைமை ஏற்றிருக்கிற இந்தத் தமிழகத்தில், கலைஞர் வழி நடத்துகிற இந்தத் தமிழகத்தில், சொல்லிக் கொடுக்கப்படுகிற பாடப் புத்தகத்தில் அவர் சொன்னதையே சாதி, மதம் என்பதில் மதத்தை எடுத்துவிட்டு சாதியை மட்டும் வைத்துக் கொண்டு சதி செய்து, அந்தப் பாட நூல் புத்தகத்தை வெளியிடுவதிலேயும் நடந்திருக்கிறது என்பதிலேயிருந்து எவ்வளவு தூரம் அந்த ஆர்.எஸ்.எஸ். கருத்து ஊடுருவி செல்வாக்கு செலுத்துகிறது என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகின்றேன். நான் அந்தப் பள்ளியிலே பயிலுகிற ஒரு மாணவி கொடுத்த விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பார்வைக்காகக் கொடுக்கிறேன். எனவே, இந்தமாதிரியான செல்வாக்கு செலுத்துவதில் — மத்தியில் அதிகாரத்தில் இருக்கிற -- இந்தச் சிந்தனை ஒரு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை மறந்துவிட்டு, இது ஏதோ மாநிலப் பட்டியலில் இருக்கிற விஷயம் என்று மட்டும் குறுகிய எல்லைக்குள் சிந்திப்பது, வர இருக்கிற ஆபத்தைப் புரிந்துகொள்ளாமல் தவறிழைக்கிற குற்றத்திற்கு நாம் ஆளாவோம் என்பதை மட்டும் தெரிவித்துக்கொண்டு, இரண்டொரு கோரிக்கைகளை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.



நண்பகல் 12-00

இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்தியாவிலே வரலாற்றையும், சமூக விஞ்ஞானக் கருத்துக்களையும் கொண்ட மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடப் புத்தகங்களை உருவாக்குகின்ற கழகத்திலேயும் முற்றிலும் அஞ்ஞானத்தை மட்டுமே அடிப்படையாக வைத்துக்கொண்டு விஞ்ஞானக் கருத்துக்களை நிராகரிக்கிற அல்லது விஞ்ஞானக் கருத்துக்களையும் அஞ்ஞானத் தேரை இழுப்பதற்குரிய கருவியாக, வடக்கயிறாகப் பயன்படுத்த விரும்புகிற தீய சிந்தனையாளர்கள்தான் வழி நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அப்படி வழி நடத்துகிறவர்களுடைய சிந்தனையினாலே தமிழ்நாட்டின் கல்வியும் பாதிக்கும் என்பதை மட்டும் நாம் நினைவில்கொண்டு — எனக்கு ஒரேயொரு வருத்தம், பகுத்தறிவுப் பகலவன் வாழ்ந்த மண், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாருடைய பாரம்பரியத்திலே வளர்ந்தவர்கள், மத்தியில் நாடாளுகிறவர்களுடைய கல்வித் துறையில் அவர்களுடைய தீய கொள்கைகளை, நிலைகளைப் பற்றி தமிழ்நாட்டிற்கு எச்சரிப்பதில் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பு தன்னுடைய கடமையை ஆற்றவில்லை என்று நான் கருதுகிறேன் என்பதைச் சொல்லி, இரண்டொரு கோரிக்கைகளை மட்டும் சொல்லி பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

ஒன்று, பாதிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர்கள். இன்றைக்குக்கூட இடைநிலை ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். உண்ணாவிரதம் இருந்தவர்கள்மீது தடியடி நடத்தி அவர்கள் 35 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தர்ணா நடத்தி கோரிக்கைகளை ஜனநாயக ரீதியாகச் சொல்கிறார்கள். தங்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்பதை வெளியிடுவதற்குரிய வடிவம் தர்ணா என்ற முறையில் தர்ணா போராட்டத்தை நடத்தி, பிரச்சினைகளை வெளியிட முயன்றவர்களுக்கெதிராக போலீஸ் தலையிட்டு நடவடிக்கை எடுத்து இப்போது உள்ளே தள்ளிவிட்டது. அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். அவர்கள்மீது இருக்கிற வழக்குகள் வாபஸ் பெறப்பட வேண்டும். அவர்களுடைய கோரிக்கைகள் என்ன என்பதைப் பரிசீலிக்க வேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்வதோடு (மணியடிக்கப்பெற்றது) இரண்டே இரண்டு நிமிடங்களில் பேச்சை முடித்துவிடுகிறேன். உச்சநீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது. Contempt of Court வரும், நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது என்று தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் பயின்ற இடைநிலை ஆசிரியர்கள் பிரச்சினையில் சொல்லப்படுகிறது. இது அவ்வளவு பொருத்தமானதாக எனக்குப் புலப்படவில்லை. மாண்புமி

அமைச்சர் அவர்கள் பல விளக்கங்களை இப்போது சொல்வார்கள்; சொல்ல முடியும். நான் அதிலே குறுக்கிடவே விரும்பவில்லை. ஆனால், இதில் என்ன பிரச்சினை என்றால், புதுக்கோட்டை Little Flower பள்ளியில் இந்த உச்சநீதிமன்றத் தீர்ப்பு வந்ததற்குப் பின்னரும் 17,20 பேர்களுக்கு சர்டிபிகேட் வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லாம் வேலைக்குப் போய்விட்டார்கள் என்றால், சமகாலத்தில் தன்னோடு படித்த, அதே நிறுவனத்தில் படித்த....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் எதிர்க்கட்சித் தலைவரிடத்திலே அந்தக் குறிப்பேட்டைக் கொடுத்தேன். என்னென்ன தேதிகளில் உயர்நீதிமன்றத்தில் எந்த Bench-ல் அல்லது எந்த நீதிபதியால், என்ன தீர்ப்பு வழங்கப்பட்டதோ அதைப் பின்பற்றி அரசு செயல்பட்டு வந்த நிலையில், தொடர்ந்து தீர்ப்புகள் வந்து இறுதியானத் தீர்ப்பிலே அடியோடு சான்றிதழ் வழங்குவதை நிறுத்த வேண்டும் என்று சொன்ன காரணத்தால் அது இடையிலே நிறுத்தப்பட்டது. தேதி வாரியான விவரம் இருக்கிறது. அதற்கு மேல் சுப்பராயன் அவர்களுக்கு ஏதேனும் விளக்கம் தேவையானால் நேராக வருவாரேயானால் எல்லா விளக்கமும் சொல்ல நான் தயாராக இருக்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் பிரச்சினையில் பேரவையே ஒரு தீர்மானத்தைக்கூட நிறைவேற்றி இதை ஒரு Special நிகழ்வாகக் கருதி உச்சநீதிமன்றத்திற்கு உறுதிபட தகவல் தந்து அவர்களுக்கு வாழ்வு அளிக்க முயற்சிக்கலாம். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்று நான் கருதுகிறேன். அதுபற்றி அரசு சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அடுத்ததாக, Private Schools Regulation Act- ஐத் திருத்த வேண்டும். இந்த Act C.B.S.E. மற்றும் Matric பள்ளிகளினுடைய ஆசிரியர்களுடைய பணிப் பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்படுகிற முறையில் Matric பள்ளிகளும், C.B.S.E., பள்ளிகளும் அந்த Act-ல் இணைக்கப்படுகிற முறையில் அந்தச் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் பாடப் பிரிவுகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

S.C., S.T.- யில் 40 வயதைக் கடந்த 20 ஆயிரம் பேர் B.Ed., பட்டதாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பில்

223303



முன்னுரிமை வேண்டும் அதேமாதிரி வேலைவாய்ப்பு இல்லாத B.Ed. பட்டதாரிகள் 2 இலட்சம் பேர் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் சுயநிதிக் கல்லூரிகளில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லாத ஒரு நிலைமை இருக்கிறது. அதேபோல ஊதியத்தில் பல்வேறு பிரச்சினைகள் இருப்பது குறித்து எல்லாம் கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு பட்டதாரிகள், இடைநிலை ஆசிரியர்களின் கோரிக்கைகள் 12 ஆண்டு காலமாக தீர்க்கப்படாமல் இருக்கின்றன.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் ஆசிரியர்களும் தங்கள் பிரச்சினைகளை கோரிக்கைகளாக அரசு மட்டத்திலே வைத்திருக்கிறார்கள்.

கடைசியாக, அரசு உதவி பெறுகிற, உயர்நிலைப் பள்ளிகளிலும் மற்ற பள்ளிகளிலும் ஆசிரியர்கள் அதிகப்படுத்தப் படுகிறார்கள். வேலைகள் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், ஊழியர்கள், பணியாளர்கள் அதிகப்படுத்தப்படவில்லை என்பது ஒரு நியாயமான கோரிக்கை. ஆசிரியர்கள், மாணவர்கள் விகிதம் அதிகப்படுததப்பட்ட அளவிற்கு இவையும் அதிகப்படுத்தப்பட வேண்டும் என்பதைக் கேட்டுக்கொண்டு, பெற்றோர்-ஆசிரியர் கழக ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை, அறிவொளி கழகத்தில் பணியாற்றுகிறவர்களுக்கும் வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்பதைச் செய்வதோடு, தமிழ்நாடு முழுவதும் ஆசிரியர் பயிற்சி பெற்று முடித்து வேலைக்குக் காத்திருக்கிறவர்களுக்கு, அந்த வேலைக்குக் காத்திருப்பதிலேயே retire ஆகிவிடுகிற ஒரு துயரம். ஒரு முடிவிற்கு வருவதற்கு முன்னால் அவர்களை எந்த வழிகளில் பயன்படுத்தலாம் என்பது குறித்து அரசு ஆக்கப்பூர்வமாகச் சிந்தித்துப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையிலே பேச என்னை அனுமதித்ததற்காக என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக்

D
V2u, 3'20 P00.75.2

கொள்கிறேன். இன்றைக்கு, "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என்று முழங்கிக் கொண்டிருக்கின்ற இந்த அரசு, ஏதோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், எங்கள் புரட்சித் தலைவி அவர்களும் தமிழுக்கு விரோதிகள் போல, தமிழக மக்களுக்கு விரோதிகள் போல இந்த அரசு சித்தரித்துக் காட்டிக்கொண்டிருக்கிறது. ஆனால், வரலாற்று உண்மை, புரட்சித் தலைவி.....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் வழிக்கல்வி என்பது, ஓர் அறிஞர் குழு நியமிக்கப்பட்டு அவர்கள் சொன்ன முடிவை அரசு ஏற்றுக்கொண்டு, அந்த அடிப்படையில் அரசு அறிவித்தபோது, இந்தத் தமிழ் வழிக்கல்வியைக் கொண்டுவருவதன் மூலமாக, பல பேருடைய உரிமைகள் பறிக்கப்படுவதாக அறிவித்தது அவருடைய கட்சியினுடைய தலைவி ஆவார். அதன் காரணமாக ஏற்பட்ட விளைவு அது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கோடிட்டுக்காட்டியதை இங்கே நான் விளக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதாவது, கல்வித் துறை மத்திய, மாநில அரசுகளின் பொதுப் பட்டியலில் இருக்கின்ற காரணத்தால், ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை, தமிழ்வழிக் கல்வி எனக் கட்டாயப்படுத்தினால், தமிழகத்தில் உள்ள தனியார் பள்ளிகள், மத்திய கல்விக் குழுமம், அதாவது C.B.S.E. அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டால், இந்தி மொழித் திணிப்பிற்கு வழி வகுத்துவிடும் என்பதால்தான், ஏற்கெனவே இருக்கிற ஆங்கில வழிக்கல்வி கற்பிக்கும் தனியார் பள்ளிகளில் தனியாக புதியதாக ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ்வழிக் கல்வி என்று தனி வகுப்புகள் தொடங்குவதைப் பரிசீலிக்க வேண்டுமென்றுதான் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதன்மூலம்...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Concurrent List-ல் இருக்கிறது என்ற காரணத்தை அந்த அம்மையார் சொல்லி அதன் பெயரால் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கூடங்களில், C.B.S.E. பள்ளிக்கூடங்களில் இப்போது நடைமுறையில் இருப்பவை மேலும் வளரும் என்ற கருத்தைத்தான் அவர் தெரிவித்திருக்கிறார். C.B.S.E.-யில் இருக்கிற பள்ளிக்கூடங்கள் நம்முடைய கட்டுப்பாட்டில் இல்லை. Matriculation பள்ளிக்கூடங்களும் அரசாங்கத்தின் நேரடிப் பொறுப்பில் இல்லை.



Matriculation Board மூலமாகத்தான் நிர்வகிக்கப்படுகிறது. அவற்றின் தனி உரிமைகளிலே நாம் தலையிடவே முடியாது. ஆனால், கல்வி குறித்த கொள்கை முடிவை நாம் அறிவிக்கிறபோது, தமிழில் நடத்த வேண்டுமென்று அரசு வலியுறுத்த பல நியாயங்கள் இருக்கின்றன. அதற்கு எதிர்ப்பாக அந்த அம்மையாருடைய அறிக்கை இருந்த காரணத்தால்தான், தமிழுக்கு துரோகி என்று தமிழறிஞர்கள் பலரும் தெரிவித்தார்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** Matriculation பள்ளிகளில் தனியாக ஆங்கிலம் இருக்கிறது. அதுமாதிரி ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை தனியாக தமிழ் வகுப்பு ஏற்படுத்தச் செய்தால், இரண்டையும் அவர்கள் படித்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற 35,000 பள்ளிக்கூடங்களில், தமிழில்தான் பயிற்சி நடக்கிறது. சில இடங்களில்தான் ஆங்கிலத்தில் நடத்துகிறார்கள். Matriculation பள்ளிகளில் ஆங்கிலம் இருக்கக் கூடாது என்று, minority உரிமை பாதிக்கப்படக்கூடிய நிலையில் நம்முடைய அரசு ஆணை இல்லை. தமிழையும் பயிற்று மொழியாக ஒரு பிரிவு நடத்த வேண்டும். அப்படித் தமிழில் நடத்த முன்வரவேண்டுமென்றுதான் கேட்டிருக்கிறோம். Matriculation பள்ளிகளுடைய போர்டு கூடி தமிழை முதல்மொழியாக ஏற்று ஆங்கிலம் மட்டுமல்லாமல், பயிற்று மொழியாக தமிழும் இருக்க வேண்டும் என்று அவர்கள் தீர்மானிக்கிற அளவுக்குத்தான் செயல்படுத்தியிருக்கிறோம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** முதல்வர் அவர்கள், 1980 ஆம் ஆண்டு வெளிநாடுகளில் இருக்கிற இந்தியத் தூதரகங்களில் இந்தி மொழி எப்படி வளர்ந்திருக்கிறது என்பதைக் கண்டறிவதற்காக அனுப்பப்பட்ட மத்திய நாடாளுமன்றக் குழுவில், உங்களுடைய கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. வெங்கா அவர்களையும், திரு. முருகையா அவர்களையும் அன்று அனுப்பி வைத்து, இந்தியை ஊக்குவித்ததுதான் இந்த அரசு என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர்களை அனுப்பி, அங்கே இந்திக்குத் தரப்படுகிற ஊக்கத்துக்கு எந்தெந்த வகையில் எதிர்ப்புத் தெரிவிக்கலாம்

என்று அறிந்து வரத்தான் அனுப்பினோம். அதேபோன்று கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. எதிர்ப்புகள் record ஆகியிருக்கின்றன.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்தது, கல்வி மானியக் கோரிக்கையில், கணினி பற்றி அதற்கு முக்கியத்துவம் தந்து அதற்காக பல திட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள். அதிலே நான் சொல்ல வேண்டியது, இந்த கணினியைப் பொறுத்தவரையில் ** நான் இந்த இடத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான்.....

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** அந்தப் பழக்கத்தினால் அவர் அப்படிப் பேசுகிறார் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் மென்பொருள் வாங்குவதோ விற்பதோ கல்வித் துறை சம்பந்தப்பட்டதல்ல. அதற்குத் தனியான அமைப்பு இருக்கிறது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** கல்வித் துறையாக இருந்தாலும் சரி, அரசாக இருந்தாலும் சரி, நான் இதைச் சொல்கிறேன், நீங்கள் மறுப்பதாக இருந்தால் மறுப்பு தெரிவியுங்கள். இதிலே....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வித் துறை சார்பாக வாங்குவதற்கு சில முறைகள் ஏற்படுத்தி அந்த அமைப்புகள் மூலமாகத்தான் வாங்கப்படுகின்றன. இது கடந்த காலத்திலே, பள்ளிக்கூடங்களுக்குத் தர வேண்டிய பொருட்களை எல்லாம் வாங்குவதற்கு Khadi Craft-க்கு மொத்தமாக குத்தகை கொடுத்து, அவர்கள் மூலமாக 75% பணத்தை address இல்லாதவர்களிடத்திலே கொடுத்து, கொள்ளை அடித்ததைப்போல (மேசையைத் தட்டும் ஒலி) எந்தக் காரியமும் இந்த அரசாங்கத்திலே நடத்த அனுமதிக்கப்படமாட்டாது. பணம் பெற்றுக்கொண்ட குற்றவாளிகளே யார் என்று தெரியாத அளவுக்கு, உண்மையல்லாத address கொடுத்தவர்களுக்கு அந்தப் பணம் போய் இருக்கிறது. அதனால் அந்த நிர்வாகத்திலே உள்ளவர்கள் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் என்னை முழுமையாகப் பேச அனுமதித்து, **

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே, இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்னாலே இந்த அவையில் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. குற்றச்சாட்டுகள் இருக்குமானால் இங்கு இருக்கக்கூடிய தலைவரிடத்திலே அனுமதி வாங்கி, அதைக்காட்டி, அதன்பிறகுதான் இங்கே பேச வேண்டுமென்று சட்டமன்ற விதி 93 தெளிவாகத் தெரிவிக்கிறது. அப்படி இருக்கும்போது எதுவுமே தங்களுக்குத் தெரிவிக்காமல் திடீரென்று உறுப்பினர் இங்கே எழுந்து பேசுவதும் அதைத் தாங்கள் அனுமதிப்பதும் முறைதானா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 93-வது விதி எனக்கும் தெரியும். நான் சட்டமன்றத்திலே, சபாநாயகர் அவர்களிடம் காலையிலே இதைக்காட்டி, ஆதாரங்கள் இருக்கின்றன என்று காட்டி அதற்குப் பிறகுதான் இந்த இடத்திலே பேசுகிறேன். என்னை முழுமையாகப் பேசவிட்டு நீங்கள் வேண்டுமானால் மறுக்கலாம்; நான் வேண்டாம் என்று சொல்லவில்லை, ஆகவே, நான் அனுமதி வாங்கிவிட்டேன். ** அதிலே சந்திரன் என்பவர் ஒரு தலைவர். அவர்கள் தமிழ் இணையக் கருத்தரங்கில் 1999-ல் கலந்துகொண்டு அந்தக் கருத்தரங்கில் தமிழருவி என்ற பெயரில் ஒரு சொல்லாளும் மென்பொருளை வடிவமைத்திருக்கிறார்கள். அந்த மென்பொருளை 1999 ஜூன் மாதம் 28 ஆம் தேதி திண்டுக்கல்லில் நடந்த விழாவில் காந்தி கிராம பல்கலைக்கழகத் துணை வேந்தர் மார்க்கண்டன் அவர்களும், வெளியிலே திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் ஜீவரத்தினம், ஐ.ஏ.எஸ். அவர்களும் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அந்த மென்பொருளில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், தமிழருவி என்ற மென்பொருளை ஓர் இலவச வெளியீடாக தமிழக அரசிடம் ஒப்படைக்க Ultimate மென்பொருள் தீர்வகத்தைச் சேர்ந்தவர்கள் முடிவு செய்து, அதை Tamilnet.99.org என்ற தமிழக அரசின் இணைய முகவரியில் மின் அஞ்சல் மூலமாக தமிழக அரசை தொடர்பு கொண்டிருக்கிறார்கள். இந்த மென்பொருளை அவர்கள் இலவசமாக அரசுக்குக் கொடுக்கிறோம் என்று கூறி அதற்காக விழா

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நடத்தி அந்த மென்பொருளை அவர்கள் தயாரிப்பதைக் கண்டு அங்கேயிருக்கிற அமைச்சர், மாண்புமிகு அமைச்சர் திரு. பெரியசாமி அவர்கள்கூட, அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்திருக்கிறார்கள். "தாங்கள் ஏற்பாடு செய்துள்ள தமிழ் இணையத்திற்கான மென்பொருளை இலவசமாக வழங்குகிற விழா சிறப்புற நிகழ்ந்திட வாழ்த்துகிறேன், தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் 21 ஆம் நூற்றாண்டிற்கான கனவுத் தமிழை, தமிழரை மேலும் விஞ்ஞான ரீதியில் கணிப்பொறி வாயிலாக வளர்த்திட வேண்டும்" என்று அவர்கள்கூட ஒரு கடிதம் அனுப்பி இருக்கிறார்கள். இதிலே பிரச்சினை என்னவென்றால், அவர்கள் அந்த மென்பொருளை அரசாங்கத்திற்கு இலவசமாகக் கொடுக்கிறேன் என்று கடிதம் எழுதி, முதல்வர் அவர்களுடைய அலுவலகத்திலே பெறப்பட்டு, முதல்வர் அலுவலகத்திலிருந்து அவை எல்லாம் சீல் வைக்கப்பட்டுக்கூட, அவர்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றன. சில acknowledgement— போதுமா? என்னுடைய கேள்வி, அந்த இளைஞர்கள் உருவாக்கித் தந்த அந்த தமிழருவி என்ற மென்பொருளை நீங்கள் சோதித்துக்கூடப் பார்க்காமல் இது சரியாக இருக்குமா, இருக்காதா என்பதைக்கூட நினைத்துப் பார்க்காமல் **

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் அவர் என்ன சொல்கிறார் என்று புரிந்துகொள்வதற்கு இந்த அவை திண்டாடுகிறது. ஒரு பொருளை அங்கீகரிப்பதா, அங்கீகரிப்பதற்கில்லையா என்பது வேறு. பணம் கொடுத்து வாங்கியிருந்தால், நாங்கள் பணம் கொடுத்து வாங்கியதில் ஏதாவது முறைகேடுகள் இருந்தால்தான் அதற்குப் பெயர் ஊழல். அங்கீகரித்தார்களா இல்லையா என்றால் அதுபற்றி technical தகுதி உள்ளவர்களுக்குத்தான் தெரியும். எனக்கே தெரியாது. ஆகவே கல்வித் துறையில் நேரடியாக அது இந்த மானியத்தில் வரவில்லை.

இரண்டாவது, அதற்காக ஒரு கணினித் தமிழ்ச் சங்கம் என்ற பெயரில் உயர்நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டு, உயர்ந்த அறிஞர்கள் அதிலே இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்களைக் கேட்டால்தான் எனக்கே அதுபற்றிய விவரம் அறிய முடியும். நான் முன்பே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



சொன்னதைப்போல, அது நேரடியாக எனக்கே தெரியாத ஒன்று. கல்வித் துறையில் நேரடியாக வாங்குவதோ, கொடுப்பதோ போன்ற நிலை இப்பொழுது இல்லை. அங்கீகரிப்பது என்பது அதன் தகுதியை approve செய்கிற முறை. எதை approve செய்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆகவே பிரச்சினை அல்ல.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிறுவனம், நாங்கள் இந்த அரசுக்கு இலவசமாகக் கொடுக்கிறோம் என்று கூறியதை, நீங்கள் எதையுமே ஏற்று....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இலவசமாகக் கொடுக்கிறதையெல்லாம் வாங்குகிற பழக்கம் இங்கே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி). எது சரியோ, எது தேவையோ, அதை இந்த இலாகாவில் உள்ளவர்களுக்கு கணிப்பொறி சம்பந்தமான கல்வியை வழங்குவது பற்றி அறிவிக்கிறவர்கள்தான் எங்களுக்குத் தெரிவிப்பார்கள். நாங்களே தீர்மானிக்கமாட்டோம். டாக்டர் அனந்தகிருஷ்ணன் தலைமையில் உள்ள கணினிப் பாடக் குழுவே என்ன பாடத் திட்டங்கள் அமைய வேண்டுமென்று அறிவுரை வழங்கி அந்த அடிப்படையில்தான் பாடத் திட்டம் அமைகிறது. அதுபோல பள்ளியிலே மாணவர்களுக்கு நடத்துகிற கணினிப் பாடத்தை நடத்துவதற்கும், contractதான் விட்டிருக்கிறோம். ஆகவே approve பண்ணுவது என்பது, என்ன மாதிரியான வெப்தளம் இருக்கலாம் என்பது பற்றிக் குழுவினர் கருத்து தெரிவித்து இருப்பார்கள். அதுபற்றி விளக்கக்கூடிய விவரம் என்னிடத்தில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. சுந்தரம், ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்வேன். அமைச்சர் அவர்கள் எனக்குத் தெரியாது என்று சொல்லக் கூடாது. தெரிந்தால் நீங்கள் விசாரித்து நாளைக்குக்கூட சொல்லுங்கள். "கலைஞர் '99 சொல்லாளர்' என்ற மென்பொருளை நீங்கள் அங்கீகரித்தது என்பது வேறு. அங்கீகரித்து அந்த 'கலைஞர் '99 சொல்லாளர்' என்ற மென்பொருள் 5,500 ரூபாய்க்கு விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை நானும் மாண்புமிகு உறுப்பினருக்கு, அவருடைய மொழியிலேயே சொல்கிறேன். ** அதை நிரூபிக்காவிட்டால், மாண்புமிகு உறுப்பினர் என்ன தண்டனையை ஏற்றுக்கொள்கிறார்? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர்கூட நான் பேசுகிறபோது, இதிலே எனக்கு அதிகம் விவரம் தெரியவில்லை நான் விவரம் தெரிந்து சொல்கிறேன் என்று கூறியிருக்கிறார்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இது இந்தக் கல்வித் துறைக்கே சம்பந்தம் இல்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அரசுக்குச் சம்பந்தம் இருக்கிறதா, இல்லையா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** அரசுக்குச் சம்பந்தம் இருந்தால் அது வேறு. அதற்கு உரிய நேரத்தில் பேசுங்கள். கல்வித் துறையில் நேரடியாக நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது இதைத்தான் பாடத் திட்டத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்றோ சொன்ன ஒன்றல்ல. அது கல்வித் துறை இயக்குநருக்கோ, செயலாளருக்கோ தொடர்புடையதாக இருந்தால்தான் நான் பதில் சொல்ல முடியும். ஒருவேளை அவரவர் வீட்டில் ஏதாவது வாங்கி வைத்திருந்தால், அதற்கெல்லாம் நான் இங்கே பதில் சொல்ல முடியாது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, அவர் கேட்கிறார், கல்வித் துறைக்குச் சம்பந்தம் இல்லையென்றால், அரசுக்குச் சம்பந்தம் இருக்கிறதா இல்லையா என்று. நான் அரசுக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் என்னுடைய அறையிலே வந்து இரண்டு தாள்களைக் காண்பித்தார். ஒன்று மாண்புமிகு அமைச்சர் இ. பெரியசாமி அவர்கள் ஏதோ நிகழ்ச்சிக்கு வாழ்த்து செய்தி அனுப்பிய தாளைக் காண்பித்தார்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அடுத்தது, ஏதோ புகார் கொடுத்தது, முதலமைச்சர் அலுவலகத்திற்குச் சென்றது, முதலமைச்சர் அலுவலகத்தின் சீல் இருக்கிறது என்று காண்பித்தார். இதைத் தவிர வேறு எதையும் காண்பிக்கவில்லை. இதோ ஆதாரத்தை நான் பேரவைத் தலைவரிடம் காண்பித்துவிட்டேன் என்றால், இது வடிகட்டின உண்மைக்குப் புறம்பான ஒரு தகவல். (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, அப்படி என்னைச் சம்பந்தப்படுத்திப் பேசினால் நான் கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பேன். ஏனென்றால், நீங்கள் காண்பித்தது இந்த இரண்டு. ஒன்று அமைச்சர் பெரியசாமி அனுப்பிய வாழ்த்துச் செய்தி. இன்னொன்று, முதலமைச்சர் அலுவலகத்திற்கு ஏதோ ஒரு பெட்டிஷன் அனுப்பியிருக்கிறோம், முதலமைச்சர் அலுவலகத்தில் பெற்றுக்கொண்டதற்கு சீல் இதோ என்று காண்பித்தது. இவை இரண்டும்தான் எனக்குத் தெரியும். இதற்கு உட்பட்டுப் பேசுங்கள்.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அனுமதித்ததைப் பற்றிச் சொல்கிறீர்கள். அதிலே எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. ** என்று மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் சொல்கிறார், அதற்கு அவர் பொறுப்பேற்றுக்கொள்கிறாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலேயிருந்து எடுக்கப்படுகின்றன. சுந்தரம் நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள். 12-05 மணிக்கு ஆரம்பித்தது 12-20 வரை போய இருக்கிறீர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு என்னுடைய சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரை, கல்வி அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், என்னை எதுவுமே கேட்பதில்லை, எதுவும் மதிப்பதில்லை, எதுவுமே சொல்வதில்லை. இது எதற்காக.....

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என்ன சொல்கிறேன் என்றால், இது என்ன முறை என்று உங்களுக்குச் சொல்கிறேன். அதற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள். இது எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நான் கையாளுகின்ற முறை. உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஒரு சட்டமன்ற உறுப்பினரை அரசு அதிகாரிகள் முறையில்லாமல் நடத்தியிருக்கிறார்கள் என்ற புகாரை ஆதாரத்தோடு என்னிடம் வந்து காட்டினால் (குறுக்கீடு) சொல்லி முடிக்கிறேன், பிறகு பேசுங்கள். நான் உடனே என்னுடைய செயலாளரிடம் அதைக் கொடுத்து, அந்த அதிகாரிகளிடம் முகாந்திரம் கேட்பேன். நீங்கள் சொன்ன குற்றச்சாட்டு சரியா என்று கேட்பேன். சரியாக இருந்தால், நிச்சயமாக, கண்டிப்பாக அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பேன். ஆகவே, அப்படிப்பட்ட முகாந்திரம் உங்களிடமிருந்தால், அதை என்னிடம் வந்து, அறையிலே காட்ட வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** சுருக்கமாகச் சொல்லி முடித்துவிடுகிறேன். என்னுடைய இராசிபுரம் தொகுதியில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்தான் சொல்லிவிட்டேனே, நீங்கள் சுருக்கமாகச் சொன்னாலும் சரி, விவரமாகச் சொன்னாலும் சரி, அதிகாரிகள்மீது குற்றச்சாட்டு இருந்தால், அந்தக் குற்றச்சாட்டை என்னுடைய அறையிலே கொண்டுவந்து காட்ட வேண்டும். நான் உடனே, அதிகாரிகளை முகாந்திரம் கேட்பேன். அதை விட்டுவிட்டு என்னிடம் அனுமதி வாங்கியமாதிரி இங்கே பேசக்கூடாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசிபுரத்தில் ஒரு நிகழ்ச்சி. சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து பள்ளிக் கட்டடம் கட்டப்படுகிறது. அந்தக் கட்டடத்தை நான் பார்க்கச் செல்கிறேன். அதாவது இராசிபுரம் பகுதியில் கட்டப்படுகிற இரண்டு பள்ளிக்கூடங்களிலே வடுகம்பில் என்ற இடத்தில் ஒரு பள்ளிக்கூடம், சட்டமன்ற உறுப்பினர் கொடுத்த பணத்திலிருந்து கட்டப்படுகிறது. ஸ்கூலைப் பார்க்கப் போகிறேன். அது நடந்தது 15 ஆம் தேதி. கட்டடம் எப்படிக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கப் போகிறேன். அந்த நேரம் நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நேரம். 15 ஆம் தேதி ஒரு நிகழ்ச்சி நடக்கிறது. 12 ஆம் தேதி ஒரு நிகழ்ச்சி நடந்தது. இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் நான் போய்ப் பார்க்கிறேன். அப்போது, நான், சட்டமன்ற உறுப்பினர், அந்தக் கட்டடத்தைத்



திறக்க வந்து விட்டேன் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கருதி அந்தப் பள்ளியிலுள்ள இரண்டு ஆசிரியர்களை, சிற்றம்பலம், சண்முகம் என்று இரண்டு ஆசிரியர்களை பணிநீக்கம் செய்துவிட்டார்கள். நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் நேரடியாகச் சொன்னேன். இது தேர்தல் கமிஷன் சொல்வது, என்னால் ஒன்றும் பண்ண முடியாது என்று சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த இரண்டு பேரையும் suspend பண்ணி increment cut பண்ணிவிட்டார்கள். எங்களுடைய நிகழ்ச்சி 12 ஆம் தேதி, 15 ஆம் தேதி. ஆனால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இவ்வளவு விவரங்களையும் என்னுடைய அறையிலே வந்து சொல்ல வேண்டும். நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விளக்கம் கேட்பேன். நீங்கள் என்னிடம் காண்பிக்காமல் இதிலே பேசிக்கொண்டிருந்தால் பிரயோஜனம் இல்லை. அடுத்த point-க்குப் போய் முடியுங்கள். இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடிக்க வேண்டும். இல்லாவிட்டால் நான் அடுத்த உறுப்பினரை கூப்பிட்டுவிடுவேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர், திருச்செங்கோட்டைச் சேர்ந்த திரு. டி.பி. ஆறுமுகம் இங்கே அமர்ந்திருக்கிறார். அவருடைய பகுதியில் 18 ஆம் தேதி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் இங்கே அமர்ந்திருப்பது ஒரு குற்றச்சாட்டா? (சிரிப்பு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** திருச்செங்கோடு ஒன்றியம், சின்ன ஆலங்குடியில் புதியதாக ஒரு ஆரம்பப் பள்ளி தொடங்கப்பட்டது. தொடக்க விழா நிகழ்ச்சிக்கு உதவி தொடக்கக் கல்வி அதிகாரி அமிர்ஜான் தலைமை வகித்தார். இப்படி எங்கள் நிகழ்ச்சி 12 ஆம் தேதி நடந்தது. ஆனால் இவருடையது 21 ஆம் தேதி நடக்கிறது. அந்த நிகழ்ச்சியில் இவர் பள்ளிக் கட்டடத்தைத் திறந்து வைத்திருக்கிறார். அந்த அதிகாரிகள் மீது, அவர்கள் மீது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் நான் விவரமாகச் சொல்கிறேன். ஒருதலைபட்சமாக, நான் எதிர்க்கட்சியாக இருப்பதால், என்னை முறையாக நடத்தவில்லை என்ற புகாரை தயவுசெய்து என்னுடைய அறையிலே கொண்டுவந்து கொடுங்கள். நான்

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முகாந்திரம் கேட்டு, நீங்கள் சொல்வது உண்மையாக இருந்தால், கண்டிப்பாக நானே நடவடிக்கை எடுத்து, அந்த அதிகாரிகளை உரிமைக் குழுவிற்கு முன்னால் நிறுத்துவேன். அடுத்து பேசுங்கள். ஒரே ஒரு நிமிடம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இறுதியாக, இன்றைக்கு தமிழகத்திலே உள்ள 12 ஆயிரம் ஊராட்சிகளிலும் அய்யன் திருவள்ளுவர் படிப்பகத்தை ஆரம்பித்திருக்கிறீர்கள். இது ஏதோ மக்கள் பயனடைய வேண்டும், இந்தப் பள்ளிகளிலே அந்தப் புத்தகங்களை எல்லாம் படிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நீங்கள் உருவாக்கவில்லை. நீங்கள் அங்கே அங்கீகரித்துள்ள புத்தகங்கள் பட்டியல் என்ன தெரியுமா? அதிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய புத்தகங்கள் 10, 15 புத்தகங்கள், தமிழக முதல்வர் அவர்கள் எழுதிய 10, 15 புத்தகங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கீகரிக்கப்பட்ட என்று சொன்னால், இந்தப் பட்டியலிலே எதை வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம். அவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ள பணமே ரொம்பக் குறைவு. அவர்கள் விரும்பி எதை வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம். அங்கீகரிப்பது என்று சொன்னால், வாங்கலாம் என்று சொன்னதாக அர்த்தமே தவிர வேறு ஒன்றுமில்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதிலே தமிழக முதல்வர் அவர்களுடைய புத்தகங்கள் விற்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அவர்களுடைய புத்தகத்தை வாங்கிப் படிக்க நாட்டிலே பல இலட்சக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபற்றி இதிலே நுழைக்க வேண்டியதில்லை. ஆனால் அறிவுள்ளவர்கள் எழுதிய புத்தகங்கள் என்கிற காரணத்தினாலே இந்தப் பட்டியலிலே வந்திருக்கிறது.

பிற்பகல் 12-25

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியென்றால், இந்தப் பட்டியலிலே தந்தை பெரியார் அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றி இல்லையே, என்ன காரணம்? பெரியார் அவர்கள்....





**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தகங்களைப் பட்டியல் போடுகிறவர்கள், அதிகாரிகள் என்ன புத்தகங்கள் இருக்கின்றனவோ, அவற்றை ஒரு பட்டியல் போட்டு, அவற்றிலே எது வேண்டுமென்பதை தீர்மானித்து வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னதாக அர்த்தமே தவிர, எல்லாவற்றையும் வாங்க வேண்டுமென்று அர்த்தம் இல்லை; வாங்கவும் முடியாது. அதேபோல, என்ன புத்தகங்கள் அந்தப் பட்டியலில் இல்லை என்றாலும், அந்தப் புத்தகங்களை நாங்கள் எதிர்க்கிறோம் என்று அர்த்தமல்ல. அந்தப் பட்டியலிலே வரக்கூடிய வாய்ப்பை அந்தப் புத்தகம் பெறவில்லை என்று அர்த்தமே தவிர, அடுத்து இன்னொரு பட்டியல் அனுப்பினால் அதில் இடம் பெறலாம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பட்டியலிலே பெரியார் அவர்களுடைய கருத்துக்கள் ஏன் ஒன்றும் இல்லை? அதேபோல அண்ணல் காந்தியடிகள் பற்றி.....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா எழுதிய எழுத்துக்களுக்கு உள்ளே பெரியார் வருகிறார்; கலைஞர் எழுத்துக்களிலே பெரியார் வருகிறார். இன்னும் சொல்லப்போனால், எங்கள் மூச்சிலேயே பெரியார் வருகிறார். ஆகவே, அதை ஒரு பிரச்சினையாக மாண்புமிகு உறுப்பினர் பேசத் தேவையில்லை. இன்னும் சொல்லப்போனால், பெரியார் நாணயத்துக்குப் பெயர் பெற்றவர். நாணயத்துக்கு, நேர்மைக்கு, உண்மைக்குப் பெயர் பெற்றவர் பெரியார். அவரைப் பற்றி யார் வேண்டுமானாலும் பேசுகிற நிலைமை நாட்டிலே ஏற்பட்டது வருந்தத்தக்கது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லா. சந்தானம். (குறுக்கீடு) முடித்தாயிற்று. நான் உங்களுக்கு நேரம் கொடுத்துக்கொண்டே போக முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்திலே எங்களது இயக்கத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதித்த தங்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்து, கல்வித் துறையிலே கொள்கை விளக்கத்தை ஆரம்பிப்பதற்கு முன்னால், மிக அழகாக

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

என்கின்ற அய்யன் திருவள்ளுவருடைய குறளோடு கொள்கை விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். 'கற்றனைத்து ஊறும் அறிவு' என்கின்ற முறையிலே இந்தக் கல்வியினால் ஒருபுறத்திலே அறிவு வளர்ச்சியடைந்திருந்தாலும்கூட, அந்தக் கற்றவர்களுக்கு வேலை இல்லை என்கின்ற நிலையையும், அந்த படித்த பட்டதாரிகள் இருக்கின்ற குடும்பங்கள் எல்லாம் வறுமையிலே இன்றைக்கு ஆட்படுத்தப்பட்டிருக்கின்றன என்கின்ற நிலையையும் எண்ணிப் பார்க்கின்றபோது, மறுபுறம் வருத்தம் தருகின்ற நிலையாக இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு அரசு, கிராமப்புறங்களிலே கல்வி கற்கின்ற வயதை எட்டிய குழந்தைகள் எல்லாம் கல்விச் சாலைகளுக்குச் செல்ல வேண்டும், அவர்கள் அனைவருக்குமே தொடக்கக் கல்வியை வழங்க வேண்டுமென்கின்ற எண்ணத்தோடு ஒருபுறம் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும்கூட, தொடங்கி நடைபெற்றுக்கொண்டிருக்கிற பள்ளிகளை எல்லாம் மூடுகின்ற நிலையை மறு புறத்திலே நான் பார்க்கின்ற சூழ்நிலையிலே இருக்கின்றேன்.

கடந்த வாரத்திலே, இராமநாதபுரம் மாவட்டம், கமுதி பஞ்சாயத்து யூனியனிலே இடிவிலகி பஞ்சாயத்து என்ற பஞ்சாயத்து ஒன்று இருக்கிறது. அந்த ஊராட்சிப் பகுதியிலே சென்று வருகின்ற நேரத்தில், அங்கு இருக்கின்ற நான்கைந்து பள்ளிகள் மூடி இருக்கின்ற நிலையைப் பார்க்க முடிந்தது. அதற்குக் காரணம் என்னவென்று கேட்கின்ற நேரத்தில், அங்கு இருக்கின்ற மக்கள் எல்லாம் தங்களுடைய வாழ்க்கையை அந்த இடத்திலே, அந்த ஊரிலே நடத்த முடியவில்லை என்கின்ற சூழ்நிலையின் காரணமாக வேறு இடங்களுக்குப் பிழைப்பைத் தேடிச் சென்றுவிட்டார்கள். எனவே, அந்தப் பள்ளிகளுக்குப் பிள்ளைகள் வருகின்ற நிலை இல்லை என்கின்ற காரணத்தால், அந்தப் பள்ளிகளை எல்லாம் மூடுகின்ற ஒரு சூழ்நிலையும் இருக்கிறது. இதைத்தான் வள்ளுவர் குறிப்பிட்டார்:

"நல்குர வென்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்".

வறுமை என்கின்ற ஒன்றில் அத்தனை துன்பங்களும் சென்று சேரும் என்கின்ற நிலையிலே அமெரிக்க அதிபர் கிளிண்டன்கூட இங்கு வந்திருக்கின்ற நேரத்தில், இந்த நாட்டில் Scientific Technology, தொலைத்தொடர்புத் துறைகள் எல்லாம் வளர்ந்திருக்கின்றன என்று சொன்னாலும்கூட இந்தியாவிலே வறுமை ஒழிப்புத் திட்டம் என்பது





சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்ற ஒரு நிலைமையும் வேண்டும்; வறுமை ஒழிப்புத் திட்டம் என்பதுதான் முதன்மை இடத்தைப் பெற வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதேபோல இன்றைக்கு அந்தப் பகுதிகளில் எல்லாம் வறுமையின் காரணமாக பள்ளிகள் மூடப்பட்டு இருக்கின்றன. (குறுக்கீடு)

பிற்பகல் 12-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. சந்தானம் அவர்கள் சொன்னது என்னுடைய தொகுதியிலே வருகிறது. இராமநாதபுரம் மாவட்டம், கமுதி ஒன்றியத்தில் அரியமங்கலம், கழுத்தறுகான், கே. வேப்பன்குளம், இடிவிலகி, பூலாபத்தி — இந்த 5 கிராமங்களில் உள்ள பள்ளிகளுக்கு மாணவர்களே வரவில்லை. காரணம், எல்லோரும் பிழைக்கப் போய்விட்டார்கள்; கேரளாவுக்கு பிழைப்புத் தேடிப் போன நேரத்தில், மாணவர்கள் வராத காரணத்தால், அங்கேயுள்ள ஆசிரியர்களை வேறு பள்ளிகளுக்கு மாற்றி இருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. தயவுசெய்து அந்தப் பள்ளிகளை நிரந்தரமாக மூடிவிடாமல் — பிழைப்புக்காகப் போய்விட்டு அவர்கள் திரும்ப வந்திருக்கிறார்கள்; — அதே பள்ளிகளை மறுபடியும் திறக்கின்ற ஒரு ஏற்பாட்டை நம்முடைய அரசு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி. இதையேதான் நானும் வலியுறுத்துவதற்காக இந்தக் கருத்தைச் சொன்னேன்.

அடுத்து, இன்றைக்கு உயர் கல்வித் துறையைப் பொறுத்தவரையிலே, பல்வேறு கல்லூரிகள் இருந்தாலும்கூட, அரசு துறையிலே கல்லூரிகளை நடத்த முடியவில்லை; அதற்கு நிதிநிலை இடம் தரவில்லை என்கின்ற காரணத்தினால், பல்வேறு சுயநிதிக் கல்லூரிகள் தொடங்கப்படுகின்றன. அந்தச் சுயநிதிக் கல்லூரிகளிலே M.A., M.Sc., எல்லாம் படித்து Phd. டாக்டர் பட்டத்தைப் பெற்று அங்கு வேலை பார்க்கின்ற ஆசிரியர்கள் எல்லாம் பெற்றுக் கொண்டிருக்கின்ற சம்பளத்தை நினைத்துப் பார்க்கின்றபோது, மனிதாபிமானம் உள்ள எந்த மனிதனும வருந்துகின்ற ஒரு சூழ்நிலையைத்தான் ஏற்படுத்தி இருக்கின்றது. பல்வேறு

விரிவுரையாளர்கள் என்னிடத்திலே வந்து அவர்களுடைய நிலையை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். பல இடங்களிலே அவர்களுக்கு Appointment Orders - வேலைக்கு அங்கீகாரம், அந்த உத்தரவே வழங்கப்படாத நிலையிலே, Appointment Orders இல்லாமல் அவர்கள் வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி வேலை பார்க்கின்றவர்களுக்கு அந்தக் கல்லூரிகள் வழங்குகின்ற சம்பளம் ஆயிரம் ரூபாய், 1500 ரூபாய்தான் என்ற நிலை இருக்கின்றது. (மணியடிக்கப்பெற்றது) சுயநிதிக் கல்லூரிகளுக்கு அங்கீகாரம் வழங்குகின்ற நேரத்தில், நமது அரசு அங்கு பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு இவ்வளவுதான் ஊதியம் வழங்க வேண்டும் என்கின்ற ஒரு நிலையை உறுதி செய்து இருக்கிறதா? அப்படி உறுதி செய்து இருந்தால் அவையெல்லாம் அந்தச் சுயநிதிக் கல்லூரிகளிலே வழங்கப்படுகின்றனவா என்பதை அரசு ஆய்வு செய்கிறதா என்கின்ற நிலையையும் அமைச்சர் அவர்கள் இங்கு தெளிவுபடுத்த வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிஷம்கூட பேசி முடிக்கவில்லை; அதற்குள் மணி அடித்தால் எதைப் பேசுவது? ஓர் இயக்கத்தின் சார்பில் கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். கொஞ்ச நேரம் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் பற்றி நான் சென்றமுறைகூட இந்த அவையிலே பேசுகின்றபோது சொன்னேன். பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையிலும், கல்வித் துறையைப் பொறுத்தவரையிலும், ஏறக்குறைய 5, 6 விழுக்காடுகள் தான் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது என்ற நிலையை நான் சுட்டிக்காட்டினேன். அதை ஏற்றுக்கொண்டு நமது முதல்வர் அவர்கள் ஒரு வெள்ளை அறிக்கையைக்கூட இந்த அவையிலே சமர்ப்பிப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதற்கு என்னுடைய பாராட்டுக்கள். ஆனால், சென்ற கல்வி மானியக் கோரிக்கையின்போதே நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 110 விதியின்கீழே ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். வருகின்ற காலத்தில் இதேபோல பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று வழங்கப்பட்ட அந்த ஒதுக்கீட்டில், அந்த இடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்தால், அவர்களை வைத்தே பூர்த்தி செய்வது என்கின்ற ஒரு நிலையை எடுத்து, அதைச் சிறப்பாகக் கவனத்தில் கொண்டு அரசு செயல்படும் என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு ஓராண்டு காலமாகியும்கூட, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களில் ஒருவருக்குக்கூட இந்தப் பல்கலைக்கழகங்களில் வேலையளிக்கப்பட வில்லை என்கின்ற நிலையைத்தான் பல்வேறு



பகுதிகளிலே உள்ளவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தக் குறைபாட்டை நீக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

(பிற்பகல் 1-[illegible])

இன்றைக்குப் பல்கலைக்கழகங்களிலே ஏறக்குறைய 111 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. இந்த இடங்களைப் பூர்த்தி செய்வதற்கு 98 நபர்களைத் தேர்வு செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் வேலை உத்தரவு வழங்கப்படவில்லை. வேலை உத்தரவு பின்னால் வழங்கப்படும் என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மிகவும் பின்தங்கியவர்களுக்கென்று தனியாக இட ஒதுக்கீடு இருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையில் அதில் 6 சதவீதம்தான் இப்போது நிரப்பப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 14 சதவீத பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டியிருக்கிற காரணத்தால், அவர்களுக்கென்று தனியாக 100 இடங்களையாவது ஒதுக்கித் தந்து (மணியடிக்கப்பெற்றது) வருகின்ற காலங்களிலே மிகவும் பின்தங்கிய இனத்தவர்களுக்கு வேலைவாய்ப்பிலே உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து இடைநிலை ஆசிரியர்கள். மிகவும் பின்தங்கிய வகுப்பிலே இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் இல்லை. கள்ளர் சீரமைப்புத் துறை என்று எங்களுடைய மாவட்டத்திலும், திண்டுக்கல், மதுரை, தேனி மாவட்டங்களிலேயும் இயங்கிக்கொண்டிருக்கிறது. இந்தக் கள்ளர் சீரமைப்புத் துறையின் மூலமாக முன்பு இடைநிலை ஆசிரியர் பயிற்சி மையங்கள் 3 இடங்களிலே இயங்கி வந்தன. தேனி பகுதியில் ஒரு இடத்திலும், மதுரையில் செக்கானூரணி, நாட்டாமங்கலம் ஆகிய 2 இடங்களிலும் இயங்கி வந்தன. அதை ஏனோ தற்போது நிறுத்திவிட்டார்கள். இன்றைக்கு, இந்தக் கள்ளர் சீரமைப்புத் துறையின் மூலமாக இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் இல்லை என்கிற ஒரு நிலையிருக்கிறது. எனவே, அந்தப் பயிற்சிப் பள்ளிகளையெல்லாம் மீண்டும் தொடங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு (மணியடிக்கப்பெற்றது) வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2000 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"இன்று சிறுவர் நீங்கள், இனி இந்த நாட்டினை ஆளப் பிறந்தீர்
ஒன்றாய் இருங்கள், உயர்வினை எண்ணுங்கள்
குன்றினைப் போல் உடல்வன்மை வேண்டும்
கொடுமை தீர்க்க போராடுதல் வேண்டும்".

இது பாவேந்தர் கூற்று.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திறம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே!"

இது திருமூலர் பாடல்.

தமிழ்நாட்டில் பண்டைக் காலம் முதல் இந்தக் காலம் வரை தமிழர்கள் உடல் நலத்திலும், உள நலத்திலும் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தார்கள் என்பதற்கு இதுவே சான்றாக அமையும். இவற்றையெல்லாம் நன்குணர்ந்துதான் இளைஞர்களை ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபடுத்தி, சிதறிக் கிடக்கும் அவர்களுடைய ஆற்றலை திரட்டிடவும், அவர்களை மனஉறுதி படைத்தவர்களாகவும், எதிர்கால வாழ்வை நம்பிக்கையோடு எதிர்கொள்பவர்களாகவும் உருவாக்கும் பெரும் பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டும்

"நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே"

என்னும் புறநானூற்றுப் பாடலை நினைவு கூறும் வகையிலும் அரசு "இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு"க்கென தனித் துறையை ஏற்படுத்தி, அதை என்னிடம் தந்து, இளைய தலைமுறையினருக்குப் பணிபுரிய வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

இதுவரை இத்துறை மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்களுடைய சீரிய தலைமையில் ஒப்பற்ற வழிகாட்டுதலுடன் எண்ணற்ற பணிகளை ஆற்றி வந்திருக்கின்றது என்பதைப் பணிவுடன்



2000 ஏப்ரல் 11] [திரு. பொங்கலூர் நா. பழனிசாமி]

முன்வைத்து அவருடைய சிறந்த பங்களிப்பையும் இந்நேரத்திலே நன்றியுணர்வோடு நினைவுகூற விரும்புகிறேன்.

விளையாட்டு மற்றும் சாரண சாரணியர் துறை இதுவரை பள்ளிக் கல்வித் துறையின் கீழும், தேசிய மாணவர் படை மற்றும் நாட்டு நலப் பணித் திட்டம் உயர் கல்வித் துறையின் கீழும் செயல்பட்டு வந்தன. மாணவரல்லாத சமுதாயத்தினருடைய நலன் கருதி செயல்படுவதற்குக் குறிப்பாகத் தனித் துறை இல்லை. புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை இனிமேல் விளையாட்டு, சாரண சாரணியர், தேசிய மாணவர் படை, நாட்டு நலப் பணித் திட்டம் மற்றும் கிராமப்புற, நகர்ப்புற மாணவரல்லாத சமுதாயத்தினருக்கான நலத் திட்டங்கள் ஆகியவற்றிற்கான பணிகளை மேற்கொள்ளும்.

பிற்பகல் 12-40

இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டிற்கென தற்சமயம் தனித் துறை ஒன்று நிறுவியதன் விளைவாக தமிழகத்தில் விளையாட்டிற்கென கட்டமைப்பு வசதிகள், விளையாட்டு வீரர்களுக்கு தமிழக அரசு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்ற வசதிகள், மாநகரத் தலைநகரங்களில் ஏற்படுத்தியிருக்கின்ற விளையாட்டு வளாகங்கள் விவரங்களையும், நமது மாநிலத்தில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகள், பயிற்சி மையங்கள், சிறப்புப் பயிற்சி மையங்கள், விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்படுகின்ற விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள், ஓய்வூதியம் போன்ற எண்ணற்ற தகவல்கள், தனியாக கொள்கை விளக்கக் குறிப்பைச் சமர்ப்பித்ததன் காரணமாக மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்கும், தமிழக மக்களின் பார்வைக்கும் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்பதை நான் பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். அதைப்போலவே இளைஞர் நலனுக்காக இருக்கின்ற எண்ணற்ற திட்டங்களையும் அவர்களை ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபடுத்துவதற்காக நாம் மேற்கொள்ள இருக்கின்ற நடவடிக்கைகளையும், மாணவர் அல்லாத இளைஞர்களையும் திரட்டி அவர்கள் ஆற்றலை அவர்களுடைய தனிப்பட்ட முன்னேற்றத்திற்கும், ஒட்டுமொத்த சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் அடிகோலுவது குறித்தும் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் விரிவாக அனைவரும் அறியும் வண்ணம் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது.

[திரு. பொங்கலூர் நா. பழனிசாமி] [2000 ஏப்ரல் 11

இந்தப் புதிய துறையினுடைய முக்கியக் குறிக்கோள்கள். ஒன்று, மாவட்டத் தலைநகரங்கள், பள்ளி மற்றும் கல்லூரிகளில் விளையாட்டு அரங்கு மற்றும் ஆடுகள வசதிகளை உருவாக்குதல்; இரண்டு, அனைத்து ஊராட்சிகள் மற்றும் நகர்ப்புறங்களில் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு மையங்கள் உருவாக்குதல்; மூன்று, திறமைமிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி செய்து அவர்களை தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளச் செய்தல்; தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு விருதுகளும், ஊக்க உதவிச் சலுகைகளும் வழங்குதல்; மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் சுயதொழில் ஆகியவற்றிற்கு ஆலோசனைகள் வழங்குதல்; மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களிடையே சாகசச் செயல்கள் செய்ய ஆர்வத்தையும், உடற்பயிற்சி செய்யும் ஆர்வத்தையும் ஊக்குவித்தல்; மாணவரல்லாத சமுதாயத்தினரிடையே அறிவியல் முனைப்பு, சமுதாய நல்லிணக்கம் ஆகியவற்றை வளர்த்திடல்; அனைத்து கிராமங்களிலும் மற்றும் நகர்ப்புறங்களிலும் இளைஞர் மன்றங்கள், சங்கங்கள், சுய உதவிக் குழுக்கள் அமைப்பது என்ற முக்கியமான இலக்குகளை முன்வைத்து இத்துறை பணியாற்றி தமிழக இளைஞர்களை உலக அளவில் விளையாட்டிலும், கல்வி நெறியிலும், பண்பு நலன்களிலும் முன்னிறுத்த அயராது பாடுபடும் என்பதை இந்த ஆய்ந்த அவையின்முன் கடமை உணர்வோடு நான் கூற விரும்புகின்றேன்.

இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு பல நல்ல திட்டங்களை கடந்த 4 ஆண்டுகளாக நிறைவேற்றி வருகிறது. அவற்றில் சிலவற்றை கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன். வேலூர் சந்துவாச்சாரியில் பளுதூக்கும் விளையாட்டில் ஒரு சிறப்பு மேம்பாட்டு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கோவையில் கூடைப்பந்து விளையாட்டிற்கென ஒரு சிறப்பு மேம்பாட்டு மையம், திருநெல்வேலியில் வளைகோல்பந்து விளையாட்டிற்கென ஒரு சிறப்பு மேம்பாட்டு மையம், 8 தனியார் கல்லூரிகளில் அரசும், தனியார் கல்லூரிகளும் இணைந்து செயல்படும் கையுந்து பந்து, கால்பந்து, கூடைப்பந்து மற்றும் தடகளம் ஆகிய விளையாட்டுகளுக்கு கூட்டு விளையாட்டு மேம்பாட்டு மையங்கள், 14 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி முகாம்கள், மாநில விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றோருக்கு சிறப்புப் பயிற்சி முகாம்கள், பல்கலைக்கழகங்களுக்கிடையேயான போட்டிகளில் பதக்கம் பெறுபவர்களுக்கு சிறப்புப்



2000 ஏப்ரல் 11] [திரு. பொங்கலூர் நா. பழனிசாமி]

பயிற்சி முகாம்கள், 14 வகையான விளையாட்டுகளில் மாணவர்களுக்கும், மாணவ-மாணவிகள் அல்லாதவர்களுக்கும், 'மாநில விளையாட்டுப் போட்டிகள்' நடத்தியது, தமிழ்நாடு பல்கலைக்கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளை நடத்தியது, தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்கள், வீராங்கனைகளுக்கு - தங்கப் பதக்கம் வென்றவர்களுக்கு 50,000 ரூபாய், வெள்ளிப் பதக்கம் வென்றவர்களுக்கு 30,000 ரூபாய் மற்றும் வெண்கலப் பதக்கம் வென்றவர்களுக்கு 20,000 ரூபாய் என்ற வகையில் ரொக்கப் பரிசுகள் வழங்கியது, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கு குறைந்தபட்சம் மாநில அளவில் பதக்கம் பெற்றவர்களுக்கு அவர்கள் விளையாட்டில் செய்த சாதனையின் அடிப்படையில் முறையே ரூ. 5,000, ரூ. 6,500 விளையாட்டு உதவித் தொகையாக வழங்கியது, உலக அளவில் சிறந்த பதக்கங்களைப் பெற்ற 7 நபர்களுக்கு முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது தலா ரூ. 1 இலட்சம் வழங்கியது ஆகிய பல்வேறு சிறப்பான திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகின்றோம். அதுபோல மாவட்டத் தலைநகரங்களில் விளையாட்டு வசதிகளை ஏற்படுத்த இந்த அரசு 1996-97 ஆம் ஆண்டு முதல், பகுதி 2 திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட தொகைகளை ஒதுக்கியிருக்கிறது. விழுப்புரம் மாவட்டம் விளையாட்டு வளாகம் அமைப்பதற்கு 27.50 இலட்சம் ரூபாய், மதுரையிலே நீச்சல் குளம் கட்டுவதற்கு 20 இலட்சம் ரூபாய், திருச்சியில் உள்விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு 35 இலட்சம் ரூபாய், காஞ்சிபுரம் மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துவதற்கு 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

பிற்பகல் 12-45

மேலும் இளைஞர்களை ஊக்குவிக்கும்பொருட்டு இந்த அரசு மாநில அளவிலான இளைஞர் விழாவினை கடந்த இரண்டு ஆண்டுகளாக மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் நடத்திக்கொண்டு வருகிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் துறைக்காக பல்வேறு திட்டங்களை நிதி உதவியோடு அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அறிவிப்புகள்:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2000-2001 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது மாநிலத்தில் மூன்றில் ஒரு பங்காக உள்ள ஏறத்தாழ 2 கோடி மாணவரல்லாத இளைஞர்களுக்கு தற்போது விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி வசதிகள் குறைந்த அளவில் இருப்பதால் அவர்களுக்குப் பயன்படும் வகையில் மாநிலத்திலுள்ள அனைத்து கிராமப் பஞ்சாயத்துகள் மற்றும் நகர்ப்புறங்களில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் (Sports-*cum*-Recreation Centre) உருவாக்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நம் மாநிலத்தில் 12,617 கிராமப் பஞ்சாயத்துகளும், 611 பேரூராட்சிகளும், 102 நகராட்சிகளும், 6 மாநகராட்சிகளும் உள்ளன. இந்த நிதியாண்டில் 5001 விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் பின்வருமாறு அமைக்கப்படும்:

3,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராம பஞ்சாயத்துகள் அல்லது 1000-க்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட கிராம குடியிருப்புகளில் 3850 மையங்கள். ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஏறத்தாழ 10 மையங்கள் அமையும்.

611 நகரப் பஞ்சாயத்துகளில் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு மையம் அமையும்.

102 நகராட்சியில் ஒவ்வொரு நகராட்சிக்கும் 5 மையங்கள் வீதம் 510 மையங்கள் அமையும்.

6 மாநகராட்சிகளில் ஒவ்வொன்றிலும் 5 மையங்கள் வீதம் 30 மையங்கள் அமையும். ஆக மொத்தம் 5,001 மையங்கள் அமையும்.

இந்த மையமானது பஞ்சாயத்து அலுவலகம் அல்லது தொலைக்காட்சிப் பெட்டி அறை அல்லது சமுதாயக் கூடங்களுக்கு அருகில் அமைக்கப்படும். இம்மையங்களை அமைக்க தோராயமாக 5000 சதுர அடி நிலம் தேவைப்படுகிறது. மேலும் ஒவ்வொரு மையமும் அமைக்க ஆகும் செலவு ரூ. 25,000 ஆக 5001 மையங்கள் ஆரம்பிக்க மொத்த செலவு ரூ. 12.50 கோடி. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் ரூ. 1 கோடி விளையாட்டு உபகரணங்களுக்காகவும், இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் மூலம் தரப்படுவதோடு மீதமுள்ள தொகை பல்வேறு திட்டப் பணிகளிலிருந்து ஒதுக்கீடு செய்து அமல்படுத்தப்படும்.





இந்த மையங்களை நிறுவத் தேவைப்படும் அனைத்து செலவினங்களையும் தனி நபரோ அல்லது தனி நிறுவனமோ எவரேனும் முன்வந்து அமைத்துக் கொடுக்கும்பட்சத்தில் அம்மையங்களுக்கு அவர்களின் பெயரோ அல்லது அவர்களின் உறவினரின் பெயரோ வைக்க அனுமதிக்கப்படும்.

பாராளுமன்ற உறுப்பினர் அல்லது சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து இம்மையத்தை அமைக்க நிதி ஒதுக்கிடும் பட்சத்தில் அம்மையத்தை அமைப்பதற்கு இடத்தேர்வு எந்தவிதத் தடையுமின்றி அவருடைய விருப்பத்திற்கேற்ப அமைக்கலாம்.

சிறிய அளவிலான கிராமப் பஞ்சாயத்து அல்லது குடியிருப்பு இடங்களில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையத்தை அமைக்கத் தேவையான இடம் கிடைக்கும் பட்சத்தில் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச மக்கள்தொகை வரம்பினைத் தளர்த்தலாம்.

ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திலும், நகர்ப்புற பகுதியிலும் உள்ள விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையம் ஒவ்வொன்றுக்கும் ஒரு இளைஞர் மன்றம் வீதம் ஆரம்பிக்கப்படும். குறைந்தபட்சம் 25 உறுப்பினர்களைக் கொண்ட இந்த இளைஞர் மன்றத்திடம் அம்மையத்தினை பராமரிக்கின்ற பொறுப்பு ஒப்படைக்கப்படும். கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் அல்லது நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களில் உள்ள அப்பகுதி உறுப்பினர், அந்த மையத்திற்கு உறுப்பினராக இருப்பார்கள். தற்போது இயங்கி வருகின்ற இளைஞர் புரவலராக மன்றங்கள், அம்மன்றங்களை அமைக்கத் தேவையான விதிமுறைகளின்படி அமைந்திருந்தால் அவற்றை அங்கீகரிக்க வழிவகைச் செய்யப்படும்.

இளைஞர் மன்றங்கள் பல்வேறு சமூகநலப் பணிகளான முறைசாராக் கல்வி, விபத்து நிவாரணம், நமக்கு நாமே திட்டம், மரம் நடுதல், சமூக அநீதிக்கு எதிரான பிரச்சாரங்கள், மத நல்லிணக்கத்தைப் பேணுதல், மேலும் அறிவியல் முனைப்பு, பொது மக்களிடையே அவர்களுடைய உரிமைகளையும், கடமைகளையும் எடுத்துரைத்தல் ஆகிய பணிகளிலே ஈடுபடும்.

இந்த இளைஞர் மன்றங்களை அமைக்க ஆகும் செலவினத்தை எதிர்கொள்ள ஒவ்வொரு மன்றத்திற்கும் தலா ரூ. 500 வீதம் தொடரா செலவினமாக அனுமதித்து, அதை மாவட்ட ஆட்சியர்கள் அல்லது

[திரு. பொங்கலூர் நா. பழனிசாமி] [2000 ஏப்ரல் 11

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு வழங்கப்படும். 5000 இளைஞர் மன்றங்கள் ஆரம்பிப்பதற்கான மொத்த நிதித் தொகை ரூ. 25 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12-50

அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளிலும் நகர்ப்புற பகுதிகளிலும் ஊரக விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்களை அமைத்த பிறகு, வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவிலான சிறந்த ஊரக விளையாட்டுப் போட்டிகள் மிகவும் பிரபலமாக அமையும். இந்தப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்துவதற்கு வட்டார, மாவட்ட, மாநில அளவில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளுக்கு தற்போது ஒதுக்கப்படுகின்ற நிதி ரூபாய் 12 இலட்சத்து 94 ஆயிரத்திலிருந்து ரூபாய் 25 இலட்சமாக உயர்த்தப்படும்.

காஞ்சிபுரம் மாவட்டம், முட்டுக்காட்டில் இந்திய விளையாட்டுக் குழுமத்தின் சார்பில் நடத்தப்பட்ட முதற்கட்ட ஆய்வு அறிக்கையில், தரமான நீர் சாகச விளையாட்டு வளாகம் ஏற்படுத்த வசதிகள் அமைக்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவ்விடம் சென்னைக்கும் மாமல்லபுரத்திற்கும் இடையில் அமைந்துள்ளது. இது இந்திய மற்றும் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்தக்கூடிய நீர் சாகச விளையாட்டு வளாகம் அமைக்க சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது. இந்த மையம் புகழ்பெற்ற மையமாக மாறினால், நாட்டு சுற்றுலாத் துறையும், உள்நாட்டுப் பொருளாதாரமும் வளர்ச்சியடையும்.

முட்டுக்காட்டில் கீழ்க்கண்ட வசதிகளுடன் கூடிய சர்வதேச தரத்திலான நீர் விளையாட்டு மையத்தை அமைப்பதற்கான தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதாரம் பற்றிய ஆய்வு 'டிட்கோ' நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும். இதில் Water skiing, Wind surfing, Motor boating, Jet boating, Water scooter, Rowing, Kayaking, Canoeing போன்ற விளையாட்டுகள் ஏற்படுத்தப்படும். இதற்காக [illegible] 5 இலட்சம் ரூபாய் தொடரா செலவினமாக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளில் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்தவும் அல்லது விளையாட்டு உபகரணங்களை வாங்கவும் மைய அரசு ரூபாய் 1.50 இலட்சம் மானியம் அளித்து



2000 ஏப்ரல் 11] [திரு. பொங்கலூர் நா. பழனிசாமி]

வருகின்றது. மைய அரசு ஓராண்டுக்கு ஒரு ஒன்றியத்தில் ஒரு பள்ளிக்கும், ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு ஒன்றியத்தில் இரண்டு பள்ளிகளுக்கும் மிகாமல் நிதியுதவி வழங்கும். இத்திட்டத்தின்கீழ், தமிழகத்திலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரு ஒன்றியத்திற்கு இரண்டு பள்ளிகள் வீதம் 770 பள்ளிகளில் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்தவும், இந்த நிதியாண்டில் 385 பள்ளிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்கவும் மைய அரசின் நிதியுதவி பெற்று, இத்திட்டத்தை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் பின்தங்கியுள்ள ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய இனங்களைச் சார்ந்த மாணவர்கள் அரசு உயர்நிலைப் பள்ளி, மேனிலைப் பள்ளி மற்றும் கல்லூரிகளில் 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி வகுப்புகளில் படிக்கும்போது அவர்களுடைய வாழ்க்கையின் முக்கிய கட்டமான தொழில் மற்றும் வேலைவாய்ப்புகளைப்பற்றி போதுமான வழிகாட்டுதல் இல்லாமல் இருக்கின்றார்கள். மேலும், அவர்களுக்குண்டான பல்வேறு போட்டித் தேர்வுகளைப்பற்றியும், வேலைவாய்ப்புகளைப் பற்றியும் சுயதொழிலுக்கான வாய்ப்புகளைப்பற்றியும் அறியாத நிலையில் உள்ளார்கள். இதனால், அவர்களுடைய திறனுக்குத் தகுதியில்லாத வேலையில் அமர வேண்டிய நிலை ஏற்படுகிறது. புதிதாக தொடங்கப்பட்டுள்ள இந்தத் துறை, பள்ளிக் கல்வித் துறை மற்றும் உயர் கல்வித் துறையுடன் ஒருங்கிணைந்து வாழ்க்கைத் தொழில் குறித்து வழிகாட்டும் ஆவணங்களைத் தயாரித்து அவற்றை இணையம் உட்பட மின்னணுவியல் மற்றும் பத்திரிகை மூலம் அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேனிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலுகின்ற மாணவர்கள் அனைவரும் அறியும்படி ஆவன செய்து முக்கிய பங்காற்றும். ஒவ்வொரு பள்ளி அல்லது கல்லூரியில் பணியாற்றுகின்ற ஆர்வமுள்ள மற்றும் மதிப்பூதியம் எதிர்பாராத ஆசிரியர் ஒருவரை 'வேலைவாய்ப்பு அறிவுரையாளர்' என பதவிப் பெயரிட்டு அழைக்கலாம்.

இந்த மாநிலத்தில் இருக்கின்ற, ஏறத்தாழ 2158 உயர்நிலைப் பள்ளிகள், 1306 மேனிலைப் பள்ளிகள், 60 கலைக் கல்லூரிகள் ஆக மொத்தம் 3524 இடங்களில் இந்த மையம் அமையும்.

விளையாட்டுத் துறைக்கு 2000-2001 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள திட்டங்களின் விவரம்.

25 அரசினர் பள்ளிகளில் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்த ரூபாய் 9.10 இலட்சம் ஒதுக்கப்படுகிறது.

பிற்பகல் 12-55

நாகர்கோவிலில் நீச்சல் குளம் கட்டுவதற்கு ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளியில் நீச்சல் குளம் கட்டுவதற்கு ரூ. 5 இலட்சமும், விருதுநகரில் உள்விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு ரூ. 9 இலட்சமும், நாகப்பட்டினத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டுவதற்கு ரூ. 10.60 இலட்சமும், ஆக 38.70 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது.

இறுதியாக, தமிழக அரசின் பல்வேறு துறைகள் மூலம் விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டிற்கான செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் எண்ணற்ற திட்டங்கள் நடைமுறையில் இருப்பினும், அவற்றை ஒருங்கிணைத்து புதிய பரிமாணமும், அதிக அழுத்தமும் கொடுப்பதன் மூலம், ஒருமித்த தாக்கத்தை ஏற்படுத்துவது அவசியம் என்று கருதி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் புதிய துறையை உருவாக்கியுள்ளார்கள். இந்த நோக்கத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, இளைய தலைமுறையினரிடையே சீரிய ஒழுக்கத்தைப் புகுத்துவதிலும், மதச்சார்பற்ற மனப்பான்மையையும், விளையாட்டு வீரர்களின் நற்பண்புகளையும், தன்னலம் கருதா சேவை மனப்பான்மையையும் ஊக்குவிப்பதிலே ஈடுபடுத்தப்படும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இதிலே பல சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் ஏற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று, இந்த மானியக் கோரிக்கையை ஏற்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் கட்டப்படுவதாக இருந்த உள்விளையாட்டு அரங்கம் பற்றி இந்தக் குறிப்பிலே எதுவும் சொல்லப்படவில்லை. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான நிதி, ஏறத்தாழ 90 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, பல இடங்களிலே இடம் தேடப்பட்டு, தற்போது அரசு கலைக் கல்லூரியின் ஒரு பகுதியிலே இடம் ஒதுக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் பேராசிரியர் அவர்கள் அதற்கு உத்தரவிட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எத்தனை பேரை அனுமதிப்பது?

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு என்ன? கட்சிக்கு ஒருவரைத்தான் அனுமதிப்பேன். திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) கட்சிக்கு ஒருவருக்குத்தான் வாய்ப்பு கொடுப்பேன். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா தலைநகரிலே இருக்கிற பளு தூக்கும் போட்டிக்கான இளைஞர்களுக்கு சட்டப்பேரவை உறுப்பினர் நிதியிலேயிருந்து, அவர்களுக்குத் தேவையான உபகரணங்களை வாங்கிக் கொடுப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுமதி வழங்க மறுக்கிறார்களே, அதை வழங்குவதற்கு ஏதாவதொரு குறைந்த தொகையை நிர்ணயித்து, அதற்குள்ளே வாங்கிக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்படுமா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்திலே உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அனுமதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. பி. வெங்கடசாமி. (குறுக்கீடு) நான் இதை அனுமதிக்க முடியாது. ஒவ்வொருவராக எழுந்து நின்றால் எப்படி? திரு. பி. வெங்கடசாமி.

THIRU B. VENKATASAMY: Hon. Speaker Sir, May I inform the Hon. Minister for Sports that I have already given 20 acres of land at Hosur to create a stadium. I have also donated Rs. 5 lakhs from the Constituency Development Fund. Our M.P. has also given Rs. 10 lakhs. About Rs. 35 lakhs have already been collected. Central Government has to give

[Thiru B. Venkatasamy] [2000 ஏப்ரல் 11

Rs. 25 lakhs and the State has to give Rs. 25 lakhs. May I know from the Hon. Minister whether the stadium will come out this year?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற விளையாட்டு அரங்கங்கள் கட்டுவதற்கு மத்திய அரசு ஒரு கோடி ரூபாய் அதிகபட்ச மானியமாக வழங்குகிறது. மாநில அரசு 25 சதவிகிதமும், மத்திய அரசு 50 சதவிகிதமும், தங்களைப் போன்ற நன்கொடையாளர்கள் 25 சதவிகிதமும், ஆக 100 சதவிகிதத்திலே இதுபோன்ற திட்டங்கள் வருங்காலத்திலே தீவிரமாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் முடியாது என்று சொல்லிவிட்டால் உட்கார வேண்டும். (குறுக்கீடு) முடியாது என்று சொல்கிறேன். தொகுதி வளர்ச்சி நிதியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் அந்த முடிவை எடுக்கமுடியும். சில அமைச்சர்கள் அந்தப் பரிந்துரைகளைச் செய்யலாம். எதெதற்கு எந்தப் பணத்தைச் செலவு செய்யலாம் என்பதுகுறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நிதியமைச்சர் என்ற முறையிலே, அவர்கள்தான் முடிவெடுக்க வேண்டும். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு கல்வி வளர்ச்சிக்காக ஆற்றி வருகிற பணிகள் குறித்தும், நிறைவேற்றியிருக்கிற திட்டங்களைப்பற்றியும் குறிப்புகள் இங்கே வைக்கப்பட்டு, எதிர்க்கட்சிகளைச் சார்ந்த பல மாண்புமிகு உறுப்பினர்களும், ஆளுங்கட்சி உறுப்பினர்களும், தங்களுடைய கருத்துக்களையும், தாங்கள் காணுகிற குறைகளையும் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-00

பல்வேறு வெட்டுத் தீர்மானங்கள் இங்கே, இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தையும் நான் முழு அளவில் படித்து, அவர்களுடைய நோக்கத்தையும் நான் புரிந்துகொண்டிருக்கிறேன். இயன்றவரையில் பதில் சொல்வேன்; இயலாதவற்றைச் செயலில் செய்து காட்ட முயற்சிப்பேன் என்று மட்டும்தான் நான் சொல்ல முடியும். ஏனென்றால், காலங்கருதி, எல்லாவற்றிற்கும் விளக்கம் சொல்வது என்பது இயலாது.



2000 ஏப்ரல் 11] [பேராசிரியர் க. அன்பழகன்]

பெரும்பாலான உறுப்பினர்கள், தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, பாலிடெக்னிக், கலை, அறிவியல் கல்லூரி என்று பல்வேறு கல்வி நிலையங்கள், தங்கள் பகுதியிலே தேவை என்றும்; இருக்கிற கல்வி நிலையங்களை நிலை உயர்த்த வேண்டுமென்றும், புதிய கல்வி நிலையங்கள் உருவாக்கப்பட வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். தொடக்கப் பள்ளிகள் கடந்த ஆண்டு வரையில், ஏறத்தாழ 900-க்கும் மேற்பட்ட தொடக்கப் பள்ளிகள், 4 ஆண்டுகளில் உருவாக்கப்பட்டன. கடந்த ஆண்டு உருவாக்கப்படுகிறபோதே, மிகச் சிறிய கிராமத்திற்கெல்லாம் வழங்க வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையிலேதான் வழங்கப்பட்டது. என்றாலும்கூட, இன்னும் பல இடங்களிலே, புதிதாக வேண்டுகோள் வந்திருக்கிறது. அதுபற்றிய ஆய்வு செய்துதான், இயன்றவரையில், தொடக்கப் பள்ளிகள் தொடங்குவதற்கு முயற்சிக்கப்படும். நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவை, மாணவர்களுடைய எண்ணிக்கையை வைத்தும், அதிக மாணவர்களுக்குப் பயன்பட வேண்டுமென்ற முறையிலேயும், அந்த மாணவர்கள் பக்கத்திலே எங்கேயும் சென்று படிக்க முடியாத ஒரு சூழ்நிலையிலே அந்த வட்டாரத்திலே இருக்கிறார்கள் என்ற அடிப்படையிலேயும், நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஆகியவை அந்தப் பள்ளியில் இருந்து அதற்கு அடுத்தப் பள்ளிக்கு இருக்கிற தொலைவு கருதப்பட்டு, மகளிர் படிக்கிற எண்ணிக்கையும் கருதப்பட்டு, இவற்றிலே முன்னுரிமை வகுக்கப்பட்டு, 50 உயர்நிலைப் பள்ளிகள்தான் அளிக்கக்கூடிய நிலையில் 200 பேர் கேட்டிருப்பது, அந்த 50 மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளும் கூடுமானவரையில், அதிக அளவு மாணவர்களுக்கும், சமுதாயத்திற்கும் பயன்படத்தக்க வகையில் உருவாக்கப்படும்; அல்லது உயர்த்தப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பாலிடெக்னிக் தேவை என்றால், சரியான முறையில் ஒரு பாலிடெக்னிக் — பல்தொழில் பயிலகம் — உருவாக்க வேண்டுமானால், ஏறத்தாழ 10 கோடி ரூபாய் இருந்தால்தான் ஒரு தரமான பாலிடெக்னிக் உருவாக்க முடியும் என்ற நிலைமை இருக்கிறது. ஒரு கோடி அல்லது ஒன்றரை கோடி ரூபாய் நன்கொடை கிடைக்கிறது; அல்லது எம்.பி. தொகுதி நிதி கிடைக்கிறது; அல்லது எம்.எல்.ஏ. நிதி கிடைக்கிறது என்று நானே தொடங்க முன்வந்தால் அது நிறைவாக அமைவதில்லை. அதேபோல், கலை, அறிவியல் கல்லூரிக்கும்கூட 50 இலட்சம் ரூபாய் நன்கொடை கிடைத்து நாம் ஆரம்பிக்க முன்வந்தால் குறை ஏற்படுகிறது. கடந்த முறை

எம்.எல்.ஏ.-வாகவோ, எம்.பி.-யாகவோ உள்ள ஒருவர் கேட்டுக்கொண்ட அடிப்படையிலே தொடங்கி வைத்துவிட்டு, இன்னும் போதுமான அளவு வசதிகளை உருவாக்க வாய்ப்பில்லாமல் உள்ளது. ஆகவே, கல்வி நிலையங்கள் தரமாக வளர வேண்டும் என்று சொல்கிறபோது, அதனுடைய அடிப்படையும் தேவையான நிதி வசதியோடு இருப்பதுதான் நல்லது என்ற முறையில், புதிதாக பாலிடெக்னிக்கோ அல்லது அறிவியல் கலைக் கல்லூரியோ அரசு தொடங்க முடியாத நிலைமை இருப்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மற்றொன்று; ஒரு பக்கம் கல்லூரி தேவை; இன்னொரு பக்கம் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு உடனே வேலை தேவை. கல்லூரி தேவை என்று அதைத் தொடங்கினால், அதைவிட பெரிய நெருக்கடிக்கு அரசு ஆளாக வேண்டியிருக்கிறது. ஏனென்றால், நம்முடைய உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள்; படித்தவர்களுக்கெல்லாம் வேலை கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். வேறு பொதுக் கூட்டமாக இருந்தால், படிக்காதவர்களுக்கெல்லாம் வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்க வேண்டிய கட்சியிலேதான் அவர் இருக்கிறார். இருந்தாலும்கூட, எதை எங்கே கேட்க வேண்டுமென்ற முறைப்படி, பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்கவில்லை என்ற அந்தக் குறையை அவர் சொல்கிறார். அதேபோல், திரு. லட்சுமணன் அவர்களும் குறிப்பிட்டார்கள். கருத்திலே வேறுபாடு இல்லை. செயல்பாடு என்று சொல்கிறபோது, ஓராண்டுக்கு 3 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களை நியமித்தாலே போதும் என்ற அளவுக்கு நிலைமை இருக்கிறபோது, 30 ஆயிரம் பேர், 50 ஆயிரம் பேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், மேலும் மேலும் B.Ed. B.T. முதலான பட்டதாரிகளை உருவாக்குகிற வேகத்தைக் குறைப்பதற்கு அரசு முயற்சிக்கிறது. எந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியையும், பட்டதாரிகட்கு இனி வழங்கமாட்டோம் என்ற ஒரு நிலையை எடுத்துள்ளதுடன், Correspondence Course மூலமாக, தொலைதூரக் கல்வி மூலமாக அப்படிப்பட்ட ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களை உருவாக்குகிற நிலையையும் தடுத்து நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவற்றையும் இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், பல்கலைக்கழகங்களிலே, பல நேரங்களிலே, அவர்களுடைய பாடங்கள், சற்று நுணுக்கமான, அறிவியல் துறையைச் சார்ந்த, அல்லது ஆய்வுகள் மிக்க பாடத் திட்டமாக இருக்கிற



காரணத்தால், அத்துறைகளில் தகுதிபெற்றவர்களாக தாழ்த்தப்பட்ட, ஆதிதிராவிட சமூகத்திலோ அல்லது மிகமிகப் பின்தங்கிய சமூகத்திலோ விண்ணப்பங்கள் இல்லாமலே பல ஆண்டுகள் ஓடிவிட்டன. இப்போதுகூட, ஆதிதிராவிட சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கு 300 இடங்களுக்கு மேல், கல்லூரி ஆசிரியர் பணியில் அவர்களுடைய இடம் ஏற்கெனவே நிரப்பப்படாமல் விடுபட்டு வந்திருக்கிறது. அந்தக் குறையைப் போக்க 100 பேருக்காவது வேலை அளிக்கலாம் என்று அரசு தீர்மானித்து, 100 பேரைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு ஆணையிட்டு, அதற்குத் தனி விண்ணப்பங்கள் பெறப்பட்டு அதற்கான U.G.C. விதித்து இருக்கிற அந்த விதிமுறைகளின்படி தேர்வு நடத்தி, அந்த 100 இடங்களுக்கு ஆதிதிராவிடர் சமூகத்தவர்களை அழைத்தபோது, 73 இடங்கள்தான் நிறைந்து இருக்கின்றன. தனியாக அழைத்தும்கூட, 27 இடங்கள் நிரப்புவதற்கான அந்தத் தகுதி உள்ள விண்ணப்பதாரர்கள் இல்லை. எனவே, இப்படி வேலை அளிப்பதிலே பல குறைபாடுகள் இருப்பதை நீக்குவதற்குப் பல்கலைக்கழகங்களுக்கு அரசு ஆலோசனை வழங்கியிருக்கிறது.

பிற்பகல் 1-05

நீண்டகாலமாக ஆசிரியர்களை நிரப்புவதிலே குறைபாடு ஏற்பட்டு, மிக மிகப் பின்தங்கிய சமூகமோ, தாழ்த்தப்பட்ட சமூகமோ விடுபட்டு இருக்குமானால், அதை நிரப்புவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று பல்கலைக்கழகங்களை நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இருந்தாலும், பல்கலைக்கழகங்களிலே உள்ள இடர்ப்பாடு அந்தந்த பாடத் திட்டத்தில் ஒரு வகுப்புவாரி வரிசைமுறை Roaster-முறை வைத்து நிரப்புவதாக இருந்தால், பல பாடத் துறைகளுக்கு இடம் இருந்தாலும், சில சமூகங்களிலிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காது. மொத்தமாக வைத்து நிரப்புவதாக இருந்தால் தாழ்ந்த அல்லது பாதிக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள் தமிழ்த் துறைக்குத்தான் அதிகம் வருவார்கள். ஆனால், அதனுடைய விளைவாக மொத்தமாக எடுக்கவும் முடியவில்லை, துறைதோறும் பிரித்து எடுக்கிறபோது உரிய அளவில் விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை. இருந்தாலும், இயன்றவரையில் சமூக நீதியைக் காப்பாற்றும்படி பல்கலைக்கழகங்களுக்கும் வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர் கல்வி ஆய்வு மன்றத்தைக் குறித்து திரு. லட்சுமணன் அவர்கள் குறிப்பிட்டார்கள். உயர் கல்வி ஆய்வு மன்றம் அரசுக்குத்

தகுந்த ஆலோசனை வழங்கக்கூடிய ஒரு மன்றமாகவும், பல்கலைக்கழகங்களுக்கு பிரச்சினை வருகின்றபோது, யோசனை சொல்கின்ற ஒரு மன்றமாகவும், கல்லூரிக் கல்வியை எப்படி அதிகப் பயனுள்ளதாக ஆக்கலாம் என்ற எண்ணங்களைத் தெரிவிக்கிற மன்றமாகவும் செயல்படுகின்றது. பல்கலைக்கழகத் துணை வேந்தர்களும் அந்தக் குழுவிலே இடம் பெறக்கூடிய அளவிற்குத் தகுதியுள்ள அறிஞர்கள் கூடி ஒரு மாதத்திற்கு ஒரு முறையோ, 2 மாதத்திற்கு ஒரு முறையோ கூட்டங்கள் நடத்தி, துணை வேந்தர்களை அழைத்தும் சில கூட்டங்கள் நடத்தி அவ்வப்போது ஆய்வு நடத்துகிறார்கள். உயர்க் கல்வி ஆய்வு மன்றத்தால் வழங்கப்பட்ட தகுந்த ஆலோசனைகளிலே ஒன்றுதான் `Single Window' என்று சொல்லப்படுகிற ஒற்றைச் சாளர முறை. இந்த முறை பொறியியல் கல்லூரி மாணவர்களைச் சேர்ப்பதிலே கையாளப்பட்டு பெருமளவிற்கு சேர விரும்புகிறவர்களுக்கு தகுதி அடிப்படையில் ஒரு நீதி கிடைத்து இருக்கிறது. ஒரு வகையிலே கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு பல்வேறு மட்டங்களில் ஆலோசனை நடைபெற வேண்டியிருக்கிறது. பல்கலைக்கழகங்களிலே உள்ள `Academic Council' கல்வித் தரத்தை உயர்த்த முடிகிறதா என்று கேட்டால், அங்கேயெல்லாம் பல நேரங்களிலே அரசியல் போல குழு மாறுபாடு குறுக்கிட்டு விடுகிற காரணத்தால், கல்வித் தரத்தை முழு அளவில் உயர்த்தக்கூடிய அந்த வாய்ப்பு சற்று குறைந்து போகிறது. எனவே, கட்சி மாறுபாடு அல்லது வேறு குழு மாறுபாடு இவைகளால் பாதிக்கப்படாத ஒரு சூழ்நிலையில் கருத்துக்களை எடுத்து வைத்துப் பல்கலைக்கழகங்களுக்கு ஆலோசனை வழங்கி, துணை வேந்தர்கள் மூலமாக நிறைவேற்றுகிற ஒரு நல்ல முறை உயர் கல்வி ஆய்வு மன்றத்தால் கிடைத்திருக்கிறது என்பதையும் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் கல்வி வழங்குவதிலே மேற்கொண்ட முடிவுகள் சில நேரத்தில் கல்வி உயர்வுக்கே பாதகமாகக் கூட ஆகிவிடுகிறது. எப்படி என்று கேட்டால், இலவசக் கல்வி என்பது 14 வயது வரையில் கட்டாயமாக எல்லோருக்கும் வழங்குவதற்கும், கல்லாமையை அடியோடு போக்குவதற்கும் நாம் ஏற்றுக்கொண்ட ஒரு அடிப்படைக் கொள்கை. ஆனால் அப்படி ஏற்றுக்கொண்ட காரணத்தால் ஏற்படுகிற விளைவு என்ன என்று நீங்கள் பார்ப்பீர்களேயானால், ஆரம்பப் பள்ளியில் படிக்கிற ஒரு மாணவருக்கு ஒரு ஆண்டுக்கு 2,500 ரூபாய் செலவாகிறது. ஒரு மாணவருக்கு—நான் சொல்கிற புள்ளி விவரத்தை யார் வேண்டுமானாலும்—மொத்த ஆசிரியர்களுடைய



எண்ணிக்கை, ஒதுக்கப்பட்ட நிதி, அதிலே ஏறத்தாழ 3% தவிர மிச்சமெல்லாம் ஆசிரியர் சம்பளம், அல்லது அதிகமானால் 5% தவிர ஆகும் செலவை வகுத்துப் பார்த்தால் ஒரு குழந்தைக்கு ஒரு ஆண்டுக்குச் செலவு 2500 ரூபாய். அது தவிர சீருடை, சத்துணவு, அது தவிர இலவசப் பாடப் புத்தகம், இலவசப் பேருந்து பாஸ் வழங்குகிற நிலை. இவைக் கூடாது என்பதல்ல என்னுடைய கருத்து. இதன் விளைவாக அடித்தட்டிலே உள்ள தொடக்கக் கல்விக்கே மிக அதிக அளவில் நிதி செலவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிற காரணத்தால், உயர்க் கல்விக்காக அதிக நிதி ஒதுக்கக்கூடிய வாய்ப்பு குறைந்து போயிருக்கிறது என்பதற்காகவே இந்த விவரத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 1-10

நான்கூட, பல இடங்களிலே பேசுகின்றபோது, ஒரு மாணவருக்கு 1200 ரூபாய் என்றுதான் கணக்குப் போட்டு சொல்லிக்கொண்டிருந்தேன். இப்பொழுதுதான் அந்தக் கணக்கை முழு அளவிற்குப் பார்க்கிறபோது, ஒரு மாணவனுக்கு ஆகிற செலவு, ஆரம்ப பள்ளிக்கூடத்திலே, 2580 ரூபாய் 100 ரூபாய் சற்று வேறுபாடாக இருக்கலாம். அந்த அளவு செலவிட்டு, குழந்தைகளுக்குக் கல்வி தருகிறபோது, இந்த அரசு அதை முழு அளவிற்குப் பயன்படுத்துவதற்காகத்தான், எல்லாக் குழந்தைகளையும், பள்ளிக்கூடங்களுக்கு ஈர்க்க வேண்டுமென்பதற்காக, கடந்த ஆண்டு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு ஓர் இயக்கம் நடைபெற்று, பல்வேறு கிராமங்களிலிருந்து சுமார் 50,000 குழந்தைகளாவது, அதன்மூலமாக, தொடக்கப் பள்ளிகளிலே ஈர்க்கப்பட்டார்கள். பள்ளிகூடங்களுக்கே அனுப்பாத குழந்தைகள் ஈர்க்கப்பட்டார்கள்.

இன்னொன்று, திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப்போல, drop outs இருக்கிறதே என்று கேட்டால், drop outs இல்லாத, ஒரு கல்வி முறையே இல்லை. ஜெயில் மாதிரி கட்டாயப்படுத்தி, வெளியிலே போகாமல் அடைத்து வைத்தால்தான் drop outs இருக்காது. பள்ளிக்கூடம் இருக்கிறது. சேருகிறான் பிள்ளை, மூன்றாவது வகுப்பு வரை படிக்கிறான், திடீரென்று அவனுடைய பெற்றோர் வேறு ஊருக்கு போய்விடுகிறார் அல்லது திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் சொன்னதைப்போல அவனுடைய குடும்ப வறுமை காரணமாக, வேறு இடத்திற்குச் சென்று விடுகிறார் என்றால், குழந்தை படிக்கிற வாய்ப்பு குறைந்துதான் போகிறது. 7-வது வரைக்கும் படிக்கிறான். அவனுடைய

பெற்றோர்களுக்கு ஒரு கஷ்டநஷ்டம் வருகிறது. அவனே வேலை தேடிப் பிழைக்கப் போய்விடுகிறான். தடுக்க முடியாது. 9-வது படிக்கிறான். மூன்று வருடம் 9-வது வகுப்பிலேயே படிக்கிறான். இனிமேல் நம்மாலே படிக்க முடியாது என்று விட்டுப் போய் விடுகிறான். தடுக்க முடியாது. ஆகவே, குழந்தைகளை 14-வது வயது வரையில் எப்படியாவது கல்வி கற்க வைத்து, எழுத்தறிவைக் கட்டாயம் தர வேண்டும். ஓரளவு படிப்பதற்கு, அவனுக்கு ஒரு அடிப்படையை அமைத்துத் தர வேண்டும். அதன்மூலமாக, அவன் இந்த உலகத்தைப் புரிந்துகொள்ளவும், அவனுடைய வாழ்க்கையிலே முன்னேறவும், அது ஒரு படிக்கட்டாக இருக்க வேண்டுமென்பது வரையிலேதான். அரசியல் சட்டத்தினுடைய விதிமுறைப்படி, நாம் கட்டாய இலவசக் கல்வி வழங்குகின்றோம். ஆனால், நம்முடைய மாநிலத்திலே, இலவசக் கல்வி என்பது ப்ளஸ் 2 படிப்பு வரையிலே இலவசக் கல்வி. கல்லூரியிலே படிக்கிற மாணவிகளுக்கு இலவசக் கல்வி. ஈ.வெ.ரா. நாகம்மையார் பேரால் ஏற்படுத்தியுள்ள திட்டம் மூலமாக, ஏழைப் பெண்கள் பட்டதாரியாக ஆகின்ற வரையில், வருமானம் குறைவாக இருக்குமானால், அதுவும் இப்பொழுது 50,000 ரூபாய் அளவு வருமான உச்சவரம்பு உயர்த்தப்பட்டு அவர்கள் இலவசமாகப் படிக்கக்கூடிய வாய்ப்பு அளிக்கப்படுகிறது. எனவே, இலவசம் என்பது நடுத்தர மக்கள், அடித்தட்டு மக்கள், பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் முன்னேறுவதற்கான, ஒரு வாயிலாக திறக்கப்படுகின்ற காரணத்தால், அந்த இலவசத்திற்காக ஆகிற செலவும் சேர்ந்து, இன்றைக்குக் கல்விக்குச் செலவாகிறது. இன்னும் சொல்லப்போனால், கல்வித் துறை மட்டும் கல்விக்குச் செலவிடவில்லை. மருத்துவத் துறையிலே கல்விச் செலவு, வேளாண்மைத் துறையிலே கல்விச் செலவு, சமூக நலத் துறையிலே கல்விச் செலவு, சட்டத் துறையிலே கல்விச் செலவு, அவையெல்லாம் சேர்ந்துள்ள தொகை இங்கே காட்டப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு வகையிலே பிற்படுத்தப்பட்டவர்களுக்காக, அவர்கள் படிப்பதற்காக விடுதிகள் நடத்துகிற செலவு, தாழ்த்தப்பட்ட சமூகப் பிள்ளைகளுக்கான விடுதிச் செலவு, இப்படிப் பல வகையில் கல்வியை வளர்ப்பதற்காக ஏற்றுக்கொண்ட செலவுகளையெல்லாம் சேர்த்துக் கணக்கிட்டுப் பார்த்தால், பெரும்பாலான அடித்தட்டு மக்களுக்கிடையில் கல்வியினால் ஏற்படக்கூடிய நன்மை கிடைப்பதற்காக, இந்த அரசு இத்தகைய பணிகளை நிறைவேற்றுகிறது. மேலும், பள்ளியிலே சேருகிறவர்கள், மறுபடி இடையிலே விட்டுப் போவதைத் தடுப்பதற்காகத்தான், இங்கே ஏற்கெனவே, தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட சமூகத்துக்கு வழங்கியுள்ளது



போல மிக மிகப் பிற்படுத்தப்பட்ட சமூகத்திற்கும் அந்த ஊக்க உதவித் தொகை மூன்றாவது வகுப்பிலேயிருந்து பெண் குழந்தைகளுக்கு ரூ. 500-ம், ஆறாவது வகுப்பு பயிலும் பெண் குழந்தைகளுக்கு ரூ. 1000-ம் கல்வியாண்டு ஒன்றுக்கு வழங்குவதாக முதலமைச்சர் அவர்களாலே அறிவிக்கப்பட்டது. 3, 4, 5-வது வகுப்பிலே 500 ரூபாய், 6, 7, 8-வது வகுப்பிலே படித்தால் 1000 ரூபாய். இந்த ஊக்க உதவித் தொகை எதற்காக என்றால், drop outs-ஐ குறைப்பதற்காகத்தான். அதிலேயும், மறைமுகமாக, மிக மிகப் பின்தங்கிய சமூகமும், இன்னொரு வகையிலே மகளிரும் தொடர்ந்து கல்வி பெறுவதற்காக, இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. நமது முதல்வர் கலைஞர் அவர்கள்தான், அந்தச் சமூக நலனை எண்ணிப் பார்த்து அறிவித்தார்கள். இந்த நிலை தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு அறிவிக்கப்பட்டதைப்போல, மிக மிகப் பின்தங்கிய சமூகத்திற்கும் அறிவிக்கப்பட்டு, இன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையிலே, இலவசக் கல்விக்காக வழங்கப்படுகிற உதவிகள் பலவற்றையும் சேர்த்துப் பார்ப்போமேயானால், இந்த இலவசக் கல்வியினுடைய நோக்கம், அறியாமையை அகற்றுவதுதான். இலவசக் கல்வியுடன் உடல் நலத்தைப் பேணுவதற்கான ஒரு நோக்கமும் சத்துணவு மூலமாக நிறைவேற்றப்படுகிறது. அதைவிட எப்படியாவது படிக்க வைக்க வேண்டும், ஏழைகளாக இருக்கிற பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் படிக்க வைக்காமல் விட்டுவிடக்கூடாது என்பதற்கு, அவர்களை ஈர்க்கிற ஒரு முறையாகத்தான், இந்த இலவசத் திட்டம் மூலம் பல்வேறு வகையில் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்கள் நன்மை பெறுவதற்காகவும், அதேபோல மிக மிகப் பின்தங்கிய ஏழை மக்கள் பயன்பெறுவதற்காகவும் நிறைவேற்றப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-15

இந்த அடிப்படையிலே இலவசக் கல்வியினாலே மாணவர்களை ஈர்க்கிற திட்டங்கள் செயல்படுகிற காரணத்தினாலேதான், உயர் கல்வியிலே அதிக நிதியை அரசு ஒதுக்க முடியாத அளவிற்கு கல்விச் செலவு அதிகமாகிறது. அந்த உயர் கல்வியிலே அரசு வழங்கக்கூடிய நிதியை, நடைபெறுகிற கல்லூரிகளை வளர்ப்பதற்காகப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. கல்லூரிகளில் எல்லாத் துறைகளிலேயும், அறிவியலிலே பல புதிய வளர்ச்சிகள், பாடத் திட்டங்களிலே பல புதிய மாற்றங்கள் செய்யப்படுவதுடன், மேல்நிலைப் பள்ளியிலே

கணிப்பொறி கல்வியைக் கொண்டுவந்ததுபோல, கல்லூரிக் கல்வியிலேயும் பட்டதாரி அளவிலே படிக்கிற மாணவர்கள் கணிப்பொறி அறிவு பெறுவதற்கான முழு வாய்ப்பை அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, கணிப்பொறிக் கல்விக்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, கல்வி வளர்ச்சியிலே ஒரு பக்கம் - horizontal growth - சமதள வளர்ச்சி; இன்னொரு பக்கம் - vertical growth - செங்குத்து வளர்ச்சி; அந்த vertical growth முறையிலே அடைய வேண்டிய வளர்ச்சியை முழு அளவில் அடைவதற்குத் தேவையானதும் முழு நிதியைப் பெறுவதற்கு இயலாத காரணத்தினாலேதான் சுயநிதிக் கல்லூரிகளை அனுமதிக்க வேண்டியிருக்கிறது.

பிள்ளைகளைப் படிக்க வைக்க விவரம் தெரிந்த பெற்றோர்கள் செலவழிக்கத் தயாராக இருக்கிறார்கள். ஏனென்றால், விவரம் தெரிந்தவர்கள் கல்விக்காகச் செலவிடத் தயார். விவரம் அறியாத மக்கள் கைக்காசு செலவழித்துப் பிள்ளைகளைப் படிக்க வைத்து என்ன பலன் என்று கருதக்கூடும். ஆகவே, சுயநிதிக் கல்லூரிகள் மூலமாவது சமுதாயத்தினுடைய தேவை பரவலாக நிறைவேற வேண்டும். அதுமட்டுமல்ல, அரசுக் கல்லூரிகள் 124 இருந்தால்கூட, சுயநிதிக் கல்லூரிகள் மூலமாகத்தான் தமிழ்நாடு முழுவதும் பரவலாக பல்வேறு சமூக நிலையிலே உள்ள ஆண்களும், பெண்களும் படிப்பதற்கான ஒரு சூழ்நிலையை நாம் அளிக்க முடியும் என்ற அடிப்படையிலேதான் சுயநிதிக் கல்லூரிகள் வழங்குகிற ஒரு நிலைமை ஏற்பட்டு அது இப்போது வளர்ந்துகொண்டு வருகிறது. அந்த சுயநிதிக் கல்லூரியும் கூட மாணவர்களிடத்திலே இந்த அளவுதான் கட்டணம் வசூலிக்கலாம் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. உயர்மட்டக் குழு ஒன்றின் மூலமாக ஆலோசனைகள் பெறப்பட்டு, இவ்வளவுதான் கட்டணம் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, அந்த சுயநிதிக் கல்லூரிகளுக்கும், பல்கலைக்கழகத்திற்கும் இடையிலே உள்ள இணைப்பு முறையினால் அவர்களுடைய மேற்பார்வை மூலம் ஆசிரியர்களுக்கு U.G.C.; சொல்கிற சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்பது நடைமுறைகளிலே செயல்படவில்லை. மேலும், தனியார் கல்லூரிகள் சுயநிதித் முறையிலே நடைபெறுமானால், அங்கே உள்ள ஆசிரியர்களுக்கு அரசாங்கக் கல்லூரி ஆசிரியர்களுக்குத் தருகிற சம்பளம் தர வேண்டும் என்று கேட்டபடியினும் நடைமுறையிலே அதை நிறைவேற்றவில்லை என்றால், அந்தச் சம்பளம் தரப்படாதவர், தனக்குத் தரப்படவில்லை என்று தெரிவித்தால் தவிர, அதற்கு recorded evidence இல்லாமல் நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது. ஆகவே, அப்படி ஒரு சூழ்நிலை



இருக்கிறபோது, அவ்வப்போது மேற்பார்வை செய்வதன் மூலமாகத்தான் சுயநிதிக் கல்லூரிகளை ஓரளவிற்கு ஒழுங்குபடுத்தக்கூடிய வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம். வேண்டுமானால், அதற்காக U.G.C. மேற்பார்வை மூலமாக சுயநிதிக் கல்லூரிகளை மேலும் ஒழுங்குபடுத்துவதற்காக என்ன செய்யலாம் என்பதை உயர்க் கல்வி ஆய்வு மன்றம் சிந்திக்க வேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

அடுத்து, நம்முடைய அரசுப் பள்ளி மாணவ, மாணவிகளுடைய அறிவுத் திறன் வளர்ச்சி கூட உடல்நலத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது. நல்ல ஊட்டச்சத்தோடு வளர்கிற குழந்தையினுடைய அறிவுத் திறத்தை, ஊட்டச்சத்து இல்லாததால் தகுந்த வளர்ச்சி இல்லாத குழந்தைகள் பெற முடிவதில்லை. ஆகவே, அவர்களுடைய உடல்நலத்தைக் காக்க ஊட்டச்சத்துக்காக சத்துணவை வழங்கினாலும்கூட, அதுவும் சில குழந்தைகளுக்குப் போதுமானதாக இல்லாத நிலைமை இருக்கலாம். நோய் நொடிக்கு ஆளாகி இருக்குமானால், என்னதான் உணவு வழங்கினாலும்கூட நோய் நொடியைப் போக்க முடியாது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'வாழ்வொளி'த் திட்டம்' என்ற ஒரு திட்டத்தை 'intensive health camp' என்ற முறையில் அறிவித்து அனைத்துப் பள்ளிக்கூட மாணவ, மாணவிகளையும் இந்தத் திட்டத்தின் மூலம் ஒரு ஆண்டுக்கு ஒரு முறையாவது பரிசோதித்து, அந்தப் பரிசோதனையிலே நோய் நொடி உள்ளவர்களாக அறியப்படுகிற அத்தனை மாணவ, மாணவிகளுக்கும் தொடர்ந்து சிகிச்சை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதிலே ஆரம்ப சுகாதார நிலையத்தை இணைத்து, அங்குள்ள மருத்துவர்களை ஈடுபடுத்தி பள்ளித் தலைமை ஆசிரியருக்கும் பொறுப்பளித்து, கல்வி இலாகாவும், சுகாதார இலாகாவும் இணைந்து இந்த வாழ்வொளித் திட்டத்தை மிகப் பெரிய அளவில் கடந்த ஆண்டு நடத்தியிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சாதாரணமாக, எந்தப் பள்ளிக்கூடமாக இருந்தாலும், ஒரு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவரை அழைத்து நீங்கள் எங்களுக்காக ஒரு நாள் இவர்களை ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டால், ஒருவேளை செய்யலாம். அது எல்லாப் பள்ளிகளிலேயும், அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் மொத்தமாக நடைபெறவில்லை. ஆகவே, இந்தத் திட்டத்தின் மூலமாக மிகப்பெரிய அளவிலே மாணவ,

[பேராசிரியர் க. அன்பழகன்] [2000 ஏப்ரல் 11

மாணவிகளுடைய உடல்நலம் சோதிக்கப்பட்டு, அதன் காரணமாக ஏறத்தாழ 100-க்கு 7 பேரிலிருந்து 10 பேர் வரையில் வெவ்வேறு விதமான நோய்களினாலே பாதிக்கப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை தரப்படுகிறது. தோலிலே வரக்கூடிய சில நோய்கள் அப்படியே கவனிக்கப்படாமல் விடப்படுமானால், அந்த நோய் அதிக அளவிற்குத் தொல்லை கொடுக்கக்கூடிய தொழு நோயாக மாறிவிடும். காது கேளாத நிலை, கண் பார்வை மங்குகிற நிலை இவைகளுக்கெல்லாம் உடனுக்குடன் சிகிச்சை கிடைக்கக்கூடிய வகையில் வாழ்வொளித் திட்டத்தின் மூலமாக வழி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1-20

அதேபோல் மாணவர்கட்குச் சான்றிதழ்கள் கிடைப்பதிலே பல சிக்கல்கள் இருப்பதைச் சட்டமன்ற உறுப்பினர்கள் கடந்த காலத்திலே இங்கே எடுத்துச் சொன்னார்கள். மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றவர்கள், ப்ளஸ் 2 தேர்ச்சி பெற்றவர்கள் அல்லது தேர்ச்சி பெறாதவர்கள் சான்றிதழ்கள் பெற்றுக்கொண்டு வேறு இடங்களிலே சென்று தாங்கள் படிக்க வேண்டுமானால், அந்தச் சான்றிதழ்களிலே, ஜாதிச் சான்றிதழ்கள், வருமானச் சான்றிதழ்கள் nativity - வாழ்விடச் சான்றிதழ்கள் கிடைப்பதிலே பல இடர்ப்பாடுகள் இருப்பதாகத் தெரிவித்த காரணத்தினால், முதலமைச்சரவர்கள் மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் அறிவித்து, அந்தச் சான்றிதழ்கள் கேட்டு தலைமையாசிரியரிடத்திலே விண்ணப்பம் கொடுப்பார்களேயானால், அந்த விண்ணப்பதாரர் விவரத்தை எல்லாம் Revenue இலாக்கா அதிகாரிகளுக்கு அனுப்பி, அவர்களுடைய ஒப்புதலோடு திரும்பப் பெற்று, பள்ளிக்கூடத்திலேயே வழங்க வேண்டுமென்று அறிவித்தார்கள். அப்படி அறிவித்த அடிப்படையிலே, கடந்த ஆண்டு 5,44,124 மாணவர்களுக்கு ஜாதிச் சான்றிதழ்களும், 5,00,424 மாணவர்களுக்கு வருமானச் சான்றிதழ்களும், 5,11,877 மாணவர்களுக்கு இருப்பிடச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. இதைத் தெரிவிப்பது ஏனெனில் ஒன்றிரண்டு மாதங்கள் அலைந்தும் சான்றிதழ் கிடைக்கவில்லை, அங்கே கேட்கிற இடத்திலே வேறு மாதிரிதான் சான்றிதழ்கள் வாங்க முடிகிறது என்றெல்லாம் குறைபட்டதை பெருமளவிற்கு இது நிவர்த்தி செய்திருக்கிறது என்பதைப் பெருமையோடு நான் குறிப்பிட விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 11]

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாணவர்களுக்கு ஜாதிச் சான்றிதழ்கள், வருமானச் சான்றிதழ்கள் வழங்குவது உண்மையிலேயே பாராட்டுக்குரியது. எளிமையான முறையிலே வேறு கல்லூரிக்கோ, பள்ளிக்கோ அல்லது இடமாற்றம் செய்ய வேறு இடத்திற்குப் போவதற்கோ நல்ல வாய்ப்புகள் இன்றைக்குக் கிட்டியிருப்பது பாராட்டுக்குரியது. ஆனால் ஒன்று, அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது இந்த வருமானச் சான்றிதழ்கள் வழங்குவதிலே நிச்சயமாக பள்ளியினுடைய தலைமையாசிரியரைக் கொண்டு வழங்குவதிலே மிகப் பெரிய தவறுகளே நடப்பதற்கான ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே வருமானத்திற்குட்பட்டிருக்கிற ஏழை எளிய, பிற்படுத்தப்பட்டவர்களுடைய வருமானத்தைப் பின்பற்றி வாங்கிக் கொண்டு போய் அந்தச் சலுகைகளைப் பெற்று, உண்மையான சலுகை பெறக் கூடியவர்களுக்கு ஒரு பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க எப்படி நீங்கள் சீர்திருத்தம் கொண்டுவரப் போகிறீர்கள் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை விவரமாக எழுதி அனுப்பினால், நான் ஆய்வு செய்திடச் சொல்கிறேன். ஏனென்றால் என்ன இடர்ப்பாடு என்று தெரியாது. அவர்களுடைய பெற்றோர் சொன்ன வருமானத்தைத்தானே அவர்கள் எழுதித் தர முடியும். அதிலே என்ன இடர்ப்பாடு, என்ன சிக்கல் என்று எழுதி அனுப்புவார்களேயானால், அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அந்தச் சிக்கலை நீக்குவதற்கு முயற்சிக்கலாம் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சமுதாயத்திலே நூற்றுக்கு 3 பேர், 4 பேர் ஊனமுற்றோர் என்ற அளவிற்கு இருக்கிறார்கள். அந்த ஊனமுற்ற குழந்தைகளுடைய வாழ்க்கையில் வாழ்நாள் எல்லாம்கூட துன்பமாக மாறிவிட நேர்ந்திருக்கிறது. அந்தக் குழந்தைகளுக்காக சில பள்ளிக்கூடங்கள், சமூகநலப் பள்ளிக்கூடங்கள் ஆங்காங்கே நடத்தப்படுகின்றன. இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட இடத்திலே அந்த ஊனமுற்ற குழந்தைகளை வைத்து அவர்களுக்கு அறிவு ஊட்டுவதும் அவர்களது உடல் நலத்தைப் பாதுகாப்பது என்பதும் ஒரு குறிப்பிட்ட பள்ளியிலே என்பதால் பெரும்பாலோருக்குப் பயன்படக்கூடிய வாய்ப்பு மிகக் குறைவாக இருக்கிறது. அதன் காரணமாக ஊனமுற்ற

[பேராசிரியர் க. அன்பழகன்] [2000 ஏப்ரல் 11

குழந்தைகளை எந்தப் பள்ளிக்கூடத்திலேயும் சேர்த்து அவர்களுக்கு என்ன குறை இருந்தாலும் மற்ற பிள்ளைகளோடு சேர்ந்து படிப்பதற்கும், அப்படிச் சேர்ந்து படிக்கிறபோது அங்கே உள்ள ஆசிரியர்கள் அந்தக் குழந்தைகளைத் தனி முறையில் கவனித்து, அவர்களுக்கும் அறிவு ஊட்டுவதற்கு ஒரு வழி காண வேண்டுமென்ற அடிப்படையில் ஊனமுற்றோர் மேம்பாட்டிற்குத் திட்டங்கள் வகுப்பதும், அரசுத் துறைகளையும் அரசு சாரா நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து திட்டங்களைச் செயல்படுத்துவதும், இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற மாநில அளவிலான மேம்பாட்டுக் குழு ஒன்றினுடைய பொறுப்பாகும். அக்குழுவில் கல்வித் துறை இயக்குநர், மருத்துவத் துறை இயக்குநர், ஊனமுற்றோர் மறு வாழ்வு இயக்குநர் மற்றும் தன்னார்வ நிறுவனங்களான 'தமிழ்நாடு ஸ்பேஸ்டிக்' சங்க இயக்குநர், திருச்சி ஹோலி கிராஸ் சங்கச் செயலாளர், கோவை உடல் ஊனமுற்றோருக்கான சேரன் மண்டல் கிருத்துவச் சங்கச் செயலர், மதுரை புனித மேரி மேல்நிலைப் பள்ளிக் கல்விக் குழுச் செயலர் முதலியோர் உறுப்பினர்களாக இருந்து செயல்படுவர். ஊனமுற்ற குழந்தைகள் நூற்றுக்கு 3 பேர், 4 பேர், இடத்தைப் பொறுத்து, ஊரைப் பொறுத்து அந்த அளவு வேறுபடலாம். ஊனங்களும் வெவ்வேறு நிலையிலே இருக்கலாம். இருந்தாலும் அவர்களுக்கு அளிக்கப்படுகிற கல்வி, பொதுக் கல்வித் திட்டத்தில் எப்படி அமைய வேண்டுமென்பதை ஆய்வு செய்து, ஆலோசனை வழங்குவதற்கு இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 1-25*

மேலும், பல்வேறு உறுப்பினர்கள் பள்ளிக்கூடங்களுக்கு சுற்றுச்சுவர் கட்ட வேண்டுமென்று கேட்டார்கள். பள்ளிக்கூடத்திற்கே கட்டடம் இல்லை. அதற்குச் சுற்றுச் சுவர் எதற்கு என்று நானேகூட கேட்கக் கூடிய நிலை பல இடங்களிலே இருக்கிறது. நீண்டகாலமாகவே பள்ளிக் கட்டடங்களுக்குச் சுற்றுச்சுவர் அமைக்கிற கொள்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதற்காக கல்வித் துறையைப் பொறுத்தவரையில் வன இலாக்காவிடத்திலே தெரிவித்து சுற்றிலும் முள் வேலி போன்ற வேலிகள் வைத்துக்கொள்வதற்கு அல்லது சவுக்கு போன்ற வேலிகள் வைத்து இயற்கை வேலிகளை உருவாக்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது. பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்குக்கூட இந்த அரசு ஏறத்தாழ 100 கோடி ரூபாய் செலவிட்டு பல்வேறு பள்ளி வளர்ச்சிக்கான முறையிலே கட்டடங்கள் கடந்த



2000 ஏப்ரல் 11] [பேராசிரியர் க. அன்பழகன்]

3, 4 ஆண்டுகளாகக் கட்டினாலும்கூட நாடாளுமன்ற உறுப்பினர் நிதி, சட்டமன்ற உறுப்பினர் நிதி எல்லாம்கூட கேட்டுப்பெற்றோ, அவர்களாகத் தந்தோ ஏறத்தாழ 100 கோடி ரூபாய் அளவுக்கு—நான் சொல்கிற புள்ளிவிவரங்கள் தவறு என்று எவரும் நாளைக்கு அதைக் குறையாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால் நான் உத்தேசமாகச் சொல்கிறேன். நான் எண்ணிப் பார்த்து அதை வைத்துவிட்டு வந்து இங்கே பேசுகிறவன் அல்ல. அதனால் உத்தேசமாகத்தான் நான் சொல்கிறேன். எந்த அளவு நிதி கிடைத்தாலும் கூட பற்றாக்குறை இருப்பதை நாடு மிக நன்றாக அறியும். 35,000 பள்ளிக்கூடங்களிலே நாங்கள் 6,000 பள்ளிக்கூடங்கள், 7,000 பள்ளிக்கூடங்கள் என்ற அளவில் ஆரம்பப் பள்ளிக்கூடத்திலே 2 வகுப்பறைகளைக் கட்டிக் கொடுத்தாலும்கூட இன்னும் 20,000 தொடக்கப் பள்ளிக்கூடங்கள்; 2,000 மேல்நிலைப் பள்ளிகள், 3,000 உயர்நிலைப் பள்ளிக்கூடங்களுக்கு தேவைகள் நிரம்ப இருக்கின்றன. வளர்ச்சி இருப்பதால் தேவை இருக்கிறது. தேவையை உணர்கிற, நிறைவேற்றக் கேட்கும் நிலை மக்களிடத்திலே இருக்கிறது. ஆகவே அந்த நிலையை மாற்றிட, ஏறத்தாழ 5 ஆண்டு காலத்தில் எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் தேவையான வகுப்பறைகள் கட்டுவதற்கும், கழிப்பறைகள் கட்டுவதற்கும் ஒரு திட்டமிடலாமா என்று கருதி அதற்கு 300 கோடி ரூபாய் தேவை என்று மதிப்பீடு கிடைத்திருக்கிறது. அந்த 300 கோடி ரூபாயை எந்தக் கடன் வழங்கும் நிறுவனத்திடமிருந்தாவது கடனாகப் பெற்று 5 ஆண்டு காலத்தில் கட்டுவதற்கு ஓர் ஆலோசனை இருக்கிறது. இதனை உறுதிமொழியாகச் சொல்ல முடியாது. நாங்கள் கேட்கிற இடத்தில் கடன் கொடுக்கிறவர்களுக்கு வசதி இருந்தால்தான் இதை நிறைவேற்ற முடியும். ஆகவே அந்தத் திட்டம் அரசிடம் இருப்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஊரக வளர்ச்சித் துறையின் வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின்கீழ் 851 பள்ளிக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இந்த ஆண்டு. ஊரக வளர்ச்சித் திட்டத்திலே வேலைவாய்ப்புக்காக ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு 851 பள்ளிக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு 557 பள்ளிகளில் கணினி அறிவியல் கற்பிப்பதற்கான—அவரவர் தொகுதியிலேதான்-2 - வகுப்பறைகள் கட்ட

[பேராசிரியர் க. அன்பழகன்] [2000 ஏப்ரல் 11

நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும், கடந்த ஆண்டு 666 மேல்நிலைப் பள்ளிகளிலே தொடங்கப்பட்ட கணினி வகுப்புகளுக்கு வேண்டிய வகுப்பறைகள் சட்டமன்ற உறுப்பினர் நிதி, நாடாளுமன்ற உறுப்பினர் நிதியிலேயிருந்துதான் கட்டப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவிப்பதுடன் அதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, புதிதாக அனைத்துத் தொடக்கப் பள்ளிகளுக்கும் நிரந்தரக் கட்டட வசதி செய்து தரவேண்டும் என்ற அடிப்படையில் 900 பள்ளிக்கூடக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க 28 கோடி ரூபாய் அளவில் ஊரக வளர்ச்சி இயக்குநரகத்தின் மூலமாக ஒரு திட்டம் கிடைத்திருக்கிறது. அந்த 900 பள்ளிக்கூடங்கள், கிராமப் பகுதியிலே உள்ள பள்ளிக்கூடங்கள் தெரிவு செய்யப்பட்டு கட்டுவதற்கு வழி காணப்படும். மாவட்டத் தொடக்க கல்வித் திட்டத்தின்கீழ் முதல் கட்டமாக விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் ஆரம்பப் பள்ளிகளில் கட்டட வசதி, கழிப்பறை வசதி மற்றும் குடிநீர் வசதிக்காக 10 கோடி ரூபாய் செலவிடப்படும். அது ஏற்கெனவே தொடங்கிய திட்டம். அது தொடர்ச்சியாக நடைபெறுகிறது. மொத்தப் பள்ளிகளில் ஏறத்தாழ 4 பள்ளிக்கூடங்களிலே பள்ளிக்கூடம் அவர்களால் மேம்படுத்தப்படுகிறது. D.P.A.P.. என்கிற திட்டம். மத்திய அரசு நிதி வழங்கி இருக்கிறது. அந்தத் திட்டம் மூலம் கட்டடம் கட்ட மேலும் 10 கோடி ரூபாய் கிடைத்துள்ளது. ஏனென்றால் இதற்கு முன்னர் நிதியைப் பங்கிடுகிறபோது 24 விழுக்காடுதான் கட்டடத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என்று அறிவித்திருந்தனர். நாம் வலியுறுத்திக் கேட்ட காரணத்தினாலே, மொத்த நிதியிலே 36 விழுக்காடு எடுத்துக்கொள்ள அனுமதித்து இருக்கிற காரணத்தால் மேலும் 10 கோடி ரூபாய் பள்ளிக் கட்டடங்கள் கட்ட செலவிடப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளிக்கூடங்களிலே பாடம் கற்பிப்பதிலேயே ஒரு புதிய முறை கட்டாயம் தேவை என்று பல வல்லுநர்களால் வலியுறுத்தப்படுகிறது. பயிற்றுவிக்கிற ஆசிரியருடைய திறமையும், அதை ஏற்றுக்கொள்கிற பிள்ளைகளுடைய திறமையும் சேர்ந்துதான் பயிற்றுவிக்கும் கல்வியாக உள்ளது. Pupils, grasping as well as teachers, instructions, பிள்ளைகளினுடைய கற்கும் திறமையிலே, சில நேரங்களிலே குறை இருக்கும் இன்னும் சொல்லப் போனால் சோர்வாக இருந்தார்கள் என்றால் பிள்ளைகளுக்குக் கல்வியில் கவனம் grasping இருக்காது.



2000 ஏப்ரல் 11]

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, தயவு செய்து, நான் உரையை அதிகம் நீட்டாவிட்டாலும்கூட, காலம் நீடிப்பதை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீட்டிக்கப்படுகிறது என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** நன்றி. அதற்காக பள்ளிகளிலே வெறும் ஆசிரியர்களுடைய குரலை மட்டும் பிள்ளைகள் கேட்டுக் கொண்டிருந்தால் ஒரு இன்டரஸ்ட்டே — ஆர்வம் இருக்காது. நானே அதிக நேரம் பேசினேன் என்று சொன்னால் நீங்கள் எழுந்து போய்விடுவீர்கள். (சிரிப்பு) ஆகவே, வகுப்பிற்கு ஒரே ஆசிரியர்தான் இருப்பார், அவரேதான் திரும்பத் திரும்ப பாடம் நடத்தி வருவார். அந்த ஆசிரியரைப் பார்த்தாலே குழந்தைகளுக்கு பயம் இருக்கும். அப்படியெல்லாம் குழந்தைகளின் உணர்வுகள் வேறுபடுகிறபோது கல்வித் தரம் குறைகிறது என்ற காரணத்தினால் அதை மாற்ற பல முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அதிலே ஒன்று, கற்றல் சூழ்நிலையை மகிழ்ச்சி உடையதாக ஆக்குதல். அதாவது, குழந்தைகளுக்கு ஒரு கலகலப்பான நிலைமையை உருவாக்கிக் கற்றலில் இனிமை தோன்றப் பாடம் நடத்துவது. அதற்காக ஆடல், பாடல் மூலமாகவே கல்வி கற்பிக்க வேண்டுமென்று ஒரு எண்ணம், எல்லாம் முழு அளவிற்கு வெற்றி பெறுவதில்லை. எனினும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையிலே இருக்கிற குறைபாடு, எந்தத் திட்டமும் முழு அளவிற்கு நடைமுறைப்படுத்தப்படுவதே கிடையாது. நான் மாணவனாக, ஆசிரியராக இருந்த காலத்திலேயிருந்தே, ஒவ்வொரு திட்டமும் நடைமுறைப்படுத்த 9 வருடம், 10 வருடம் ஆகும் என்றால், 3, 4 வருடங்களில் அந்தத் திட்டம் மாறிவிடும். அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தப் போதுமான நிதி கிடைக்காது. போதுமான நிதி மத்திய அரசிலேயிருந்து கிடைக்காத காரணத்தினால் அந்தத் திட்டத்தைக் கைவிட்டு இன்னொரு திட்டம் சொல்வார்கள். ஆனாலும்கூட, இப்போது வந்திருக்கிற இந்தத் திட்டத்தில் ஆசிரியர்கள் மன நிறைவோடு குழந்தைகளுக்குப் பாடம் நடத்துவதற்கான, ஒரு முறையாக அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு அதற்கான மறுபயிற்சியும் வழங்கப்படுகிறது.

இன்னொரு பக்கம், 20,000 தொடக்கப் பள்ளிகளுக்கு வானொலிப் பெட்டிகளுடன் இணைந்த ஒலிப்பதிவுக் கருவி ஏற்கெனவே வழங்கப்பட்டது. மேலும் 6,100 பள்ளிகளுக்கு அந்த ஒலிப்பதிவுக் கருவி இந்த ஆண்டு வழங்கப்படும்.

2.25 கோடி ரூபாய் செலவில் 2,000 ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளுக்கு வருகிற ஆண்டில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் எல்லாம் கடந்த காலத்தில் வழங்கிய வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி மாதிரி ஆகாது. (மேசையைத் தட்டும் ஒலி). இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் முழுவதும் மத்திய அரசு ஏற்றுக்கொள்கிற அந்த நிறுவனங்களிடமிருந்து வாங்கக்கூடிய அளவிற்கு ஒரு முறையான அடிப்படையிலே வாங்கப்படுகின்றன. இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் மத்திய அரசினுடைய நிதியிலிருந்து நடுநிலைப் பள்ளிகளுக்கு வழங்கப்படும்.

பல ஆண்டுகளாக தலைமை ஆசிரியர்கள் இல்லாத 494 நடுநிலைப் பள்ளிகளுக்கு, ஏற்கெனவே தலைமையாசிரியர் பணியிடம் இல்லாமலேயே நடந்துகொண்டிருந்த பள்ளிகளுக்கு அப்பதவி இடம் வழங்கப்படும். ஆனால் இப்போது Head Master என்று தகுதியுள்ள 494 பேருக்கு அந்தப் பணியிடம் ஏற்படுத்தப்பட்டு இந்த ஆண்டு ஜூன், ஜூலையிலே நிரப்பப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுவரையிலே தலைமையாசிரியர் இல்லாத 259 தொடக்கப்பள்ளிகளில்—ஓர் ஆசிரியர், இரண்டு ஆசிரியர்கள் இருந்தால் தலைமையாசிரியர் என்ற ஒரு பணியிடம் அளிப்பதில்லை. இனி இந்த 259 தொடக்கப்பள்ளிகளில் தலைமையாசிரியர் பணியிடம் ஏற்படுத்தப்பட்டு நிரப்பப்படும்.

390 ஓராசிரியர் பள்ளிகள் வருகிற ஆண்டில் ஈராசிரியர் பள்ளிகளாக மாற்றப்படும். அப்படி ஏறத்தாழ 780 பள்ளிகள் இருந்தன. அவற்றில் சிலவற்றிலே மாணவர்கள் எண்ணிக்கையைப் பொறுத்து ஏற்கெனவே இரண்டாவது ஆசிரியர்கள் வழங்கப்பட்டார்கள். இப்போது 30 மாணவர்களுக்கு மேல் இருந்தால் இரண்டாவது ஆசிரியர் அந்த 390 பள்ளிகளுக்கும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



சிறுபான்மை இன மாணவர் முன்னேற்றத்திற்காக சிறுபான்மையினர் அதிகமாக உள்ள கடலூர் மற்றும் இராமநாதபுரம் ஒன்றியங்களில் தொடங்கப்பட்ட புதிய பள்ளிகளுக்கு அதாவது பெரும்பாலும் இஸ்லாமிய சமூகம் அதிகம் இருக்கிற அந்த வட்டாரங்களில் கட்டடம் கட்டவும், பள்ளித் தளவாடங்கள் பெற்றுத் தரவும், மத்திய அரசு நிதியுதவியுடன் வருகிற ஆண்டில் 1.5 கோடி ரூபாய் செலவு செய்யப்படும். நடுநிலைப் பள்ளி மாணவர்கள் அறிவியலை எளிதாகக் கற்றுக்கொள்ளும் வண்ணம், பழைய அறிவியல் பயிற்சி ஊர்திகளைக் கழிவு செய்து, நீக்கிவிட்டு 50 இலட்சம் ரூபாய் செலவில் அறிவியல் பயிற்சிக்கான புதிய ஊர்திகள் பெற்றுத் தரப்படும்.

இந்த 4 ஆண்டுகளில் ஏற்கெனவே 364 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்பட்டன. இந்த ஆண்டு மேலும் 50 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏற்கெனவே 296 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. இப்போது மேலும் 50 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் 100 உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் சாதனங்கள் Laboratory Equipments வழங்கப்படும்.

பிற்பகல் 1-35

வருகிற ஆண்டில் 333 சிறப்பு ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். சிறப்பு ஆசிரியர்கள் என்றால் சில துறை ஆசிரியர்கள். அவற்றில் 243 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்கள், 30 இசை ஆசிரியர் பணியிடங்கள், 30 தையல் ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 30 ஓவிய ஆசிரியர் பணியிடங்கள் அடங்கும். இதில் தையல் ஆசிரியர், ஓவிய ஆசிரியர், இசை ஆசிரியர் பணியிடங்களை பெரும்பாலும் மகளிர் பள்ளிக்கூடங்களுக்கு வழங்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அடுத்து, பணி இடைக்காலத்திலேயே ஆசிரியர்கட்குப் பயிற்சி வழங்குகிற முறையில் ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் வள ஆதார மையம் அமைக்க முடிவு செய்து முதற் கட்டமாக 3 மாவட்டங்களில் 1.5 கோடி ரூபாய் செலவில் 30 மையங்கள் வருகிற ஆண்டில் ஏற்படுத்தப்படும். In-service training என்ற முறையில் இடைநிலை ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த 30 மையங்கள் மூலமாக அந்தப் பயிற்சி வழங்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே நடைபெறும் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு, Government Training Schools — இவை D.I.E.T.

பள்ளிகள் அல்ல. — அதற்குத் தேவைப்படும் பல கட்டடங்கள் சரியாக இல்லாத காரணத்தால் 1.5 கோடி ரூபாய் செலவில் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும். 8 மாவட்டங்களில் சென்ற ஆண்டு ஆசிரியர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டன. சென்ற ஆண்டு 4 கோடி ரூபாய் செலவிலே கட்டடங்கள் கட்டும் பணி மத்திய அரசின் ஒப்புதலோடு தொடங்கப்பட்டது. இந்த ஆண்டு மேலும் 4 கோடி ரூபாய் செலவில் அந்தக் கட்டடங்கள் கட்டிமுடிக்கப்படும். ஆசிரியர் பயிற்சிக் கல்வி இயக்குநரகம் தனியாகப் பிரிக்கப்பட்டு, பணியாளர்கள் பணி விதிமுறை தனியாக வகுக்கப்பட்ட பின்பு 157 விரிவுரையாளர்களும், 31 மூத்த விரிவுரையாளர்களும் நியமிக்கப்பட உள்ளனர். அதாவது இப்பொழுது பள்ளிக் கல்வித் துறையும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளினுடைய ஆசிரியர்களுடைய துறையும் — இரண்டும் இணைக்கப்பட்டு இருந்தால் பதவி உயர்வுக்காக இங்கேயிருந்து அங்கே போவார்கள், அங்கேயிருந்து இங்கே வருவார்கள். ஏனென்றால் பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கு, பயிற்சிதரும் ஆசிரியர்களாக இருப்பவர்களில் நல்ல அனுபவம் உள்ளவர்கள் அங்கேயே நீடிப்பதற்கு வழி செய்ய வேண்டும் என்பதற்காக இரண்டு துறைகளும் பிரிக்கப்பட்டு தனித் தனியாகச் செயல்படுத்துகிற முறையில் புதிதாக 157 விரிவுரையாளர்களும், 31 சீனியர் விரிவுரையாளர்களும் வருகிற ஆண்டில் நேரடி நியமனமாக T.R.B. மூலமாக, ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக நியமிக்கப்படுவார்கள். . உயர்நீதிமன்றத்தால் அனுமதி இரத்து செய்யப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் பற்றி அவர்களுக்காக உச்ச நீதிமன்றத்தில் 4-4-2000 அன்று மறு ஆய்வு கோரி மறு ஆய்வு மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் உச்சநீதிமன்றம் அதற்கு வழக்கு எண் — Number தரவில்லை.

அரசுத் தேர்வுத் துறையிலே இங்கேயே பல மாண்புமிகு உறுப்பினர்கள் அவ்வப்போது சுட்டிக்காட்டியதைப்போல ஒரு ஆண்டு கேள்வித்தாள் திருட்டு போகிற ஒரு நிலைமை ஏற்பட்டது. இன்னொரு முறை விடைத்தாள் எழுதப்படுகிற இடத்திலே விடைத்தாள் மாற்றப்படுகிற ஒரு முயற்சி நடைபெற்றது. இந்த ஆண்டிலேகூட தருமபுரியிலே ஒரு impersonation ஒரு மாணவருக்குப் பதிலாக இன்னொருவன் வந்து தேர்வு எழுதினான் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.





இன்னொன்று சென்னையில் படிக்கிற மாணவன் இராஜபாளையம் வரைக்கும் போய்—யார், என்ன என்கிற விவரம் நான் சொல்லத் தேவையில்லை—இராஜபாளையம் வரைக்கும் போய் அங்கேயிருக்கிற Head Master — தலைமை ஆசிரியர் அறையின் பூட்டை உடைக்கின்ற அளவுக்குப் போய், கண்டுபிடிக்கப்பட்டு அதில் ஈடுபட்ட 4 பேர் கைது செய்யப்பட்டார்கள். யார் என்பது முக்கியம் அல்ல. இந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்காகத் தேர்வுத் துறையிலே வழங்கும் மதிப்பெண் சான்றிதழ்கள் என்பதிலே Certificate-டிலே சில பொய் Certificate வந்திருப்பது பற்றி நேற்றுகூட இங்கே எழுப்பினார்கள். அது ஆயிரத்திற்கு ஐந்தோ, பத்தோ ஆங்காங்கே சில போலி Certificate தயாரித்து வைத்துக்கொண்டு சில பேர் பிழைப்பு நடத்துகிறார்கள். அதன் மூலம் சிலர் வேலை தேடுகிறார்கள். அந்த Certificate-டைப் பார்த்தவுடனே on the face of it அதனுடைய குற்றம் தெரியவில்லை. அதை ஆய்வு செய்துதான் அது போலி என்னும் குற்றத்தைக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. அதனால் தான் எல்லா Certificate-யும் பெற்றுக்கொண்டு—அது உண்மை என்று சொல்லித்தான் அந்த Certificate-ஐக் கொடுக்கிறார்கள். பிறகு அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு ஆணையிட்டாலும்கூட சான்றிதழ் verification-லே, ஒப்பாய்விலே இருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது. அந்த verification-லே 100-க்கு இரண்டோ, மூன்றோ அப்படி குற்றமுடையது என்று கண்டுபிடிக்கப்பட்டால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்த நிலையிலே தேர்வுகள் இயக்குநரகம் இந்தக் காலகட்டத்திலே பல வகையிலே சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. இப்போது இரண்டு தேர்வுகள் நடைபெற்றன. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு, ப்ளஸ் 2 தேர்வு. எந்தக் குறைபாடும் வரவில்லை. திரு. ஞானசேகரன் அவர்கள்கூட அதிகமாகக் குறை சொல்லவில்லை. ஆகவே குறையில்லாத ஒரு துறையாக இருப்பதற்கான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டுக்கொண்டு வருகிறது. அந்த ஒழுங்குபடுத்தப்பட்ட காரியங்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒன்று, மதிப்பெண் சான்றிதழ்களில் வருகிற ஆண்டிலிருந்து தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளும் இடம்பெறும். தமிழ் ஏற்கெனவே இடம்பெறவில்லை. ஆங்கிலத்தில் இருந்தது. இப்போது இரு மொழிகளிலும் சான்றிதழ் அச்சிடப்பெறும். போலிச் சான்றிதழ்கள் வருவதைத் தடுக்க—போலிச் சான்றிதழ்கள் தயாரித்து வருவதால், அப்படித் தயாரிக்க இயலாமல் செய்ய அரசு சான்றிதழ்களில் முப்பரிமாண வில்லை, Holograms பதிக்கப்படும். அதை ஒரு தடவை

பதிப்பிப்பார்களேயானால் பிறகு யாரும் அதை எடுக்க முடியாது. அதுபோல மற்றவர்கள் தயாரிக்கவும் முடியாது. வேறு யாரும் அதேமாதிரி செய்ய முடியாது; செய்தாலும் அரசு Hologram-ல் முப்பரிமாண வில்லையில் என்ன அடையாளம் வைத்திருக்கிறோமோ அதே அடையாளத்தை, அதே பரிமாணத்திலே அவர்களால் பதிக்க முடியாது. ஆகவே, தவறு செய்கிற வாய்ப்பை அடியோடு தடுப்பதற்கு Hologram பயன்படுத்தப்படும். வருகிற ஆண்டிலேயிருந்து — ஒரு தேர்விலே இப்போது நடைமுறையிலே கொண்டு வந்திருக்கிறார்கள். வெறும் எண்கள் 796543 என்பது போன்று—நம்பரைக் கொடுப்பதற்குப் பதிலாக, Bar code முறையைக் கையாளுகிறார்கள்.

பிற்பகல் 1-40

ஒரு Examination-லே இந்த ஆண்டில் Anglo Indian School Examination-ஆக இருக்க வேண்டும். அந்த Bar code-வரி வரிசை முறை இப்போது பயன்படுத்தப்படுகிறது. அதிலே இப்போது சரியாக வந்துவிடுமானால் பின்னர் எல்லா தேர்வுக்கும் Bar code என்றால் வரி வரிசைக் கோடு முறை வரும். நமக்கு அதனுடைய எண் என்ன என்று தெரியாது. அந்த Bar code எண்ணை கம்ப்யூட்டரிலே கொடுத்தால்தான் அந்த எண் எதுவென்று தெரியும். அது, கம்ப்யூட்டர் மூலமாகவே அந்த எண்களை அடிப்படையாக வைத்துப் பதிவு செய்யப்படும். தவறுகள் நடைபெறுவதைத் தடுப்பதற்கு — முன்னேற்பாடாக பட்டயங்கள் ஆய்வு செய்யப்படும். கொடுக்கப்பட்ட பட்டயங்களையெல்லாம்—இப்போது 2,000, 3,000 பேர் செய்யும் விண்ணப்பத்திற்கான அந்தப் பட்டயங்கள் பின்னர் கொண்டுவரப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது. இப்போது, — முன்னேற்பாடாகவே அந்தப் பட்டயங்களை ஆய்வு செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

தேர்வு மையங்களிலே வினாத் ,தாள்கள், மற்றும் விடைத் தாள்களை பாதுகாப்பாக வைப்பதற்காக இந்த ஆண்டு ஆயிரம் இரட்டைப் பூட்டுகளுடன் கூடிய Godrej Almirah போன்ற இரும்புப் பெட்டகங்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

அடுத்து, பாடநூல் கழகத்திலே, ஏற்கெனவே ஜூன் கடைசியிலே பள்ளிக்கூடம் திறக்குமானால், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் வரையிலும் பாடநூல் அச்சிட்டு வழங்கப்பட்ட நிலைமை இருந்தது. இப்போது அப்படியில்லாமல் ஏறத்தாழ மே திங்கள் முடிவதற்குள்ளாகவே



பாடநூல்கள் எல்லா வட்டாரங்களுக்கும் அனுப்பப்பட்டுவிடுகின்றன. அதிலே அதிகம் குறைபாடு இல்லாமல் எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, மாணவர்களுக்கு வெறும் பாடநூல் மட்டும் போதாது. அவர்கள் பயன்படுத்தக்கூடிய அளவில் நல்ல, எளிய முறையில் அவர்கள் பயன்படுத்தக்கூடியதாக அதிக விலை இல்லாமல் ஒரு அகராதி தேவை என்று அறிவுறுத்தப்பட்டு, தமிழ்-ஆங்கில அகராதி ஒன்று பாடநூல் கழகத்தின் மூலமாகக் குறைந்த விலையிலே வெளியிடப்படவிருக்கிறது.

அதேபோல Atlas Geography-யை ஒரு பாடமாகப் படிக்காவிட்டாலும், பொது அறிவிற்கு Atlas ஒரு கட்டாயத் தேவை. அந்த Atlas-ம் எல்லா மாணவர்களுக்கும் கிடைப்பதற்கு வண்ண வரைபடத் தொகுப்பு ஒன்று வெளியிடுவதற்குப் பாடநூல் கழகம் முனைந்திருக்கிறது.

முதல் முறையாக, பள்ளி மாணவர்களின் பொது அறிவும், அறிவியல் அறிவும் மேம்படும்வண்ணம் எளிய அறிவியல் புத்தகங்கள் வெளியிடவும் கருதியுள்ளனர். இப்போது சில பேர் தனித் தனியாக அறிவியல் சம்பந்தமான ஏடுகளை நடத்துகிறார்கள். அப்படி வருகிற ஏடுகளை எல்லா மாணவர்களும் வாங்கிப் படிக்க முடியாது. அதனாலே அறிவியல் விளக்கங்களைத் தானாக விரும்பிப் படிக்கக்கூடிய அளவிற்கு புத்தகங்கள் வெளியிடப்பட வேண்டும் என்று பாடநூல் கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது நிறைவேற்றப்படும்.

வருகிற ஆண்டில் பள்ளிப் படிப்பைத் தொடராமல் இடையில் நின்றோர் மற்றும் சிறார் தொழிலாளர்கள் பயன்பெறும்வண்ணம், மைய அரசு மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் முறைசாராக் கல்வி மையங்கள், 3 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும். இது பள்ளிசாராக் கல்வி என்றும் அழைக்கப்படும். இதில் இடையிடையில் தொய்வு விழுந்துவிடுகிறது. மத்திய அரசு சில கால கட்டத்திலே அதைத் தொடர்ந்து நடத்த அனுமதிப்பதில்லை. போதும் நிறுத்திவிடலாம் என்று தெரிவிப்பார்கள். இப்போது ஒரு வகையிலே ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தால் அதற்கேற்ப முறைசாராக் கல்வித் திட்டம் நடைபெறும்.

நூலகத் துறையிலே பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நடைபெற்றாலும்கூட, குறிப்பாக இந்த ஆண்டு 10 புதிய கிளை நூலகங்கள் தொடங்க நூலகத் துறை முடிவு செய்திருக்கிறது. நான்

அதிகமாக நேரம் எடுத்துக்கொள்ளாமல் தெரிவிக்க வேண்டிய இரண்டொரு கருத்துக்களைத் தெரிவித்து உரையை முடிக்க விரும்புகிறேன்.

குறிப்பாக, உயர் கல்வித் துறையில் ஏற்பட்டிருக்கிற சில மாற்றங்களை ஓரளவிற்கு நான் குறிப்பாக முதலிலேயே எடுத்துச்சொல்லியிருக்கின்றேன். அதிலே ஒன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்தவாறு தமிழ் வளர்ச்சிக்காக, உயர் கல்வியிலே தமிழைப் பயிற்சிமொழியாகப் பயன்படுத்துவதற்காக உயர்தரமான கல்வி அறிவைத் தமிழில் தரும் நூல்கள் பலவற்றை வெளியிட வேண்டும்; தமிழில் அந்நூல்கள் வெளிவர வேண்டும் என்பது. அந்தக் குழுவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தலைவராக இருந்து, கல்வி அமைச்சர் என்ற முறையில் நான் துணைத் தலைவராக இருந்து, டாக்டர் குழந்தைசாமி அவர்கள் செயல் தலைவராக இருந்து அந்தக் குழு செயல்படும் என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது.

பிற்பகல் 1-45

சிறுபான்மை சமுதாயத்தினர் — அவர்கள் நீண்ட நாட்களாகத் தெரிவித்த ஒன்று, உருது அகாடமி தேவை என்பது அவர்கள் இதைப் பல முறை கேட்டார்கள். அதற்காக ஆய்வுகள் நடந்து, ஆந்திர, கர்நாடக மாநிலங்களுக்குச் சென்று, அங்கே எப்படி உருது அகாடமிகள் செயல்படுகின்றன என்று பார்த்து வந்து அந்த அடிப்படையிலே கருத்துக்களைப் பெற்று, முதல்வர் அவர்களோடும் என்னுடனும் உயர் கல்வித் துறைச் செயலாளர் கலந்து பேசி முடிவெடுத்து, அந்த அகாடமி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த அகாடமியிலே யார் யார் இடம் பெறுகிறார்கள் என்ற விவரத்தை -- நான் இப்போது அந்த அகாடமியினுடைய General Council என்ற அமைப்பில் இடம் பெறுகிறவர்கள் பெயரை படிக்கிறேன்.

| | | |
|---|---|---|
| அதனுடைய தலைவர் | - | கல்வித் துறை அமைச்சர். |
| துணைத் தலைவர் | - | |
| Vice Chairman | - | Dr. Syed Safiullah, M.A., M.Lit., Ph.D., (Former Professor of Urdu, University of Madras) |



அதனுடைய உறுப்பினர்கள் -

| | | |
|---|---|---|
| Secretary and Registrar | - | Government Nominee |
| Secretary (Finance) | - | On Official capacity |
| Secretary (Higher Education) | - | On Official capacity |
| Secretary (Backward Classes and Most Backward Classes) | - | On Official capacity |

அதிலே இடம்பெறுகின்ற மற்ற உறுப்பினர்கள்—

**Dr. P. Nisar Ahmed, M.A.** (Arabic), M.Phil (Arabic)., Ph.D. (Arabic)

**Professor and Head, Department** of Arabic, Persian and Urdu, University of Madras.

**Dr. Syed Sajjad Hussain, M.A.,** M.Phil., Ph.D., Professor of Urdu, University of Madras.

**Thiru V. Kavish Badri, Poonth**ottam, Ambur.

**Dr. Parveen** Fathima, M.A. (Urdu)., M.Phil (Urdu), Ph.D., Lecturer in Urdu, Queen Mary's College, Chennai.

**Dr.Syed Jalaluddin, M.A.,** Ph.D., Selection Grade Lecturer in Urdu, Islamiah College, Vaniyambadi, Vellore.

**Dr. P. Ahmed Basha, M.A.,** B.Ed., Ph.D., Reader in Urdu, Jamal Mohamed College, Trichy.

**Thiru. Zafarul Hug, Shakir,** Principal, Jamiah Darussalam Arabic College, Omerabad, Vellore District.

**Moulvi Basheerul Hug,** Latheefia Arabic College, Vellore.

**Mrs. Saba Mustafa, M.A.** (Urdu), Amir Mahal, Royapettah, Chennai.

**Thiru Abdul Rasheed, Secretary,** Urdu Majlis, Pookara Street, Thanjavur.

**Thiru Harbhajan Singh,** B.Sc., 49, Dhanalakshmi Ammal Avenue, K.B. Nagar, Adyar, Chennai.

Thiru Syed Fazlullah, B.A., Editor, The Musalman, 324, Triplicane High Road, Chennai.

அது தவிர வேறும் மூன்று உறுப்பினர்கள் to be nominated by Governing Council. அந்தக் குழு தாங்களே நியமித்துக்கொள்ளக் கூடியவர்களாக உள்ள மூன்று உறுப்பினர்களுக்கான இடமும் அனுமதிக்கப்பட்டு, உருது அகாடமி அரசால் அறிவிக்கப்பட்டவாறு நடைமுறைக்கு வரவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கல்லூரி ஆசிரியர்களுக்கும், பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும், பொறியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கும், U.G.C. அறிவித்த அந்தத் திட்டப்படியும், A.I.C.T.E. அறிவித்த அந்தத் திட்டப்படியும் அவர்களுக்கான ஊதியம் கொடுக்க அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், A.I.C.T.E. மூலமாக அறிவிக்கப்பட்ட அந்த ஊதிய விகிதப்படியான ஊதியத்திற்கு மத்திய அரசிடத்திலே A.I.C.T.E. எடுத்துக்கூறி உரிய கால கட்டத்தில் அந்த நிதியை ஒதுக்கி வைப்பதற்குத் தவறியிருக்கிறது. அது குற்றச்சாட்டாக அல்ல, எப்படியோ அங்கே விடுபட்டதாக அறிகிறோம். ஆனால், விரைவில் மத்திய அரசு மூலமாக அகில இந்திய தொழில் நுணுக்க கவுன்சில் ஆலோசனையை ஏற்று, அந்த நிதி ஒதுக்கப்பட்ட அறிவிப்பு தமிழக அரசுக்குக் கிடைக்கின்றபோது, உடனடியாக பொறியியல் கல்லூரி பேராசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடைக்காலத்திலே வழங்கப்படாமல் விடுபட்டிருக்கிற அந்தத் தொகை வழங்கப்படும் என்ற உறுதியை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

குறிப்பாக தொடர்ந்து கல்வி மேம்பாட்டுக்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும். சமுதாய நலனைக் குறிக்கோளாகக் கொண்டு நாம் செயல்படுவோம். அதற்கு உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பும் தேவை என்று கேட்டு, வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாமல், இந்த மானியத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று வேண்டிக்கொண்டு, என்னுடைய இந்தப் பதிலுரையை இந்த அளவோடு நிறைவு செய்கிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கில போதனா மொழியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அரசு குறிப்பிடுகின்ற சம்பளத்தை அந்த ஆசிரியர்களுக்கும் கொடுத்தால்தான் இனி வருங்காலங்களில் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்ற ஒரு நிலையை அரசு கடைப்பிடிக்குமா என்று தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி புரியாத காரணத்தால் விடையளிக்க இயலாது.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார், சுய நிதியில் ஆரம்பித்து நடத்துகிற ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை ஆங்கில போதனா மொழிப் பள்ளிகளில் ஆசிரியர்கள் பணியாற்றும்போது அவர்களைக் கொத்தடிமைகள்போல 500 ரூபாய்க்கும், 1000 ரூபாய்க்கும் வேலை வாங்குகின்ற நிலையை மாற்றி அரசு ஆங்கில வழி போதனா கல்விக் கூடங்களை ஆரம்பிப்பதற்கு அனுமதி கொடுக்கும்போது, ஆசிரியர்களுக்கு அரசு கொடுக்கின்ற ஊதியத்தை வழங்க வேண்டுமென்று ஆணையிடுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவான பல விதிகள் இருக்கின்றன. விதிமுறைகளைப் பின்பற்றாத நிலையில் தலைவிதியைத்தான் எண்ணிக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 17 — கல்வி, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. மணிவர்மா, இருக்கையில் இல்லை.

திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி. அய்யலுசாமி.

**திரு. வி. அய்யலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. அய்யலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் **அனுமதியுடன்** திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் **அனுமதியுடன்** திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் **அனுமதியுடன்** திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. கோவிந்தன், இருக்கையில் இல்லை. திரு. ப. **கோவிந்தன்** அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் **அனுமதியுடன்** திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் **கோரிக்கையின்கீழ்** ரூ. 4648,95,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு **வழங்கப்பெற** வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் **அவர்களின்** தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



## 7. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் தீர்மானம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 12-4-2000 அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (12-4-2000) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12-4-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-53 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

223303



## 8. பேரவையில் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

— ஏதுமில்லை —

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

66. மானியக் கோரிக்கை எண் 17 — இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டுத் துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ் ஆங்கிலம்)

67. மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் பற்றிய கையேடு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

68. சென்னைப் பல்கலைக்கழகம் பற்றிய தகவல் குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

69. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தகவல் சிற்றேடு. (தமிழ், ஆங்கிலம்)

70. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் என்ற தகவல் குறிப்பு. (ஆங்கிலம்).

71. அண்ணா பல்கலைக்கழகம் பற்றிய தகவல் அறிக்கை, 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

72. அழகப்பா பல்கலைக்கழகம் பற்றிய தகவல் தொகுப்பு. (தமிழ், ஆங்கிலம்)

73. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் தகவல் தொகுப்பு. (தமிழ், ஆங்கிலம்)

74. பெரியார் பல்கலைக்கழகத்தின் தகவல் கையேடு. (தமிழ், ஆங்கிலம்)

75. பாரதியார் பல்கலைக்கழகம் தகவல் சிற்றேடு. (தமிழ், ஆங்கிலம்)

76. அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் மற்றும் உயர்கல்வி நிறுவனம்—நிகர்நிலைப் பல்கலைக்கழகம் பற்றிய தகவல் குறிப்பேடு, 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

77. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் பற்றிய அறிமுகம். (தமிழ், ஆங்கிலம்)

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.